39
58

# தத்துவக் காப்பு

அருட்கவி

டாக்டர் அரங்க சீனிவாசன். டி.லிட்.



# தத்துவக் காப்பு

கவிக்கடல், கவித்தென்றல், கவிதைச் செம்மல்,
கம்பன் வழிக் கவிஞர், அருட்கவி,
**டாக்டர் அரங்க சீனிவாசன்** டி. லிட்.,

**அன்னை நாகம்மை பதிப்பகம்**
2/141 கந்தசாமி நகர், பாலவாக்கம்
சென்னை-600 041

முதற்பதிப்பு : நவம்பர், 1992

© அரங்க சீனிவாசன்

**விலை ரூ. 25-00**

---

அச்சிட்டோர் :
கவின்கலை அச்சகம்,
கந்தசாமிநகர், பாலவாக்கம்,
சென்னை-600 041.
தொலைபேசி : 41 71 41

THIS BOOK IS

PUBLISHED WITH THE FINANCIAL ASSISTANCE OF

TIRUMALA TIRUPATI DEVASTHANAMS

UNDER THEIR SCHEME

"AID TO PUBLISH RELIGIOUS BOOKS".

# அணிந்துரை

மனித தெய்வம் காந்தி காதை.

இது அருட்கவி அரங்க சீனிவாசன் படைத்த பெருங் காவியம்.

பாரதநாட்டு உரிமைப் போராட்டத்தின் மாபெருந் தலைவர் காந்தியடிகள். அது மட்டுமல்ல அவருடைய சிறப்பு.

ஓர் அரசியல்வாதி தூய பண்பாடுடையவராக—மாற் றாரும் போற்றக் கூடிய குணநலன் கொண்டவராக—தொண் டர்களும் குடிமக்களும் பின்பற்றத் தக்க நெறி சார்ந்த மாமனிதராகத் திகழ வேண்டும் என்பது காந்தியடிகளின் கொள்கை. அந்தக் கொள்கைக்கு—அந்த இலட்சியத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாகத் தம் வாழ்க்கையை அமைத்துக் காட்டியவர் காந்தியடிகள்.

அதனாலேயே, அருட்கவி அவர்கள் மகாத்மாகாந்தி காதை என்றோ, காந்தியடிகள் காதை யென்றோ, குறிப் பிடாமல் தம் காவியத்துக்கு 'மனித தெய்வம் காந்தி காதை' என்று பெயர் சூட்டினார்.

காந்தியடிகளைத் தெய்வமாக மதித்து அவர் காட்டும் நெறியையே தம் கொள்கையாகக் கடைப்பிடித்துச் செம்மை யான வாழ்வு வாழ்வதே ஒவ்வொருக்கும் குறிக்கோளாக இருக்க வேண்டும் என்பதே காந்தி காதை காட்டும் மானுட நெறியாகும்.

காந்தி காதையைக் கவிஞர் பல படலங்களாகப் பிரித்துக் கொண்டுள்ளார். அடிகளின் வாழ்க்கையில் குறிப்பிடத் தக்க ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒவ்வொரு படலமாகப் பேசப்படு

கிறது. அந்தந்தப் படலம் தொடருமுன் ஒரு காப்புச் செய்யுளைப் பாடுவதைக் கவிஞர் மரபாகக் கொண்டுள்ளார்.

பாடு பொருளான காப்பியத் தலைவனைக் காக்குமாறு பாடுவதும், நூல் இனிது நிறை வெய்தத் துணை நிற்குமாறு இறைவனைப் பணிந்து வணங்குவதும் காவிய நூல்களில் காப்புச் செய்யுளின் இலக்கணமாக அமைந்துள்ளன.

எல்லாவற்றுக்கும் மேலாகக் காந்தி காதையிலே அமைந் துள்ள ஒவ்வொரு காப்புச் செய்யுளும், ஒவ்வொரு தத்துவத்தை எடுத்துக் கூறும் கருத்துக் களஞ்சியமாகத் திகழ் கிறது.

ஒவ்வொரு காப்புச் செய்யுளும் எப்படி யெப்படிச் சிறப்புப் பொருந்தியதாக விளங்குகிறது என்பதை, நூலை இயற்றிய புலவரே எடுத்துக் காட்டுவது காவியத்தைக் கற்கப் புகுவார்க்கும் ஆராயத் தொடங்குவார்க்கும், உட் பொருளை—உள்ளார்ந்த தத்துவத்தை—உள்ளடங்கிய நயத்தை உள்ளது உள்ளவாறு துய்ப்பதற்கு மிக எளிதான ஒரு வழிகாட்டியாகத் திகழ்கிறதென்றே கூறலாம்.

அருட்கவி அரங்க சீனிவாசன் அவர்கள் காந்தி காதையைப் படைத்தது ஒரு பெருஞ்செயல் என்றால், இத்தத்துவக் காப்பு விளக்கத்தை எழுதியது அதனின் மிக்க அருஞ்செயலாகும்!

பூக்கள் தோறும் சென்று ஈக்கள் உறிஞ்சிச் சேர்க்க வேண் டிய தேனை, அந்தப் பூம் பொழிலே ஒரு சேரத் திரட்டிக் கொடுத்து இன்பம்துய்க்குமாறு எளிதாக்கித் தரும் செயல் ஒத்தது இது!

கம்பனுக்குப் பின் வந்த இந்தக் காவியப் புலவரின் இந்த அருஞ்செயலை, இலக்கியத் தேனீக்கள் எத்தனை பாராட்டி னாலும் ஈடாகாது.

**நாரா நாச்சியப்பன்**

# பொருளடக்கம்


அணிந்துரை 5

அருட்கவி அரங்க சீனிவாசன் வாழ்க்கைக்குறிப்பு 9

நூலின் கருத்துச் சுருக்கம் 17

முன்னுரை 20

1 அருட்பழம் 23

2 கற்றென் பயன் 28

3 இன்னல்காள் என்செய்தீர்! 31

4 சொல், இல், வில் 34

5 பொருள் எனப் புரந்தாய் 36

6 மடி மாங்காய் 38

7 வாய்க்கெது வேண்டும் 41

8 ஆகம் என்ற நாடு 43

9 வினைப் பயனாய் விலக்குண்டேன் 46

10 நினது செய்கை வியப்பன்றோ 48

11 நின்னையல்லால் அரண் யாவர்? 51

12 நெஞ்சகம் நீசேர் ஆலயம் 53

13 எழுதும் என்னும் இது மிகை 55

14 இணை என்று யாரை இயம்புவேன் 57

15 திருவுருத் தீட்டல் வேண்டேன் 58

16 நெஞ்சம் எனும் மீன் 60

17 ஆற்றல் அருள வேண்டும் 62

18 உன்புகழ் குறைந்திடுமோ! 64

19 தவளையின் கால் பிடித்தேன் 67

20 துன்பங்கள் பொறுத்திடுவேன் 73

21 புனிதம் ஆகாதோ 75

22 கடைக்கண் நோக்கம் எளிதாகும் 77

23 அழகோவியம் தீட்டுகின்றேன் 80
24 அறியாமையும் நின்கொடையாம் 83
25 கவிஎனும் தாளம் தோன்றும் 87
26 என் பாட்டுள் நின்றாய் 89
27 மறுப்பிறவி ஆகாமல் வரம்தா 91
28 நமன்நாண நல்லருள் தருவாய் 92
29 இன்னொளி 94
30 ஒரு விரதம் தாராய் 97
31 சன்ம நோய்க்கு மருந்து 102
32 கருணை வெள்ளம் 105
33 இறைவனை எய்தற்கு இயைவது 109
34 வைய வல்லார்க்கு நலம் செய்ம்மின் 112
35 விழி குலவிய அன்பு வெள்ளம் 114
36 நாவுக்குப் பெருமை நாரணா 117
37 ஞானப் பசுந்தோல் 120
38 பிறவி நஞ்சுக்கு அமுது 121
39 நம்பினால் தொடரவற்றோ 123
40 ஆன்ம ஞானவாள் 125
41 நா அசைக்கும்பேறு 130
42 இன்பம் விளைப்பது 135
43 கதிநீ கொடுப்பின் தடுப்பார் யார் 139
44 யான் எனது என்னும் செருக்கு 141
45 என்னினும் யார் கள்வர்? 143
46 மறுக்காமல் வரம் அருள் 145
47 பயன்கொள்ளாதது ஏன்? 147
48 கன்றுருவாகிலென் 151
49 சரமச் சுலோக விசேட நெறி 155
50 என் உருவம் வாங்காதது ஏன்? 160
51 யாது நினக்கு அரண்? 163
52 அற்பனேன் சொற்பன் ஆனேன் 165
53 ஞாயமோ? நவிலுவாயே! 167

| | | |
|---|---|---|
| 54 | அருளல்லால் புகல் இல்லேன் | 169 |
| 55 | நட்டம் எனக்கு இல்லை | 171 |
| 56 | சுகவாழ்க்கை ஆங்கொல் | 173 |
| 57 | இசைபாடிப் பரவுதற்கே | 175 |
| 58 | அலர்க்கணே வருபவள் முனிவளோ? | 177 |
| 59 | பேர்! தா! புனல் உரை போதாவே? | 179 |
| 60 | பல்மொழி பரவிய பரம பண்டிதா! | 181 |
| 61 | சிறப்புக்கு ஒரு தலைமை படைப்பர் | 182 |
| 62 | கலியாண வைகுந்தம் | 184 |
| 63 | காகம் குதறுமுன்னே | 186 |
| 64 | ஏகும் வனத்தன் எனை ஆள்வான் | 189 |
| 65 | அரண் உண்டோ ஐயா! | 191 |
| 66 | கல்லா நெஞ்சம் கல்லா? | 193 |
| 67 | தாய் எனக்கு ஆனாய் | 195 |
| 68 | உய்யக் கடவேனோ? | 198 |
| 69 | பூவிற்குப் பாரம் அன்றோ | 200 |
| 70 | திரத்தில் நிற்க அருள் செய்வை | 202 |
| 71 | வாடும் பயிருக்கு மாமழை | 204 |
| 72 | நினைவிலே நீ இருந்தருள்வாய்! | 206 |
| 73 | நான் அது நயத்தல் செய்யேன் | 208 |
| 74 | எம்மான் நெஞ்சுரம் கண்டேன் | 210 |
| 75 | பந்தனை கடந்து உய்யப் பரிவு கூர்வாய்! | 212 |
| 76 | உன் நாமம் சொல்வது பயிலேன் | 214 |
| 77 | இன்னருள் விளைப்பாய் | 216 |
| | பிழைதிருத்தம் | 217 |

# அருட்கவி அரங்க சீனிவாசன் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

அரங்க. சீனிவாசனார் 29-9-1920இல் பர்மிய நாட்டில் பெகு மாவட்டத்திலுள்ள சுவண்டி எனும் ஒரு சிற்றூரில், உழவர் குடியில் பிறந்தவர்.

தந்தையார், திருவாளர் அரங்கசாமி நாயுடு. தாயார் திருமதி மங்கம்மாள்.

திருமதி மங்கம்மாள், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் நிறுவிய இந்திய தேசிய ராணுவத்தின் ஜான்சிராணி பிரிவில் போர் வீராங்கனையாகப் பணியாற்றினார். இவர் கையில் துப்பாக்கி யேந்திப் போர் முனைகளில் வீரத்துடன் போரிட்டது குறிப்பிடத் தக்கது. அவர்களின் 85ஆம் அகவை வரை மாநில அரசின், தியாகிகள் ஓய்வு ஊதியம் பெற்று வந்தார். 1989 மார்ச் மாதம் இயற்கை எய்தினார்.

சீனிவாசனாருக்குப் பத்தாவது அகவையிலேயே இலக்கிய ஆர்வம் அரும்பியது. அந்த அரும்பு. படிப்படியாகக் கவிதை மலர்களாகி மணம் வீசத் தொடங்கியது.

இவரது பதின்மூன்றாம் அகவையில், 'தேசிய கீதம்' என்ற சிறு நூல் வெளி வந்தது.

சுதேச பரிபாலினி, பர்மாநாடு, பால பர்மா, சுதந்தரன் ஊழியன் முதலிய பர்மிய நாட்டுத் தமிழ் இதழ்களில் இவரது படைப்புகள் இடம் பெறலாயின.

கம்பராமயணப் பிரசங்க விற்பனரும் காவடிச் சிந்து பாடிய அண்ணாமலையின் நண்பருமாகிய சங்கரப்பக்

கவிராயரின் மகள் வழிப் பேரனாகிய இவரது இருபது அகவைக்குள் 10 நூல்கள் வரை வெளிவந்தன.

பள்ளிப் படிப்பை முடித்த பின்பு, பழனி பக்கிரிசாமிப் பிள்ளை என்ற பரிபூரணானந்த சுவாமிகளிடம் பல ஆண்டுகள் இலக்கண, இலக்கியங்களைப் பாடம் கேட்டார். திரு பக்கிரி சாமிப்பிள்ளை பழனி மாம்பழக் கவிச்சிங்கநாவலரின் முதன்மை மாணவர்.

அக்காலத்து மிகச் சிறந்த புலமையாளராகவும் வேதாந்த வித்தகராகவும் விளங்கிய சுவாமிகள், தம் பல நூறு மாண வரிடையே, இவர்பால் மிக்க அன்பு பாராட்டிப் புலமையில் முந்தி யிருப்பச் செய்தார்கள்.

1942ஆம் ஆண்டு உலகப் பெரும்போரின் போது, கால் நடைப் பயணமாகவே பாரதநாடு புறப்பட்ட இவர், இடை வழியில் பல இடையூறுகளுக்கும் நோய்களுக்கும் குண்டர்கள் தாக்குதலுக்கும் ஆளாகினமையால், கௌஹாத்தியில் பல மாதங்கள் மருத்துவமனையில் தங்க நேர்ந்தது.

வெறுங்கையுடன் வந்தாலும், தம்மிடமிருந்த புலமைச் செல்வத்தால், பாரதத்திலும் பெருமித வரவேற்பினை முயன்று தேடிக் கொண்டார்.

முதன் முதலாகச் 'சங்கரன் கோவில் நான்மணி மாலை' என்ற நூலைப் படைத்து, சங்கரன் கோயிலிலேயே அரங்கேற் றினார். அதற்குப் பொருளும் பாராட்டும் கிடைத்தன.

பேரறிஞர் தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் இவரது புலமை கண்டு, மாதந்தோறும் அரசு உதவி கிடைப் பதற்கு வழி வகுத்தார்.

தொண்டர்குழாம் ஆறுமுகம்பிள்ளை
தசாவதானம் ஆறுமுகம்பிள்ளை
பாலகவி வயினாகரம் இராமநாதன் செட்டியார் முதலியோர் இவர் கவிதைகளைச் சுவைத்துப் பாராட்டி எழுதியவர்களில் குறிப்பிடத்தக்கவர் ஆவர்.

கல்கத்தா ப்ாரதி தமிழ்ச் சங்க உறுப்பினராகவும் கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்க நிறுவனராகவும் இருந்து சிறப்புற்றார்.

கல்கத்தா பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பட்டப்படிப்பு மாணவர்களுக்குப் பாடம் நடத்தி வந்தார்.

கல்கத்தாவிலிருந்து வெளிவந்த 'ஜோதி' மாத இதழிலும் திருச்சி 'தொழிலரசு' இதழிலும் உதவியாசிரியராகப் பணி யாற்றினார்.

காந்திகாதை என்ற பெருகாப்பியம் படைத்துப் பாரதீய வித்யா பவன் நிறுவிய இராஜாஜி நினைவு முதற்பரிசும் தமிழக அரசின் சிறப்புப் பரிசும் பெற்றார்.

கோவை இராமகிருஷ்ணா வித்யாலயாவின் சார்பாகப் பெருந்திருவாளர் தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள். காந்தி காதைக்குப் பரிசும் பாராட்டும் வழங்கினார்.

காவடிச் சிந்தும் கவிஞன் வரலாறும் என்ற வரலாற்று ஆய்வு நூல், தமிழக அரசின் முதல் பரிசு பெற்றது.

இதுகாறும் எழுதி வெளி வந்துள்ள சுமார் நாற்பது நூல்களுள்,

வங்கத்துப்பரணி
வழிகாட்டும் வான்சுடர்
தியாக தீபம்
காவடிச் சிந்தும் கவிஞன் வரலாறும்
சுதந்திரப் போரின் எழுச்சிக் களம்
காந்திகாதை
எழுத்துலக நாயகி
கடவுள் வரலாறு
அகமும் புறமும்

தமிழ் நூல்களில் தேசியம்
தாகூர் அஞ்சலி
காதல் அருவி

முதலிய நூல்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. அவற்றுட் சில பரிசுகள் பெற்றவை.

இவர் தம் இலக்கியப் பணியைப் பாராட்டி, அகில இந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கம், அருட்கவி என்ற விருது வழங்கிப் பாராட்டியது.

உயர்திரு. ம. பொ. சி. அவர்கள் தலைமையில் இயங்கும் நாமக்கல் கவிஞர் நினைவுக் குழுவினர், இவருக்குப் பாராட்டுக் கேடயமும் கவித்தென்றல் என்ற விருதும் வழங்கினர்.

பொள்ளாச்சி அருட்செல்வர் நா. மகாலிங்கம் அவர்கள் விழாவெடுத்துப் பெரும் பொருள் பரிசும் கேடயமும் சால்வை யும் அளித்துப் பாராட்டினார்கள்.

சென்னைத் தமிழ் வளர்ச்சி மன்றம் கவிதைச் செம்மல் என்ற விருதினை அளித்தது.

இவர்தம் 'காந்தி காதை'யைத் திருச்சி திருக்குறள் கழகத் தார், பலமுறை புலமைச் செல்வர் பலரைக் கொண்டு தொடர் சொற்பொழிவுகள் நடத்தி வருகின்றனர். பட்டி மன்றம், வழக்காடு மன்றம், கருத்தரங்கங்களும் நடத்திக் காந்தி காதையின் சிறப்பைப் பரப்பி வருகின்றனர்.

சென்னை இராமலிங்கர் பணிமன்றத்தினர் எடுக்கும் 'வள்ளலார் மகாத்மா விழாவில்' ஆண்டுதோறும் தொடர் சொற்பொழிவாகக் 'காந்தி காதை'யை இடம் பெறச் செய்து வருகின்றனர். சிலம்பொலி செல்லப்பனாரின் வாக்கு வன்மை யால் காந்தி காதைக்குப் பேரும் புகழும் சேர்ந்து வருகின்றது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அஞ்சல் வழிப் பட்டப் படிப்புக்கும் பாரதிதாசன் பல்கலைக் கழகப் பட்டப் படிப்புக்கும் சில தன்னாட்சிக் கல்லூரிகள் பட்டப் படிப்புக்கும் 'காந்தி காதை'யைப் பாடமாக வைத்துள்ளன.

'வங்கத்துப்பரணி'யும் பட்டப் படிப்பின் பாடமாக இடம் பெற்றுள்ளது.

ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்கள் நிறுவிய தமிழ் சமஸ்கிருத ஆராய்ச்சி நிறுவனத்தில் ஆராய்ச்சி முனைவராகப் பணியாற்றிய அரங்க. சீனிவாசனார், குமாரராஜா முத்தைய செட்டியார் நினைவுமலர், ராணிமெய்யம்மை ஆச்சி நினைவு மலர், மதுரைத் தமிழிசைச் சங்கத் தொடக்க விழா மலர் முதலிய பத்துக்கும் மேற்பட்ட மலர்களுக்குப் பதிப்பாசிரியராக இருந்துள்ளார்.

மேலும் பதிப்பாசிரியராகவும் உரையாசிரியராகவும் இருந்து, பல நூல்களைப் பதிப்பித்தும் உரை எழுதியும் உள்ளார்.

அரசு தொல்பொருள் இலாகாவின் மூலம் 'வானர வீர மதுரைப் புராணம்' என்ற நூல் திருந்திய பதிப்பாக வெளி வந்துள்ளது.

'தினமணி' ஆசிரியர் திரு. ஏ. என். சிவராமன் அவர்கள் சைனாநாட்டுப் பயணம் மேற்கொண்ட போது, தினமணியில் அவர் எழுதி வந்த கட்டுரைப் பகுதியில், இவரைத் தொடர்ந்து எழுதி வரும்படி பணித்துச் சென்றார்கள். அதன்படி நான்கு மாதங்கள் தொடர்ந்து கட்டுரைகள் தினமணியில் எழுதி வந்தார். அக்கட்டுரைகள் பின்னர் வானதி பதிப்பகம் மூலம் நூல் உருவம் பெற்றது.

'தினமணியில் பல்லாண்டுக் காலமாக மதிப்புரைப் பகுதியில் பல நூறு நூல்களுக்கு மதிப்புரைகள் எழுதியுள்ளார்; எழுதி வருகின்றார்.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவை நடத்திய ஆய்வரங்குகள் சில வற்றில் இவர் தலைமை தாங்கியுள்ளார்.

சென்னை இரத்தினவேல் சுப்பிரமணியம் செந்தமிழ்க் கல்லூரியில் சிறப்புப் பேராசிரியராகப் பல்லாண்டுகளாகப் பணியாற்றி வருகின்றார். சென்னைத்தமிழ் வளர்ச்சி மன்றத் தின் அவைக்க விஞராக விளங்கும் பெருமை இவருக்கு உண்டு.

பேரருளாளர் தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர் களால் நிறுவப்பட்டு, தமிழ்க் கலைக் களஞ்சியம் வெளியிட்ட 'தமிழ் வளர்ர்ச்சிக் கழக'த்தின் பொதுக்குழு உறுப்பினராகப் பணியாற்றி வருகின்றார்.

இலக்கியப் பாடங்கள் நடத்திப் பற்பலரைப் புலவர் களாக்கிய திரு. அரங்க சீனிவாசன், எழுபத்துநான்கு அகவை எட்டிய நிலையிலும் சோராமல் இலக்கியப் பணி செய்து புதுப்புது நூல்கள் பல படைத்து வருகின்றார்.

காந்திய நெறியிலும், தேசியத்திலும், தமிழ்மொழியிலும் ஈடுபாடு கொண்ட இவருக்குத் தமிழக அரசு, தமிழறிஞர் என்ற முறையில் மாதந்தோறும் சிறப்பு ஓய்வூதியம் வழங்கி வருகின்றது.

இன்று ஒரு சிற்றூரில் (கோவிலூர், திண்டுக்கல்-624706) அமைதியாக இலக்கிய ஆய்வு செய்து வரும் இவர், பொருட் செல்வராக இல்லையெனினும் புலமைச் செல்வராகப் பெரு மிதத்துடன் வாழ்ந்து வருகின்றார்.

காவடிச் சிந்து புகழ் சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியாரின் கவிதைகள் முழுவதும் இவர் பெரு முயற்சி செய்து தொகுத்து, கடினமான அப்பாடல்களுக்கு நுண்ணிதின் உரை கண்டுள்ளார். அந்நூல் பெரும்பொருட் செலவில் திருக்குறள் பதிப்பகத்தில் (எம்ஜிஆர் நகர் சென்னை-78) வெளியிடப்பட்டுள்ளது.

'கம்பன் கவிதைகளில் அரங்க. சீனிவாசன் கவிதைகளைக் கலந்து விட்டால், பிரித்துக் காண எந்தக் கொம்பனாலும் இயலாது' என்று ஜஸ்டிஸ் மகராஜன் அவர்கள் தமது 'பரிசு பெற்ற பார காவியம்' என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள் ளார். அந்தக் கட்டுரை அவரது இறுதிக் கட்டுரையாகத் 'தினமணி'யில் வெளிவந்தது.

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள், தம் கட்டுரைகளில் இவரின் கவிதைகளை எடுத்து ஆண்டுள் ளார்கள்.

தமிழ்க் கடல் ராய.சொ. அவர்கள் அரங்க. சீனிவாசனின் கவிதைகளை ஆங்காங்கே கூறி, 'இவன்தான் கவிஞன்' என்று பாராட்டி வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

கம்பன் அடிப்பொடி சா. கணேசன் அவர்கள் அரங்க. சீனிவாசனிடம் பேரன்பு கொண்டவர். காந்தி காதை பரிசு பெற்றபோது, கம்பன் விழாவில் மலர்க் குடை நிழலில் இருத்திப் பாராட்டு நடத்தினார்.

கோவைக் கம்பன் கழகத்தாரும் பாராட்டு விழா நடத்திப் பரிசும் பாராட்டும் வழங்கினர்.

'ஆயிரம் கவிஞர் ஆயினும் அரங்க. சீனிவாசன் ஆவரோ!' என்று பாராட்டிக் கம்பன் வழிக் கவிஞர் என்ற விருதும் அளித்தார், வாகீச கலாநிதி கி. வா. ஜ. அவர்கள்.

சமயத் தத்துவங்களில் ஆர்வம் கொண்ட இவர் தத்துவ நூல்கள் சில, எளிய நடையில் எழுதியுள்ளார்.

இவர் எழுதிய மனித தெய்வம் காந்தி காதை சில ஆண்டு களாகத் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்தாரின் பத்தாம் வகுப்பில் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது.

சிலர் எம்.பில். ஆராய்ச்சி செய்து பட்டம் வாங்கி யுள்ளனர். சிலர் பி.எச்டி.க்கு ஆய்வுக்கு எடுத்து முடித் துள்ளனர்.

# தத்துவக் காப்பு

## நூலின் கருத்துச் சுருக்கம்

தமிழ்வேதம் என்று பாராட்டப் பெறுவது திவ்யப் பிரபந்தம். அதனுள் முதன்மையானது திருவாய்மொழி.

அது ஒரு நோக்கில் பார்க்கும்போது, சிறந்த தமிழிலக்கியம் எனலாம். மற்றொரு நோக்கில் அதுவே பக்தி நூலாகும். இன்னொரு நோக்கில் அது இன்னிசை.

ஆயினும் அதனுட்பொருளாகவும் சாரமாகவும் இருப்பது தத்துவமே என்பர்.

தத்துவம் என்பது ஆன்மிகத்துக்கு மட்டும்—துறவுக்கு மட்டும் உரியது அன்று.

வையத்து வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டி, மனிதனை வானுறையும் தெய்வமாக்கும் தத்துவமே திவ்யப் பிரபந்தத்தில் நிரம்பியிருப்பது.

உழைப்பாலேயே உயர்நலம் வரும்.

உடல்வருந்தி உழைத்தல் வேண்டும்.

உடல் வலுவில்லாதவர் ஏதாவது கைத்தொழில் செய்யலாம்.

இல்லை என்று பல்லை இளிப்பது இழிவு.

தகுதியில்லாதவரை முகஸ்துதி செய்தலாகாது.

நாட்டில் பசி, பட்டினி, பகை, வியாதி முதலியன இல்லா வகை பணி செய்தல் வேண்டும்.

இறைவன் எங்கும் எவ்வுயிரிலும் உள்ளான்.

வறுமை—செல்வம், நரகம்—சுவர்க்கம், பகை—நட்பு, நஞ்சு—அமுதம் ஆகிய எதிர் மறைப் பொருள்கள் கூட அவன் வடிவங்களே.

எல்லோர்க்கும் இறைவன் தந்தை. ஆதலால் அனைவரும் உடன்பிறந்தாரே.

இறைவன் உருவமாகவும் அருவமாகவும் உள்ளான்.

ஞானிகள் அருவத்தை வழிபட இயலும்.

சாதாரண மக்களின் மனம் உருவத்தில் தான் ஈடுபட இயலும்.

தெய்வங்களுக்குள்—சமயங்களுக்குள் வேறுபாடு இல்லை.

நான் எனது என்னும் அகங்கார, மமகாரங்களே இழிவுக்கும் இன்னலுக்கும் காரணம்.

உயிர்ப்பலி கூடாது.

என்பன போன்ற மனிதப் பண்புக்கு இன்றியமையாத கருத்துக்களே ஆழ்வார்கள் அருளிச் செயலின் சாரமாகும்.

இக்கருத்துக்களை—பண்புகளை வாழ்வில் கைக் கொண்டால் மனிதனே தெய்வம் ஆகலாம்.

இலக்கணமாய் அமைந்த இப்பண்புகளுக்கு இலக்கியமாக வாழ்ந்து காட்டியவர் எம்மான் காந்தி.

அவர்தம் கொள்கைகளை விளக்க எழுந்த நூல் காந்தி காதை.

கம்பகாவியத்துக்குப் பின் எழுந்த பெருங்காப்பியம் அது. அதனுடைய ஒவ்வொரு படலமும் ஒரு காப்புச் செய்யுளைப் பெற்றுள்ளது.

பெரும்பாலும் காப்புச் செய்யுட்கள் தோத்திரங்களாகவே அமைவதுண்டு.

தோத்திரமாகவும் சாத்திரமாகவும் தத்துவமாகவும் இலக்கியமாகவும் இன்னிசையாகவும் அமைந்த காப்புப் பாடல்கள் காண்பதற்கு அரியன.

காந்தி காதையின் ஒவ்வொரு காப்புப்பாடலும் மேற் கண்ட நயங்களைக் கொண்டிருப்பதோடு, அப்படலத்துக் கூறப்படும் செய்தியோடு தொடர்பு கொண்டதாகவும் நுதலிப்புகுதல் என்னும் உத்திக்கு உரியதாகவும் ஒருமுறை படித்தாலே உள்ளத்தில் நிற்பதாகவும் கூர்ந்து நோக்கினால் பல தத்துவங்களை உள்ளடக்கியதாகவும் பல்வகைச் சந்தங் களுக்கு எடுத்துக் காட்டாகவும் திவ்யப் பிரபந்தத்தின் சாரமாகவும் பண்பாட்டுக் கலசமாகவும் அமைந்து ஓர் அற்புதக்களஞ்சியமாக நம் உள்ளத்து உவகை தூண்டுகின்றது. அந்தக் காப்புப் பாடலுட் பொதிந்துள்ள விந்தைகளை யெல்லாம் சுருக்கமாக-விளக்கமாக-விளக்குவதே இந்நூல்.

ஒரு பாடலைப் படித்தாரும் இதன் அருமையை உணர்ந்து இதன் சுவை தெரிந்து, மனனம் செய்து, தம் வாழ்வில் இணைத்துக் கொள்ள விழைவர் என்பது உறுதி.

# முன்னுரை

வைஷ்ணவ ஜனதோ எனத் தொடங்கும் நரசிம்ம மேதாவின் பாடலுக்கு இலக்கியமாக வாழ்ந்து காட்டியவர் மகாத்மா காந்தியடிகள், திருக்குறளும் கீதையும் அவர் வாழ்வில் பின்னிப் பிணைந்தமையால், அவர் மகாத்மா ஆனார்.

காப்பியத் தலைமை பெறுவதற்குரிய தகுதிகள் பலவும் பெற்றவர் அடிகள். அவர்தம் வரலாறு காவியமாகப் பாடுக. என்று அன்புக் கட்டளையிட்டார் புரவலர் திரு. சுப்பராயலு செட்டியார் அவர்கள். பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணன் ஆற்றுப்படுத்தினார். காவியம் உருவானது. காவியம் உருவாகும் போதே. பலமுறை பெரும் பேராசிரியர் பலர், தொடர் சொற்பொழிவாற்றிச் சிறப்பித்தனர். காவியம் வெளிவந்த பிறகு, ஆண்டுதோறும் பட்டி மண்டபம், வழக்காடு மன்றம், கருத்தரங்கம் எனப் பல வகையாக அரங்கேறும் பெருமை பெற்று வருகின்றது. தென்னாட்டு ஞானபீடப் பரிசு என இந்து நாளிதழ் பாராட்டிய பாரதீய வித்யா பவன் அளித்த இராஜாஜி நினைவுப் பரிசு பெறும் பேறு காப்பியத்துக்குக் கிட்டியது. தமிழக அரசின் பரிசு முதலாக மேலும் பத்துப் பரிசுகளுக்கு மேல் இதுகாறும் பெற்ற பெருமை இக்காப்பியத்துக்கே உண்டு. தமிழக மெங்கும் ஆசிரியர் பெற்ற பாராட்டுரைகளும் பொன்னாடைகளும் எண்ணில. பல்கலைக்கழகங்களில் பட்டப் படிப்புக்குப் பாடமாகும் பெருமையும் இதற்குக் கிட்டியுள்ளது,

தமிழ் வளர்ச்சி இயக்கத்தின் இயக்குநர் சிலம்பொலி செல்லப்பன், பேராசிரியர் அமரர் இரா. இராதாகிருஷ்ணன், இரா. சத்தியசீலன், அ. வ. ராஜகோபாலன், அறிவொளி முதலிய பேரறிஞர்கள் இக்காப்பியம் பற்றிப் பற்பல இடங்களிலும் சொற்பொழிவு செய்து வருகின்றனர்.

கவிஞர் நினைந்தே பாராத பல நயங்கள் கவிதையில் புதைந்திருப்பதை அறிஞர்கள் கண்டு காட்டுவது வியப்புக் குரியதாக உள்ளது.

ஒவ்வொரு படலத்துக்கும் முதலிலே, காப்புக் கடவுளுக்குக் காப்புச் செய்யுள் உண்டு. அச்செய்யுட்கள் அப்படலத்தின் கதைப் போக்குக்கு எத்துணைப் பொருத்த மாக உள்ளன என்று சொற்பொழிவு தோறும் பலரும் சுட்டிக் காட்டுகின்றனர்.

புரவலர் அருட்செல்வர் நா. மகாலிங்கம் அவர்கள் இக்காப்புச் செய்யுட்களின் சுவையில் ஈடுபட்டு படலத்துக்குப் பொருத்தமாவதை எடுத்துக் காட்டி விளக்கம் எழுதித் தனி நூலாக வெளியிட வேண்டும் என்று விரும்பினார்கள். வேறு பல அறிஞர்களும் இவ்வளவு பொருத்தமான காப்புச் செய்யுட் கள் இதுகாறும் எக்காப்பியத்தும் கண்டிலோம். ஆதலால் தனி நூலாக வரும் தகுதி இதற்குண்டு என்று ஊக்கினர்.

அந்தத் தூண்டுகோலே இந்நூல் உருவாகக் காரண மானது.

பாடலுக்குப் பொழிப்புரையோ பதிப்புரையோ கருத்துரையோ இங்குத் தரப்படவில்லை. பாடல்கள் காட்டும் தத்துவச் சிந்தனைகளைக் கட்டுரை வடிவில் விளக்கி விட்டு, பாடலைத் தந்து இறுதியில் அந்தந்தப் படலத்துடன் அப்பாடல் பொருந்துவதனை ஒருவாறு விளக்கப்பட்டுள்ளது.

இது ஒரு புதுமையான உரை விளக்கம். படிப்பவர்க்கு வெறுப்புத் தோன்றாமல், கதை படிப்பது போன்று கவர்ச்சி யாகவும் எளிமையாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும். என்ற நோக்கில் இந்த விளக்கம் உருவாகியுள்ளது.

நூல்கள் தோத்திரங்கள், சாத்திரங்கள் என இருவகைப் படும். இறைவனிடம் பக்தியுடன் மன்றாடுவது தோத் திரங்கள். இறைத் தத்துவக் கருத்துக்களை எடுத்துக் கூறுவது சாத்திரங்கள். பெரும்பாலும் காப்புச் செய்யுட்கள் தோத்திரங் களாகவே இருப்பது இயல்பு. இந்தக் காப்புக்கள் தோத்திரங் களாகத் தோன்றினாலும் சாத்திரங்களாகவும் மிளிர்கின்றன. தோத்திரங்களுக்கு எடுத்துக்காட்டாக இராமாநுச நூற் றந்தாதி, சடகோபர் அந்தாதி முதலியவற்றைக் கூறலாம். சாத்திரங்களுக்கு முமுட்சுப்படி, வசனபூஷணம் முதலிய வற்றைக் காட்டலாம்.

நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழி மேலெழுந்தவாரி யாக நோக்கினால் தோத்திரமாகத் தோன்றும். ஆழ்ந்து நோக்கினால், அதுவே தத்துவப் பேழையாக-சாத்திரமாக விளங்குவதைக் காணலாம்.

நம்மாழ்வாரை அடியொற்றியே இக்காப்புகள் தோத்திரத் தோற்றம் கொண்ட சாத்திரங்களாக மலர்ந்துள்ளமை விளக்கம் கண்டு தெளியலாம்.

இறைவனிடம் இம்மைப் பயனோ மறுமைப் பயனோ வேண்டுவது, எல்லாம் தரும் கற்பகத்திடம் சென்று காஞ்சிரங் காய் கேட்பது போலும் என்பர்.

இறைவனைச் சரணடைவது ஒன்றே நாம் செய்ய வேண்டியது.

சேய்க்கு எது வேண்டும் என்று தாய்தான் அறிவாள். சேய் அறியாது. அதைப்போல் நமக்கு எது வேண்டும் என் பதை அவனே அறிந்து தருவான். நாம் இது வேண்டும் என்று கேட்பது கூடாது. நாம் கேட்டால் நம் சிற்றறிவால் நமக்கு நலமல்லாததைக் கூடக் கேட்டுவிடலாமே!

இங்குத் தரப்பட்டுள்ள பாடல்களில் ஒன்றிலேனும் இறைவனிடம் ஒன்று கேட்பதாக இல்லை. உயிரின் சிறுமதி· உலக நிலையாமை, பக்திச் சிறப்பு. பிரபத்தியின் பெருமை அறத்தின் சிறப்பு முதலியனவே பாடலின் நுட்பப் பொருளாக விளங்கக் காணலாம். இறைவன் திருப்பெயரின் பெருமை, சமநிலையின் சால்பு முதலியனவும் இடம் பெற்றுள்ளன.

இந்நூலை அச்சிடுவதற்குப் பொருளுதவி செய்த திருப்பதி தேவஸ்தானத்தார்க்கு என் நன்றி உரியது.

வைணவ உலகம்-ஆன்மீக உலகம்-பெற்ற ஒரு கருத்துப் பெட்டகம் உருவாக ஊக்குவித்தவர் அனைவர்க்கும் என் தலையலால் கைமாறிலேனே!

**அரங்க. சீனிவாசன்**
கோவிலூர் P. O.
திண்டுக்கல் வழி
624706

# 1. அருட்பழம்

உலகப் பொதுமறை என்னும் உயர்வைப் பெற்றது பகவற் கீதை. அதன் அமுததாரையால், உலகில் ஞானம் தழைத்தது. உள்ளங்கள் பண்பட்டன. அன்புடைமை, அருளுடைமை முதலிய ஆன்மீகக் குணங்களுக்கும் தாயாக விளங்குவது அது. இம்மைக்கும் அம்மைக்கும் வழிகாட்டும் செம்மைப் பெருநூல் கீதை.

கீதையின் சாதனைகள் மிகப் பல. அவற்றுள் தலையாயது, போர்பந்தர் புத்திலிபாவின் மகனை மகாத்துமா ஆக்கியது எனலாம். ஆம்! கீதையை வழிகாட்டியாகக் கொண்டமையால்தான், அண்ணல் உலகுக்கு வழிகாட்டும் உத்தமர் ஆனார்.

கண்ணபிரான் அவதாரம் எடுத்துச் செய்த சாதனைகள் அளவற்றவை. அந்தச் சாதனைகளுக்கெல்லாம் முடிமணி யானது கீதையை நல்கியதே ஆகும்.

அந்தக் கீதை நம் பாரதத்தின் புகழைப் பாரெங்கும் பறைசாற்றியது; சாற்றி வருகின்றது.

கீதையே நம் பண்பாட்டுக்கு வித்து. அந்தவித்திலிருந்தே மகாத்மா என்ற மாமரம் தோன்றியது. அந்த மாமரத்தில் வாய்மை முதலிய பல கிளைகள் பணைத்து விரிந்தன. மரம் வளர்ப்பது பழத்துக்காகத் தானே! அந்த மாமரம் பழம் பழுத்தது. அந்தப் பழத்துக்கு அருள் என்று பெயர். பழத்தின் பயன் என்ன? பசித்தவர் புசிப்பது தானே! உலக மக்கள் அனைவரும் பேதமின்றிக் கூடி உண்டு அனுபவிப்பதற்கே அந்தப் பழம் பழுத்தது.

பழம் புசித்தனைர், அந்தப் பழம் தந்த மரத்தை நினைப்பான். அந்த மரத்துக்குக் காரணமான விதை உடனே நினைவுக்கு வாராது, ஏனெனில், விதை கண்ணில் படுவதில்லையே! ஆயினும் விதை தானே காரணம். மரம் காரியந்தானே! காரணமான விதையிருந்தால், காரியமாகிய மரம், தானே வந்து விடுமா? மண் இருந்தால், குடம் வந்து விடுமா? அந்தக் குடம் செய்ய ஒருவன் வேண்டுமே! அதைப் போல அந்த விதை மரமாக, அதை நடுவதற்கு ஒருவன் வேண்டுமே' அந்த ஒருவன் செய்த உதவியால் தானே பழம் கிடைத்தது!

பழம் உண்பவன், மரத்தைக் காட்டிலும் விதையைக் காட்டிலும் விதை நட்டவனை நினைப்பதே நன்றிக்குச் சிறப்பு.

இங்குக் கீதை என்ற விதையை நட்டவன் கண்ணபிரானே! மோகன மாமரத்தின் அருட்பழம் புசிக்கும் நாம் அதற்கு விதை நட்ட கண்ணனை நினைக்க வேண்டு மல்லவா! அவனுக்கு நன்றி (காப்பு) சொல்ல வேண்டும் அல்லவா?

கீதை விதையில் முளைத்த மாமரம், மற்ற மரங்களைப் போல், முருடாக அழகில்லாமல் வளரவில்லை, கண்டவர் உள்ளம் கவரும் கவினுடன் வளர்ந்தது. ஆகையால் அந்த மரத்தை மோகன மா வடிவம் என்று பாராட்டலாம். மோகன மா வடிவம் என்பது, மோகனதாசராகிய பெரிய வடிவம் என்று இன்னொரு பொருளும் தருகின்றது அன்றோ! இவ்வாறு இருபொருள் படும் தொடரைச் சிலேடை அணி என்பர்.

ஒருவரைப் பாராட்டும்போது, பொருத்தமான அடைமொழி சேர்த்து அவர் பெயரைக் கூறுவது தானே முறை, காந்தியடிகளிடம் சிறப்பாக அமைந்த இயல்பு, புன்சிரிப்பு என்பதை உலகம் அறியும். ஆகையால், அந்தப் புன்சிரிப்பை

அடைமொழியாக்குவது தானே பொருத்தம்! புன்சிரிப்புத் தான்சாதாரணமானதா? அதற்கும் ஓர் அடைமொழி கொடுக் கலாமா! "முத்தான மணிமுறுவல் மோகன மா வடிவம்" என்ற அழகான தொடரை அடிகளுக்கு முத்தாரமாகச் சூட்டலாமே!

அந்த மோகன மாமரம் பல கிளைகளைக் கொண்டது. அவை சத்தியம், அகிம்சை, கருணை எனப் பலப் பலவாகும் ஆதலால், வாய்மை முதற்சாகை பல பல பணைத்தன எனலாம்.

உலகில் வாய்மை எனப்படுவனவெல்லாம் வாய்மை அல்ல. பொய்ம்மையும் வாய்மை என்ற பெயரில் பவனி வரக் கூடும். இன்று வாய்மை என்று கருதப்படுபவை, நாளை மாறி விடலாம். அத்தகைய வாய்மைகளினின்றும் இந்த வாய்மை யைப் பிரித்துக் காட்ட வேண்டாவா! ஆம்; சத்தான வாய்மை என்று கூறலாமே! சத்து என்றால் என்றும் மாறாதது என்று பொருள்படும்.

உலகில் பிற மரக்கிளைகள், சூறை முதலிய உற்பாதங் களால் முறிந்து விழலாம். மோகன மாமரக் கிளைகள் அவ்வாறு அழிவன அல்ல. உறுதியானவை; உலப்பில்லவை. ஆதலால், பணைத்த கிளைகள் எனலாம்.

அத்தகைய மோகன மாமரத்தின் பழங்கள் யாருக்கு உரியன? உலகிலுள்ள பிறமரங்களின் பழங்கள் அனைத்தும் அதை நட்டு வளர்த்தவர்க்கே உரியனவாதல் கண்கூடு. பிறர் அதைக் கண்ணெடுத்தும் பார்க்க இயலாது. ஆனால், இந்த மாமரத்தின் பழம், மனித குலத்துக்கெல்லாம் உரியது. பொது வாக மனிதகுலம் என்றால் போதாது. சமயம், சாதி, நாடு, மொழிகளால் வேற்றுமைப்பட்ட மனிதருள் ஏதோ ஒரு பகுதி யினரை மட்டும் உணர்த்தி விடலாமே! ஆதலால் உலக மக்கள் அனைவரையும் தழுவுவதற்காகக் கொத்தான மனித குலம் எனலாம்.

பிற மரங்களில் சிலர் பறித்து உண்டவுடன் பழங்கள் தீர்ந்து போகும். இந்த அருட்பழம் அத்தகையதா? எத்தனை பேர் எத்தனை காலம் உண்டாலும் தீர்ந்து போவதில்லை. ஆதலால், மனிதகுலம் கூட்டுண்ணுமாறு அதாவது ஒருங்கு கூடியிருந்து குளிர்ந்து உண்ணுமாறு பழுத்தது எனலாம்.

எல்லாரும் கூடியுண்பதால் தங்களுக்குள் பங்கிட்டு உண்ண வேண்டி வருமோ! அவ்வாறு பங்கிட வேண்டியதில்லை. அவரவர் தம் பசிக்கு ஏற்றவாறு வேண்டு மட்டும் உண்ணலாம் என்பதையும் கூட்டுண்ணுமாறு என்ற சொல் குறிக்கும். கூட்டுண்ணல் என்பதற்குக் கொள்ளையிட்டு உண்ணுதல் என்பதும் பொருள் ஆகும்.

பிறநூல்களின் மேம்பட்ட தெய்வீக நூல் ஆதலால் வித்தான அருட்கீதை என்று கூறுவது தானே சிறப்பு!

விதை விதைக்கப்படும். அல்லது நடப்படும். விதைத்து விட்டோ, நட்டுவிட்டோ ஒருவர் அமைந்து விடுவாராயின், அந்த விதை மரமாகிப் பயன் தருவது உறுதியல்ல. நட்டவன் அதைப் பாதுகாத்தால்தான் அது முளையாகிச் செடியாகி மரமாகி விரியும். ஆதலால், கண்ணபிரானைக் கீதை விதையை விதைத்தான் என்று அழைப்பதைவிட, விரித்தான் என்பதே தகும் அன்றோ! விதை நட்டு மரமாக விரியும் வரை பாதுகாத்தான் என்பதை விரித்தான் என்ற சொல் குறிக்குமே!

அந்த அருட்பழத்தை நுகர்கின்ற நாம் இவ்வளவு உபகாரம் செய்தவனுக்கு நன்றி செலுத்த வேண்டுமே! எவ்வாறு நன்றி செலுத்துவது! அவனோ இரு விபூதிச் செல்வமும் உடையவன்.

ஒருவனிடம் இல்லாத ஒன்றை அவனுக்குத் தருவதுதானே உபகாரம்-உபசாரம்-ஆகும்!

அவனிடம் இல்லாத பொருள் யாது? அவன் சர்வ சுவாமி. எல்லார்க்கும் தலைவன். மேலொரு பொருளும் இல்லாத

மெய்ப் பொருள். அவன் யாரையும் வணங்க வேண்டியதே இல்லை. ஆகையால் அவனிடம் இல்லாதது வணக்கம் ஒன்று தானே!

அந்த வணக்கத்தைக் காணிக்கையாக்குவதே —வழுத்துவதே—நாம் செய்யும் நன்றிக் கடனாகும்.

மாசற்றார் மனத்துளானை வணங்கி நாம் இருப்பது அல்லால், வேறு உபகாரம் செய்வோம் என்று பேசத்தான் ஆவதுண்டோ?

இது காறும் கூறி வந்த செய்திகள் அனைத்துக்கும் கருவூல மாக ஒரு பாடலைக் காண்போமா!

முத்தான மணிமுறுவல் மோகனமா வடிவாகிச்
சத்தான வாய்மை முதல் சாகைபல பல பணைத்துக்
கொத்தான மனிதகுலம் கூட்டுணுமாறு அருள்பழுக்க
வித்தான அருட்கீதை விரித்தானை வழுத்துவாம்.

இது காந்திகாதையின் முதற் செய்யுள். காந்திகாதையில் அடிகளின் வரலாறு மட்டுமல்ல. அவரது வாய்மை முதலிய பண்புகளும் விரித்துரைக்கப்படுகின்றன. ஆதலால் காவி யத்தில் கூறப்படும் பொருள் இதுதான் என்று நுதலிப்புகு தலாக இப்பாடல் உள்ளது.

---

மோகனம்-அழகு. மா-பெரிய. மா-மாமரம். சத்து-மாறாதது. சாகை-கிளை. பணைத்து-பருத்து வளர்ந்து கொத்து-கூட்டம். கூட்டுண்ணல்-கூடியுண்ணல். வழுத்து வாம்-வணங்குவாம்.

# 2. கற்றென் பயன்

மானிடர் ஆதல் அரிது. மண்டலத்தில் பிறவி பல வகை. எழுபிறப்பு என்பர் வள்ளுவர். எழுவகையிலும் முழுவகை மனிதப் பிறவி. மனிதனாகப் பிறந்துவிட்டால் போதுமா? மனித உருவுடன் பற்பலர் உலாவருகின்றனர். அவர்களின் செயல், விலங்குகளையன்றோ விஞ்சியுள்ளது! அத்தகைய வரை மனிதர் என்று ஒப்புவது எப்படி?

விலங்கியல்பு இல்லாத மனிதராக இருந்தாலும் போதாது. அந்த மனித உடல், கூன்குருடு செவிடு இல்லாமல் அமைதல் வேண்டும்.

"சென்ற இடத்தால் செலவிடாது தீது ஓரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு"

என்றபடி அறிவுடையராய்ப் பிறப்பது அரிதினும் அரிது.

அவ்வாறு அறிவுடையராயினும் அந்த அறிவை மேலும் வளர்ப்பதற்குக் கருவியாகிய கலைகளைக் கற்றவர் ஆதல் அரிது. கலை கற்றவராயினும், பலவிதமான கற்பனைகள் கலந்து, தாம் கற்றவற்றைப் பிறர் விரும்புமாறு பேசுபவர் ஆதல் அரிது. அதனினும் அந்தக் கற்பனைகளுக்கு அமரத்துவம் தரும் கவிஞராவது அரிது. கவிஞரானால் மட்டும் போதுமா? கற்றதனால் ஆய பயன் யாது? இறைவன் திருநாமத்தை முற்றிய அன்புடன் மொழியும் இயல்புடையவர் ஆதல் அன்றோ?

இறைவன் திருநாமம் வாழ்வைச் செம்மைப்படுத்தும்; செழுமையுறுத்தும்; மனத்துக்கு அமைதி தரும்; செயலைச் சீராக்கும்; சிந்தனையை நேராக்கும்; வாக்குக்கு வளம் சேர்க்கும்; குணங்களைத் திருத்தும்; இறையனுபவம் ஆக்கும்.

எவ்வகையிலாயினும் இறைவனுடன் தொடர்பு பெறுவதே பிறவியின் பயன். அப்பயனைக் காட்டிலும் விஞ்சியது உண்டோ! வேறு எப்பயனாலும் உயிருக்கு உய்வில்லை.

துந்துபி என்பவன் ஓர் அசுரன். மலை போன்ற பெரு வடிவினன். அவன் போரில் மாண்டான். அவனது எலும்புக்கூடு சுக்கிரீவன் தங்கியிருந்த மலையில் கிடந்தது. அதனை யாராலும் அசைக்க இயலவில்லை.

சுக்கிரீவன் இராமனுடன் நட்புக்கொண்டபோது, 'இராமன் வாலியைக் கொல்ல வல்லவனா?' என்று தெரிய விரும்பினான். யாராலும் அசைக்க இயலாத துந்துபியின் எலும்பை அசைத்துவிட்டால், வாலியையும் கொல்ல இயலும் என்று கருதினான். தன் கருத்தை இராமனிடம் தெரிவித்தான். இராமன் தன் கால் விரலால் அனாயசமாக எற்றினான். அந்த எலும்பு எங்கோ நெடுந்தூரம் சென்று விழுந்தது.

"அந்த எலும்பு இறைவன் அடி சேரத் தவம் செய்தது. அந்த எலும்புக்குக் கிட்டிய பேறுகூட எனக்குக் கிட்டவில்லையே."

"இறைவா! நீ பெருமாயன். சேராதன சேர்க்கும் அகடித கடனா சாமர்த்தியன். நீ நினைத்தால், அடியேன் தலையில் உன் அடி பதிக்க இயலாதா? என் வினைகள் வலியனவாயினும் உன் செயலைத் தடுக்கும் ஆற்றல் அவற்றுக்கு உண்டா?" என்று இறைவனிடம் வேண்டுவது நம் கடமை.

இந்தக் கருத்து தேன்துளிகளுக்குக் கலயமாக இருப்பது ஒரு பாடல்.

---

துந்துபி எலும்பை இராமன் எற்றவில்லை. இலக்குவனே எற்றினான் என்பர் கம்பர். இராமன் எற்றினான் என்பது வான்மிகம்.

கற்றென்பயன்? பலகற்பனை
கண்டென்பயன்? கவிபாடிடப்
பெற்றென்பயன்? நரனாகவே
பிறந்தென்பயன்? பெருமாயனே!
முற்றன்பினில் உனநாமமே
மொழிகின்றிலென்! ஒருதுந்துபி
வெற்றென்புறு பேறுற்றிலென்!
வேறென்பயன் பெறுகிற்பெனே!

இது நாட்டுப்படலத்தின் காப்பு. இறைவன் அவதாரம் செய்து திருவடி பதிக்கும் பேறு பெற்றது பாரத நாடு. உலகம் அளந்தபோதும் எங்கும் அவன் திருவடி பட்டது. அந்தத் தொடர்பால் இங்குப் பிறந்தவர் யாவருக்கும். பகவத் சம்பந்தம் உண்டு. நமக்குமட்டும் இல்லாமல் போகலாமா என்று இறையன்புக்கு ஏங்கும் இப்பாடல் நாட்டுப்படலத்துக்குப் பொருத்தந்தானே!

---

நரன்—மனிதன். உன—உன்னுடைய. வெற்றென்பு—வெறுமையான எலும்பு. பேறு—பயன்.

# 3. இன்னல்காள் என் செய்தீர்!

ஆன்மா அறிவுமயமானது. அறிவைப் பயன்படுத்தி உண்மைப் பொருளை அறிந்து, நித்தர், முத்தர்போல இறையனுபவம் பெறும் உரிமை, ஆன்மாவுக்கு உண்டு.

ஆனால் அந்த அறிவு, இருவினைப்பயனால் சுருங்கி விரியும் நிலையடைந்துள்ளது. அறிவு விரியும்போது இறை யுணர்வு மேலோங்கும். சுருங்கும்போது மறதி வந்துவிடும்.

அதுதவிர, ஆசைத் தீயும், புலனின்பங்களும் அறிவை மறைத்து, ஆன்மாவைப் பலவிதமாக மயக்கிவிடும் என்று கண்ணன் கீதையில் கூறுகின்றான்.

ஒருவனை வஞ்சிப்பது அவா என்பார் வள்ளுவர்.

அறிவு சுருங்குவதாலும் ஆசைத்தீ மறைப்பதாலும் அவா வஞ்சிப்பதாலும் இன்பமே இயல்பாக உடைய ஆன்மாவுக்குத் துன்பம் உண்டாகின்றது. அவாவானது துன்பத்துள் துன்பம். அவா நீப்பின் அந்நிலையே இன்பத்துள் இன்பம் ஈண்டும்.

இவ்வாறு செயற்கையாக வரும் துன்பம் தீர்வதற்கு அவா அறுக்க வேண்டும், இந்திரியங்களை அடக்க வேண்டும். இதற்கு வழி யாது?

பகவான் கண்ணன், உயிர்களின் துன்பநீக்கத்துக்கு வழி காட்டவே கீதை என்ற அமுத கலசத்தை நல்கியுள்ளான். அமுதத்தில் ஒரு துளி அருந்தினாலும் அழியாமை கிட்டும். அதைப்போல் கீதையில் ஒரு சிறிது கடைப்பிடித்தாலும் துன்பத்துள் துன்பம் கெட்டு, இன்பம் இடையறாது ஈண்டும்.

துன்பங்களுக்கு அவாவே காரணமாயினும் அந்த அவாவுக்கும் அடிப்படைக் காரணம் உண்டு. அதுதான் பிறவி. மரத்துக்குக் காரணம் விதை. விதைக்குக் காரணம் மரம் ஆவதுபோல், அவாவுக்குக் காரணம் பிறவி. பிறவிக்குக் காரணம் அவா என்று மாறிமாறி வரும்.

பிறவியால் வரும் துன்பம் கருதியே, அதனைப் பிறவிப் பெருங்கடல் என்று வள்ளுவர் சுட்டியுள்ளார். அந்தப் பிறவியைக் கடப்பதற்கும் எளிய வழியைக் கீதை போதிக்கின்றது.

''எவனது மனது வேண்டுதல் வேண்டாமையற்ற சம நிலையில் நிறுத்தப்படுகின்றதோ, அவர்கள் இங்கேயே பிறவியை வென்றவர் ஆவர்'' என்பது கீதை,

கல்வியும் அடக்கமும் நிறைந்த பண்டிதனிடத்தும் பசு, யானை, நாய், நாய் தின்னும்புலையன் முதலியன இடத்தும் சமமாக ஒழுகுவதே சமநோக்கு எனப்படும்.

இந்தச் சமநோக்குப் பெற்றவர், 'வந்துபார்!' என்று துன்பத்துக்கு அறைகூவல் விடுக்கும் ஆற்றல் பெறுவர்.

''ஏ! துன்பங்களே! என்னை வந்தடைந்து தவறு செய்து விட்டீர்கள். எங்கோ யாரையோ சேரவேண்டிய நீங்கள் ஆள்மாறி என்னை அடைந்துள்ளீர்கள் போலும்! கரும்பு போல் இனிய உண்மையான மொழிகளையுடைய திருமகள் கேள்வனாகிய கண்ணபிரானானவன் கூறிய கீதையாகிய வாய்மையைக் கற்று, அதுவே வாழும் வழி என்று உறுதி கொண்ட மனமுடைய என்னை நீங்கள் வருத்துவது எங்ஙனம்! உங்கள் முயற்சி வீணேயாகும்'' என்பதே அவன் விடும் அறைகூவலாகும்.

"இன்னல்காள்! எனை எய்தி என் செய்தீர்!
கன்னல் வாய்மொழிக் கமலை கேள்வனார்
சொன்ன வாய்மையைத் துணிந்த நெஞ்சினேன்
என்னை நீர் நலி கின்ற தெங்ஙனே"

மேலே கண்ட கருத்தையெல்லாம் அடக்கிக்கொண்டுள்ள சின்னப் பாடல் இது.

உயிர் தன் இயல்பை மறந்தமையால், துன்பத்தைச் செயற்கையாக வரவழைத்துக் கொள்வதுபோல், பாரதமும் தன் பெருமையை உணராமல் அடிமைப்பட்டது, கீதை தரும் அறிவுச் சுடரால் உயிரின் துன்பம் பறப்பதுபோல், காந்தி என்ற சூரியன் தரும் உரிமைச்சுடரால் அடிமையிருள் பறந்து போகும் என்பதைக் குறிப்பாகச் சுட்டும் இப்பாடல், சூழ் நிலைப் படலத்துக்குக் காப்பாகத் தகுதியுடையதுதானே!

---

இன்னல்காள் — துன்பங்களே. என்செய்தீர்—தவறுசெய்து விட்டீர். கன்னல்—கரும்புபோல்இனிய. கமலை—திருமகள். கேள்வன்—கணவன். துணிந்த—உறுதியாகக் கைக்கொண்ட.

# 4. சொல், இல், வில்

அடிகளின் மரபு, காந்தி என்றும் மோத்தி என்றும் பெயர் பெறும். அம் மரபினர் வணிகர்கள். கொடுப்பதும் குறையக் கொடார். கொள்வதும் மிகக் கொள்ளார். வாய்மையே அவர்களின் காப்பு. இரக்கம் அவர்களின் இயல்பு. வணிகத் தோணியில் வறுமைக் கடல் கடந்து வளமைக் கரை அடைந்த மரபு அது. ஒழுக்கத்தை உயிரினும் ஓம்பிப் பழம் பண் பாட்டினைக் காக்கும் பண்புடையது.

இத்தகைய மரபிலே பிறந்த அடிகளுக்கு, இயல்பாகவே உயரிய பண்புகள் அமைந்ததில் வியப்பு ஏதும் இல்லை.

இராமபிரான் உலகில் அறம் தலை நிறுத்த வந்தவன்; நடையில் நின்று உயர்ந்த நாயகன்; ஒழுக்கத்தில் சிறந்தவன்; உலகத்தோடு ஒட்ட ஒழுகி, உயிர்களுக்கு உற்ற வழிகாட்டிய உத்தமன். அவன் வரலாறும் குணங்களும் அடிகளின் உள்ளத்தைக் கவர்ந்தன. ஆதலால், அவனையே தம் வழிபடு கடவுளாகக் கொண்டார். இராம ராஜ்யம் அமைய வேண்டும் என்பதே அவரது விருப்பம். உடல் பிரியும்போது கூட, 'ஹே ராம்' என்றுதான் அவர் வாயிலிருந்து சொற்கள் வெளிவந்தன.

அந்த இராமனின் பெருமைக்குக் காரணம் மூன்று என்பர். ஒரு வில். ஒரு இல். ஒரு சொல் என்பன அவை.

வில் என்பது சாதனம். அது குறிக்கோளைக் குறிக்கும், அதாவது அறம் காப்பதொன்றே இராமனது குறிக்கோள் என்பதை ஒரு வில் என்பது குறிக்கும்.

இல் என்பது மனைவி. பல மனைவியரைக் கொண்ட தசரதன் மகனாகப் பிறந்தும், ஏகதார விரதம் மேற்கொண்டவன் இராமன் என்பதை ஒரு இல் என்பது குறிக்கும். ஒழுக்கத்தில் உயர்ந்தவன் என்பது திரண்ட கருத்து.

சொல் என்பது வாய்மை; சத்தியம். சான்றோரும் பெற்றோரும் சொன்ன சொல்லைத் தவறாமல் ஏற்பதும் சொன்ன சொல் மாறாமல் செயலில் காட்டுவதும் ஆகிய இரு நிலைகளையும் ஒரு சொல் என்பது சுட்டும்.

இராமபிரானின் இந்த மூன்று இயல்புகளையும் சுட்டி அவனை நினைந்து அஞ்சலி செய்வதாக உள்ளது வழிமுறைப் படலத்தின் காப்பு.

''தரு சொல் ஒன்றலது இல் எனத் தாங்கினான்
பெருவில் ஒன்றலது இல்எனப் பேணினான்
திருஇல் ஒன்றலது இல்எனத் தேறினான்
உருவில் மேகம்ஒப் பான்கழல் உன்னுவாம்.''

மானிடத்துக்கு வேண்டிய இன்றியமையாத பண்புகளை யெல்லாம் ஒருங்கே பெற்ற அடிகளின் வழிமுறையைக் கூறும் படலத்துக்கு, உலகிற்கு உயர் பண்புகளைச் செயலால் விளக்கிய இராமனின் பெருமையைக் கூறும் காப்புப் பொருத்தந்தானே.

---

தருசொல்—சொல்கின்றசொல். திருஇல்—திருமகளாகிய மனைவி. உருவில்—வடிவத்தில். கழல்—திருவடி. உன்னுவாம்—நினைப்போம்.

# 5. பொருள் எனப் புரந்தாய்!

உலகத் துன்பங்களுக்கெல்லாம் காரணம் மருளும் அகந்தையுமே என்பர் சான்றோர். ஒரு பொருளை இன்னொன்றாகக் கருதுவது மருள். அது மயக்கம் என்று சொல்லப்படும்.

தனது உண்மை இயல்பை அறிந்து கொள்ளாமல் ஆன்மாவை மறைப்பது அகந்தை. அகந்தை என்னும் ஆர்ப்பைத் துடைத்தால் ஆன்மாவின் உண்மை இயல்பு வெளிப்படும்.

ஆன்மாவின் உண்மை இயல்புயாது? தான் இறைவனுக்கு அடியான் என்று அறிவதே உண்மை இயல்பு.

இந்த மருளையும் அகந்தையையும் வெட்ட வெட்டத் தளிர்கள் விட்டுப் பரவிவரும் மரத்துக்கு ஒப்பிடலாம். அந்த மரத்தை அடியோடு வெட்டினால்தான், அது மீண்டும் தளிர்க்காது. வெட்டுவதற்கு வாள் வேண்டுமே! அந்த வாள் எது? அருள் என்ற வாளை ஆண்டவனே தருதல் வேண்டும். அந்த வாள் அனைவருக்கும் கிடைத்துவிடுவதில்லை. ஆன்ம ஞானம் என்ற தெளிவு படைத்த மனமுடையாருக்கே அந்த அருள் வாள் கிட்டும். அடியேனோ பொருளல்லாத புல்லியன். அந்த அருள் வாள் பெறுவதற்குரிய தகுதி ஏதும் என்பால் இல்லை. அப்படியிருந்தும் இறைவன் தன் காரணம் பற்றாத கருணையால் என்னையும் புவியில் ஒரு பொருளாக்கி மருள் சுரந்த முன்னைப் பழவினை வேரறுத்து தன்னை வணங்கப் பணித்துள்ளான். அந்தக் கருணைச் செயலுக்கு

ஆருயிர் செய்யும் கைம்மாறு ஒன்று உண்டோ? என்று சித்தத்தைச் சீரிய நெறிப்படுத்தும் இந்தப் பாடல் சுடர் உதயப் படலத்தின் காப்பு.

மருள் அகந்தை மரத்தினை வெட்டவே
தெருள் படைத்த திருமனத்து அன்பருக்கு
அருள் எனும் பெரு வாள் அளிப்பாய்! எனைப்
பொருள் எனப் புரந்தாய்க்கு என் புரிவதே!

பாரதத்தைக் கவித்த அடிமை யிருளைப் போக்க ஆதவனாக அண்ணல் அவதாரம் செய்தார் என்ற செய்தி கூறும் படலத்துக்கு, ஆன்மாவை மூடிய மருளையும் அகந்தை யையும் களைவதற்கு ஆண்டவன் அருள் கை வந்தது எனக் கூறும் இப்பாடல் முடி மணியாக உள்ளது.

# 6. மடிமாங்காய்

இறைவனைப் போலவே உயிர்களும் அனாதி. அதாவது ஒருகாலத்தில் படைக்கப்பட்டவை அல்ல. இறைவனை அடைந்து பேரின்பம் துய்க்க உயிர்களுக்கு முழு உரிமை உண்டு. அந்த உரிமையை மறந்து பிறவிக்கடலில் சுழலும் உயிர்களுக்கு உணர்வூட்டி, தன்பால் இணைத்துக்கொள்ள விரும்புகின்றான் இறைவன்.

உயிர்களுக்கு உடலும் கரணங்களும் தருகின்றான். சுதந்தரமாகிய ஆற்றலும் தருகின்றான். இறைவனை அடைவதற்குரிய நல்வினைகளை மேற்கொள்ளாமல் தீவினை களில் ஈடுபட்டு வெகுதூரம் விலகிச் சென்றுவிடுகின்றன உயிர்கள்.

உயிர்களின் இச்செயல் இறைவனுக்கு உகப்பானது அல்ல. உயிர்களை எவ்வண்ணமாவது ஆட்கொள்ள விரும்புகின்றான்.

சாத்திர விதிகளை வகுத்தவன் இறைவன். உயிர்களை நன்னெறிப்படுத்தவே சாத்திரங்களை நல்கினான். அந்த விதிகளின்படி ஆட்கொள்வதற்கு, ஏதாவது காரணம் வேண்டுமே! நல்வினை என்று கருதக்கூடிய ஏதாவது வேண்டுமே!

உயிர்கள் ஏதாவது ஒரு நற்செயல் செய்தாலும்போதும். தன் கழிபெருங் கருணையால் அந்தச் செயலையே பற்றாசாகக் கொண்டு ஆட்கொண்டுவிடலாம் என்று காத்திருக்கின்றான்.

உயிர்கள் செய்யும் செயல்களில், நல்வினை என்று பொருள் செய்யக்கூடிய ஒரு சிறு செயலாவது இராதா என்று ஆராய்கின்றான் இறைவன்,

தன்பால் வாராமல் எங்கோ வழிதவறிச் செல்கின்ற உயிர்களை, ஏதாவது ஒரு காரணம் காட்டித் தடுத்து நிறுத்திச் சரியான பாதையில் செலுத்த முயல்கின்றான் அவன்.

வழிப்போக்கன் ஒருவன் போய்க்கொண்டுள்ளான். வழியில் ஒரு மாந்தோப்பு உள்ளது. தோப்புக்காரன் எதற்காகவோ வழிப்போக்கனைத் தடுத்து நிறுத்த நினைக்கின்றான். தோப்பிலுள்ள சில மாங்காய்களை மறைத்துக் கொண்டு சென்று, அவன் மடியிலே இட்டு 'மாங்காயைத் திருடினாய்' என்று களவு சுமத்துகின்றான். இது ஒரு பழைய செய்தி. இதனால் வலியப் பழியைச் சுமத்தும் செயலுக்கு 'மடிமாங்காயிடுதல்' என்ற தொடர் உலகவழக்கில் வந்து விட்டது.

'மாங்காய் இடும் கொடுமை' என்று அருட்பிரகாச வள்ளலார் இந்த உலக வழக்கைப் பயன்படுத்தியுள்ளார். 'மடிமாங்காய் இட்டு' என்று ஸ்ரீ வசனபூஷணம் குறிப்பிடுவதும் இதனையே!

இறைவன் உயிர்களைத் தடுத்து நிறுத்தும் செயல் மடிமாங்காய் இடுதல்போல், கொடுமையாகத் தோன்றினாலும், அது உயிர்களின் நன்மையின் பொருட்டே யாகும். அதனால் உயிர்களுக்கு வரும் சோதனைகளும் இறைவனின் அருட்செயலாகவே அமையும்.

இறைவன் இவ்வாறு மடிமாங்காயிடுவதுபோல், மேற் கொள்ளும் செயல்கள் எத்தகையவை!

ஒருவன் வாய் குழறுகின்றது. ஏதோ பொருளற்ற உளறலை வெளியிடுகின்றான். அந்த உளறலில் ஏதோ ஓர் எழுத்தின் ஒருபுடை ஒலி ஒப்புமை கொண்டு இது என் பெயரின் பகுதியல்லவா? ஆதலால் என் திருநாமம்

சொல்லிவிட்டாய்! இதுபோதுமே உன்னை ஆட்கொள்வதற்கு என்று வாதிட்டு, விலகிச் சென்றாலும் விடாது பின் தொடர்ந்து தடுத்து நிறுத்தி, தன் திருவடிகளை அவள் முடியில் சூட்டி வலிய ஆட்கொள்கின்றான் இறைவன்.

இறைவன் அந்தமும் நடுவும் இல்லாத ஆதி. ஆதலால் 'முடிவொடு நடுவும் இல்லா முதல்' என்று அவனைக் கூறலாம். அவனை அரணாகப் பெற்றால் வாழ்வுபெறத் தடைஇல்லை.

'மடியினில் மாங்காய்கட்டி
வலிப்பவர் போல்வே றொன்றை
வடிவறச் சொலினும், 'என்பேர்
வாயினில் புகன்றாய்!' என்றே
அடியிணை முடியில் சூட்டி
வலியவந்து அடிமை கொள்ளும்
முடிவொடு நடுவும் இல்லா
முதலினைப் பெற்று வாழ்வாம்''

என்ற இனிய பாடல் இந்தச் சிந்தனைகளின் தொகுப்பாக உள்ளது. 'முதலினைப் பெற்று' என்பதற்கு 'மூலதனத்தைப் பெற்று' என்றும் உலகியற் பொருளும் கொள்ளலாம். உலகியலில் மூலதனம் (செல்வம்) இருந்தால்தானே வாழ்வு வரும். ஆன்மிக இயலில் முழுமுதற் காரணமாக (முதலாக) உள்ள இறைவனே உலகியலிலும் மூலதனமாக (முதலாக) உள்ளான். ஆக ஆன்மிகமாகட்டும் உலகியலாகட்டும் அவன் (அருள்) இல்லையேல் பயன்படாது என்று தேறுகின்றது.

அறியாப் பருவத்திலே, செல்லும் வழி அறியாமல் எங்கோ செல்ல இருந்த அடிகளைத் தடுத்து நிறுத்திச் சரியான பாதையில் செலுத்துவதற்காக அரிச்சந்திர நாடகம் காணும் வாய்ப்பை இறைவன் ஏற்படுத்திய வரலாறு கூறும் அரிச்சந்திரப் படலத்துக்குப் பொருத்தமான காப்பு இது.

---

வலிப்பவர் - இழுப்பவர். வடிவுஅற - உருவம் தோன்றாமல். முதல் - ஆதி; மூலதனம்.

# 7. வாய்க்கெது வேண்டும்!

ஒரு நோயாளி மருத்துவனிடம் செல்கின்றான். அங்குத் தனக்குள்ள நோயைப் பற்றிச் சொல்கின்றான். அதற்குமேல் அவன் செய்ய வேண்டியது ஏதும் இல்லை.

மருத்துவன் அவனை ஆய்கின்றான். நோய் இன்ன தெனக் காண்கின்றான். நோய்க்குரிய காரணத்தையும் தெளிகின்றான். அது தீர்வதற்கான உபாயத்தைத் தேர் கின்றான். உரிய மருந்து தருகின்றான். இவை அனைத்தும் மருத்துவன் கடமை. மருத்துவன்வழி நின்று மருந்து உண்பது நோயாளன் கடமை.

முதலிலேயே, 'அதோ உள்ள மருந்து கொடு!' என்று மருத்துவனிடம் நோயாளன் ஏதோ ஒன்றைக் கேட்கலாமா? அவன் கேட்பது நஞ்சாகக்கூட இருக்கலாமே!

ஒரு தாய், தன் குழவிக்கு எது நல்லது எது தீயது என்று அறிவாள். எவ்வெப்போது எது எது தேவையோ அதை மட்டுமே அளிப்பாள். அவள் தருவதை ஏற்பது குழவிக்கு நலம் பயக்கும். 'எனக்கு இதுதான் வேண்டும்' என்று அடம் பிடித்துக் கண்டதைக் கேட்டால், உடல் நலம் கெட்டு விடாதா?

ஒருவன் ஒரு நாய் வளர்க்கின்றான். அந்த நாய் அவனிடம் 'எனக்கு இதுதான் வேண்டும்' என்று கேட்ப தில்லை. உரியவனே வேளைக்கு வேளை ஏற்புடைய உணவூட்டிப் புரக்கின்றான். அது, அவன் கடமை.

உயிர்கள் இறைவனுக்கு உடைமைகள்; அடிமைகள். இறைவன் சேதனனுக்கு மருத்துவனும் தாயும் ஒப்பவன்;

தலைவன்; எஜமானன். சேதனனுக்கு எது வேண்டும் என்பதை அவன்தான் நன்கு அறிவான்; வேண்டியது மட்டும் தருவான்.

சேதனன் ஏதும் கேட்க வேண்டுவதில்லை. ஒருகால் அவ்வாறு கேட்டுப்பெறுவது அழிவுக்குக் காரணமாகிவிடலாம்.

இறைவனிடம் எதுவுமே கேட்கலாகாது என்றால், இந்த வாய் எதற்கு உள்ளது? இதை இறைவன் ஏன் கொடுத்தான்?

அவன் புகழைப் பாடிப் பரவுவதற்கே வாய் உள்ளது. அதுவேண்டும், இது வேண்டும் என்று கேட்பதற்காக அல்ல.

சேதனன் தானாகவே ஏதாவது கேட்பது இறைவனிடம் அவனுக்குள்ள நம்பிக்கையைக் காட்டாது.

> ''நோய்க்கெது வேண்டும் என்று
> மருத்துவன் நுனித்துத் தேர்வான்
> சேய்க்கெது வேண்டும் என்று
> தெரிகுவள் அன்னை. இந்த
> நாய்க்கெது வேண்டும் என்று
> நாயன்நீ அறிவாய் ஆகின்,
> வாய்க்கெது வேண்டும் நின்சீர்
> வழுத்துவது அன்றி அப்பால்!''

காந்தியடிகளுக்கு இளமையிலேயே திருமணம் நடந்தது. குழந்தை மணம் கூடாது என்று உலகுக்கு உணர்த்த வந்த மகான் குழந்தை மணம் செய்து கொள்ள நேர்ந்ததே! இறைவன் அவ்வாறு ஏன் கருதினான் என்று ஆய்வு செய்ய நாம் யார்?

இறைவன் செயல்களில் ஏதாவது உட்பொருள் இருக்கும் என்பது உறுதி.

இந்த உறுதியை விளக்கும் கடிமணப் படலத்துக்கு இதை விட ஏற்ற காப்பு இருக்க இயலுமா?

---

நுனித்து - நுணுகி. தேர்வான் - தெளிவான். நாய் - அடிமையாகிய உயிர். நாயன் - தலைவன். வழுத்துவது - பாராட்டுவது.

நின்சீர் வழுத்துவது அன்றி அப்பால் வாய்க்கு எது வேண்டும் என்று கூட்டிப் பொருள்காணல் வேண்டும்.

# 8. ஆகம் என்ற நாடு

ஆகம் என்ற சொல் உடலைக் குறிக்கும். உள்ளத்தையும் குறிக்கும். உள்ளம் என்பது (இறைவன் வாழும்) க்ஷேத்திரம்; இருப்பிடம், அதை ஒரு நாடாக உருவகிக்கலாம். நாடு என்பது உடைமை. உடைமைக்கு உரியவன் ஒருவன் இருப்பான்.

திறமையாளருக்கு உடைமையாயிருப்பின், ஒரு நாடு சீர்திருந்திச் சிறப்புறும். உரியவர் திறமையில்லாதவராயின் பாழ்பட்டுப்போகும்.

ஆதலால், ஒரு நாட்டை ஆள்பவர் அறிவு, ஆற்றல், அருள், அன்பு முதலிய பண்புகள் நிரம்பியவராக இருத்தல் வேண்டும். இத்தகைய பண்புகள் உடையவர் உலகில் அரியர். இறைவன் ஒருவனே பண்புகளுக்கு உறைவிடம். பண்புகள் நிரம்பியவன் என்று பொருள்படும் நம்பி, நம்பன் என்ற பெயர்கள் அவனுக்கே பொருந்துவன.

மேலே சொன்ன உள்ளம் என்ற நாடு இறைவனுக்கே உரிமையாதல் வேண்டும்; அந்நாட்டுக்கு உரியவனாக அவன் முடி சூடுதல் வேண்டும். குடியேறுதல் வேண்டும்.

ஒரு வீட்டில் குடிபுகுந்தவர், அந்த வீடு இருள் அடைந்து போகாமல், விளக்கு ஏற்றுவர். இந்த உள்ளம் என்ற இருப்பிடத்திலும் இறைவன் விளக்கேற்றுவான். அது சாதாரண விளக்கு அல்ல. விவேகம் என்ற நெய்யில் எரியும் ஞான விளக்கு அது.

நெடுநாள்களாக இறைவன் குடிபுகாமல் இருந்ததால், இங்குப் பலபடுகுழிகள் ஏற்பட்டுவிட்டன. அவற்றுக்குப் பிறவி என்று பெயர். அப்பகுதிகளின் வாயை மூடுவிடுவான்.

மன்மதன் என்ற வேடன் இதை ஆக்கிரமித்துக் கொண்டு குறும்பு செய்து கொண்டிருப்பான். அவனது ஆணவம் அழியும்படி உண்மையை நிலைநிறுத்துவான்.

ஆசை என்பது ஒரு கொடிய மிருகம். அந்த மிருகம் இந்த நாட்டின் புதர்களில் பதுங்கியிருக்கும். அந்த மிருகங் களைத் தூரத்தே ஓட்டிவிடுவான்.

நாடு ஒன்றிருந்தால், கடைத்தெரு வேண்டுமே! அந்தக் கடைத்தெருவையும் இறைவனே பரப்புவான். அங்கு எத்தகைய பண்டங்கள் உண்டு தெரியுமா? அன்பு, பண்பு, ஒழுக்கம் என்பனவே அந்த ஆவணத்தில் கிடைக்கும் பொருள்கள்.

புதிய ஆவணம் அமையும் முன்பு ஓர் வணிகன் அங்கு அதிகாரம் செலுத்தி வந்தான். தான் மட்டுமே பொருள் களை விற்றுக் கொள்ளை இலாபம் கொண்டவன் அவன். தன் பிழைப்புப் போய்விட்டதே என்று, வம்பு செய்து புதிய ஆவணத்தை அழிக்க முயலுவான். அந்த வணிகன் யார் தெரியுமா? அவன்தான் பாவம் என்ற வணிகன். அவனை அப்பக்கம் தலைகாட்டாமல் இறைவன் துரத்திவிடுவான்,

இவ்வாறு இறைவன் தன் வள்ளன்மையாகிய செங் கோலை, உள்ளமாகிய நாட்டில் செலுத்தினால், நல்வாழ்வு உண்டாகும் என்ற சிந்தனையைத் துயில் எழுப்பி இறைவனைப் பிரார்த்திக்கச் செய்யும் திருப்பள்ளி எழுச்சி இதோ!

''நம்பனேஎன் ஆகம் என்ற நாட்டில் மோலி சூடுவாய்!
நல்வி வேகம் என்ற நெய்யில் ஞான தீபம் ஏற்றுவாய்!

வெம்பி றப்பெ னும்பி லம்வி ரித்த வாயை மூடுவாய்!
வேடர்ஆன வேடன் ஆண்மை வீய மெய்ம்மை
நிறுவுவாய்!
ஐம்புலப்பு தர்க்குள் வாழ்அ வாவி லங்கை ஓட்டுவாய்!
அன்பு பண்பொ ழுக்கம் என்ற ஆவணம் பரப்புவாய்!
வம்பு செய்து டற்று பாவ வணிகனைத்து ரத்துவாய்!
வண்மை என்ற கோலை ஓச்சி வாழ்வெனக்கு நல்கவே!

பள்ளிச் சிறார் மனம் ஒரு நிலம் போன்றது. அங்கு எந்த விதை நடப்படுகின்றதோ, அதுதான் வளரும். ஆதலால் நல்லது எது என்று தேர்ந்தெடுத்து நடுதல் வேண்டும். நல்ல பண்புகள்தாம் நல்ல விதைகள். அவ்வாறு நல்ல விதைகள் நடப்பட்ட மனங்களில் இறைவன் குடிபுகுவான். அவன் குடியிருந்து அந்த நல்ல பண்புகளை மேலும் வளர்த்துப் பாதுகாப்பான்.

காந்தியடிகளின் பள்ளிப்பயிற்சியை விரிக்கும் பள்ளிப் படலத்துக்கு உரிய பொருத்தமான காப்பு இது,

---

நம்பன் - பரிபூரணன். ஆகம் - உடல்; உள்ளம். மோலி - மகுடம். பிலம் - குழி. வேள்தன் - மன்மதனது. வேள் - மன்மதன். வீய - கெட. அவா - ஆசை. ஆவணம் - கடைத்தெரு. உடற்றுதல் - வருத்துதல். கோல் - ஆட்சி.

# 9. வினைப்பயனாய் விலக்குண்டேன்

மலர்மிசை ஏகினான் மாண் அடி சேர்வது, பிறவிப் பயன் என்பர் வள்ளுவர். வாலறிவன் நல்தாள் தொழுவதே கற்ற தனால் ஆய பயன். அந்த இறைவனை இடைவிடாது சிந்திக்கும் பேற்றினும் திருவடி தீட்சை பெறும்பேறு பெரிதாகும்.

இறைவன் உலகத்து உயிர்களை யெல்லாம் ஆட்கொள்வ தற்காகவே அவதாரங்களை மேற்கொள்கின்றான். திரிவிக்கிரமனாக உலகங்களை அளந்தது, தன் திருவடி சம்பந்தத்தால் உயிர்கள் உய்யட்டும் என்ற உலப்பில் பெருங் கருணையாலேயே!

இராமனாகிக் கானகம் சென்றபோது, அவன் கால் மலரைத் தீண்டுகின்ற பேறு புல், புதர், கல், மணல் முதலிய சேதன அசேதனங்களுக்குக் கிடைத்தனவே!

அக்காலத்தில் இராமன் சென்ற பாதையில் ஒரு கல்லாக வாவது கிடந்திருந்தால், இறைவன் திருவடிகளைத் தொடும் பேறு பெற்றிருக்கலாமே! அவ்வாறு பெறாமல் முன்வினைப் பயன் தடுத்துவிட்டதே! வினைக்குக் காரணம் மயர்வு கொண்ட மனந்தானே! இனியாகிலும் அந்த மனத்தின் மயர்வு நீங்கவேண்டுமே!

இறைவன் உயிர்களைக் காக்கும் பொருட்டு எந்நின்ற யோனியுமாய்—எல்லாப் பிறப்பிலும்—பிறந்து கொண்டே இருப்பான். அத்தகைய ஏதாவது ஓர் பிறப்பில் அவன் நடக்கும் பாதையில் ஏதாயினும் ஒன்றாகக் கிடந்தால், அவன் திருவடிபடும்பேறு கிட்டுமே! அப்பேறு பெறுவதற்கும் அவன்

திருவருளே பற்றுக்கோடு ஆகும். அந்தத் திருவருளைப் பெற முயல்வது நம் கடன். இக்கருத்துச் சுடரைத் தன்னுட் பொதிந்து கொண்டுள்ள புல்நுனிப் பனித்துளியாகிய பாடல் இது.

"கான்நடந்த கால்மலர்க்கீழ்க்
கற்சிலையாய்க் கிடவாமல்
மேல் நடந்த வினைப்பயனால்
விலக்குண்டேன், எம்பெருமான்!
மால்நடந்த மனம்உடையேன்
மண்ணினில்ஏ தேனும்ஒன்றாய்த்
தேன்அடர்ந்த மலர்அடியைச்
சேரவரம் தருவாயே!

காந்தியடிகள் சேக்கு மகதாபு என்பவன் நட்பினால், ஊன் உண்டுபார்க்க நேர்ந்தது. பரத்தையின் இல்புகவும் நேர்ந்தது. இறைவன் அருளால் அச்சோதனைகளினின்றும் மீண்டார். மன மயக்கத்தால் இறைவன் தொடர்பு நீங்கிய போதும், அந்த இறைவன் கைவிடாது வலியவந்து ஆட் கொண்டமை கூறும் சோதனைப் படலத்துக்குச் சுடர்தரும் காப்பு இது.

---

கான் - கானகம். கல்சிலை - கல்லாகிய சிலை. மேல்நடந்த - முன்னே செய்த. விலக்குண்டேன்-விலக்கப் பட்டேன். மால்நடந்த - மயக்கம் நிகழ்ந்த. தேன் அடர்ந்த - தேன்நிரம்பிய.

கற்சிலை என்பது கல்லாய்க்கிடந்த அகலிகையைக் குறிக்கும். இராமன் கால்பட்டபோது, கல்லாய்க்கிடந்த அகலியை முன்னை உருப்பெற்ற வரலாறு இராமா யணத்தில் உள்ளது.

# 10. நினது செய்கை வியப்பன்றோ

*இறைவனைச் சேர்வதற்கு உரிய உயிர்கள், சேராமல் பிறப்பில் உழல்வதற்குக் காரணம் யாது?*

அகந்தை என்னும் ஆர்ப்புத்தான் என்பர் ஆன்றோர், அகந்தைப் போர்வையைத் தூக்கி எறிந்துவிட்டால் ஆன்மாவின் உண்மை இயல்பு வெளிப்படும். இறைவனே உடையவன்; தான் உடைமை என்பதே ஆன்மாவின் உண்மை இயல்பு.

ஆன்மாவுக்கு இந்த உண்மை இயல்பை உணர்த்திக் கொண்டே உள்ளான் இறைவன். அவன் அவதாரங்கள் எடுப்பதும் இதற்காகவே. வேதம் முதலியனவும் அகந்தை நீக்கத்தையே முதன்மைப் படுத்திப் பேசுகின்றன.

திருக்குருகூரில் நம்மாழ்வார் அவதாரம் செய்தார். பிறந்தது முதல் வாய்பேசாமல் புளியமரப் பொந்தில் அமர்ந்து தவம் செய்யலானார். பின்னர், மதுரகவியின் தொடர்பினால் பேசத் தொடங்கி திருவாய்மொழியை உலகுக்கு உதவினார்.

அந்தத் திருவாய்மொழியில் பல இடங்களில் "நானாகப் பாடவில்லை. என்னுள் இறைவன் புகுந்து தன்னைத் தானே பாடிக் கொள்ளுகின்றான்" என்று கூறுகின்றார். ஆதலால் திருவாய்மொழி இறைவனே அருளியது என்று ஆன்றோர் சொல்வர்.

"அகந்தை கூடாது என்று உலகுக்கு உணர்த்திய இறைவன், திருவாய்மொழிமூலம் தன்னைத் தானே புகழ்ந்து

கொண்டானே! அது தற்பெருமை தானே! தற்பெருமை என்பதும் அகந்தை என்பதும் வெவ்வேறுஅல்லவே!

''இறைவன் தற்பெருமை பேசுவது எவ்வாறு பொருந்தும்! ஊருக்கு மட்டும் உபதேசமா? தனக்கு அது இல்லையா?'' என்று ஒரு விநோதமான வினாவை நம் மனம் எழுப்புகின்றது.

அகந்தை ஒழிக்கவேண்டும் என்றால், தன்னினும் விஞ்சிய ஒரு பேராற்றல் உண்டு என்பதை உணர்தல் வேண்டும். அப்போதுதான் அகந்தை மடங்கும்.

அந்தப் பேராற்றல் உள்ளவன், தானே என்பதை உலகுக்கு உணர்த்துவதாகவே, நம்மாழ்வார் மூலம் திருவாய் மொழியை இறைவன் வெளியிட்டுள்ளான்.

''தன்னை உணராரிடைத் தன்னைப் புகழ்தலும் தகும்'' என்பது இலக்கணம்.

தன்னை உள்ளபடி உணராத உலகினர்க்குத் தன் பெருமையைத் திருவாய்மொழிமூலம் இறைவன் உணர்த்தியது தற்பெருமைக்காக அன்று. ''தன் பெருமையைத் தன்னைவிட வேறு எவரும் விளக்கமாகக் கூறுதல் இயலாது. தன் பெருமை உணராவிடில், உயிர்கள் அகந்தை நீங்கி உய்தி பெற மாட்டார்'' என்ற கருணையே அவ்வாறு செய்யத் தூண்டியது எனலாம்.

''தன்னைப் புகழ்தல் எக் காலும்
தகாது என்று உலகுக்கு அறம் உரைத்தாய்!
பொன்னைப் பொருவும் திருக்குருகைப்
புளிக்கீழ் அமர்ந்து நின்நாவால்
நின்னைப் புகழ்ந்து கொண்டாயேல்
நினது செய்கை வியப்பன்றோ!
அன்னைக் கதிகம் அருள் சுரக்கும்
அப்பா ஒப்பார் இல்லானே''

என்பது சீரிய கருத்துச்செறிந்த பாடல்.

நண்பன் ஒருவனுடன் புகைபிடித்ததும் பணியாளனிடம் காசு திருடியதும் "பெற்றோர்க்கு அடங்கி நடப்பதா?" என்ற அகந்தையால் உயிர் துறக்க முயன்றதும் முடிவில் மனம் திருந்தித் தம் தவறுகளைத் தந்தையிடம் ஒப்பியதும் தந்தை தம் பெருந்தகவால் கடிந்து பேசாமல் கண்ணீரால் கறை கழுவியதும் ஆகிய செய்திகள் கூறுவது கழுவாய்ப் படலம்.

அகந்தையால் உயிர்கள் இறைவனுக்குத் தாம் உடைமை என்ற இயல்பை மறந்து சுதந்தரமாகத் திரியும் போது, திருத்திப் பணி கொள்வதற்காக ஆண்டவன் தன் இயல்பையும் தானே வெளியிட்டு அருளிய கருணைத்திறம் கூறும் இப் படலத்துக்கு ஏற்புடையது அன்றோ!

இறைவனைப் பழிப்பதுபோலத் தோன்றினும், உண்மையில் புகழ்வதாகவே பொருள்படும் பாடல் இது. இவ்வாறு பழிப்பது போலப் புகழ்வதைப் நிந்தாஸ்துதி அலங்காரம் என்பார்கள்.

---

பொருவுதல் - ஒப்பாதல். குருகை - திருக்குருகூர். அன்னைக்கு அதிகம் - அன்னையைக் காட்டிலும் அதிகமாக.

# 11· நின்னையல்லால் அரண் யாவர்?

காமம், வெகுளி, மயக்கம் என்பன முக்குற்றங்கள் என்பர். காமம், குரோதம், கோபம், மோசம், மதம், மாச்சரியம் என்பன அறுபகை எனப்படும்.

இவ்வாறு அடுக்கிக் கூறுவனவற்றுள் முதலிடம் பெறுவது காமம் ஒன்றே. பிறபகைகளை ஒருவாறு வெல்ல வல்லவரும் இக்காமப்பகை வெல்வது அரிது.

''வெல்லம் போலும்கனி வாய்மொழி வஞ்சியர்கள்
கள்ளம் பூணும் கொலை வாய்வழி கொண்டுபெரு
வெள்ளம்போல் உந்திடும் ஆசை எனும் கொடுமை தவிர்வார் யார்
மெய்கண்டோரும்துய ராயினர். அம்பொன்மலர்
ஐயன் தானும்தலை போயினன். அம்பொன்மலை
வில்லன் தானும்பல காலும் இரந்தனன். விண்மகவானோ
செல்வம் போய் லிங்க மெலாம் உடல் கொண்டனன். இவ்
வையந் தானும்கலி தோடம் நிறைந்ததுரை
செய்யும் போது இங்கு எவர் ஆசையை வென்றவர்கள்''
என்பது குரவை இராமானுசதாசர் வாக்கு.

கனியேனும் இனிய செங்காயேனும் உதிர் சருகு தந்த மூலங்களேனும் கனல்வாதை வந்தெய்தி அள்ளிப் புசித்துத் தவம் செய்வோரும் காமத்துக்கு ஆட்பட்ட வரலாறுகள் பல உண்டு.

இவ்வாறு உலகுய்ய வந்தவர்களையும் காமம் விடாது நலியுறுமானால், நம்போன்ற சிறு மதியர் நிலை சொல்லுதல்

வேண்டுமா? காமத்தை வெல்ல வழியே இல்லையா? உண்டு. அதுதான் இறைவன் கருணைச் சாதனம். அவனே இக் கேட்டினின்று மீட்கவல்லவன். இங்ஙனம் நம் சிந்தனைப் பறவை பறப்பதற்குச் சிறகுகள் தருவது இதோ!

"வையம் வாழ்வுற வந்தவர் தம்மையும்
வெய்ய காமம் விடாது நலியுமேல்
பையல் என்திறம் பன்னும் தரத்ததோ!
ஐய! நின்னைஅல் லால் அரண் யாவரே!"

தந்தையார் மரணத் தருவாயில் இருக்கும்போதும் உலகை உய்விக்க வந்த உத்தமர் கத்தூரியுடன் இன்பம் துய்க்க விரைந்தார் என்ற செய்தி கூறுவது தாதை பிரிவுப் படலம். அப்படலத்துக்குத் தகுதி சான்ற காப்பு இப்பாடல்.

---

வெய்ய - கொடிய. பையல் - அற்பனாகிய யான். என்திறம் - என்நிலை. பன்னுதல் - சொல்லுதல். அரண் - தஞ்சம்.

# 12. நெஞ்சகம் நீ சேர் ஆலயம்

நம் உள்ளம் இறைவனுக்குச் சொந்தம். அவன் தங்கும் ஆலயம் அது. அவன் தங்குவதற்குத் தகுதியில்லாமல், அதை அகந்தையினால் அசுத்தப்படுத்தி வைத்திருக்கின்றோம். அந்த அகந்தையைக் கழுவினால்தான், மனத்துக்கண் மாசு கெடும். மாசு கெட்டால்தான், இறைவன் வந்து தங்குவான். அகந்தையைக் கழுவுவது எப்படி? நெஞ்சத்தை உருக்கி நீராக்க வேண்டும். அந்த நீரால் அகந்தையைக் கழுவி விடலாம்.

அகந்தையை இருளுக்கு ஒப்பிடுவர். ஆயினும் இருளுக்கும் அகந்தைக்கும் மிக்க வேறுபாடு உண்டு. இருள் பிற பொருள்களை மறைக்கும். ஆனால் தன்னை மறைக்காது; வெளிக்காட்டும். ஆம்! இருள் இருப்பதை நாம் எளிதில் உணரலாம். அகந்தை அறிவை மறைக்கும். தன்னையும் காட்டிக் கொள்ளாமல், மறைத்துக் கொள்ளும். அகந்தை இருப்பதை நாம் வெளிப்படையாக அறிய இயலாது.

அகந்தை இருப்பதை நாம் அறிந்தால்தானே, அதைக் கழுவுவதற்கு முயல்வோம். அதுதான் தன்னைக் காட்டிக் கொள்ளாதே! அதை அறிவதற்கு என்ன செய்யலாம்! நம் செயலால் ஆவது ஒன்றும் இல்லை. இறைவனே தன் திருவருளால் உணர்த்தினால் அன்றி, அதன் இருப்பை நாம் உணர இயலாது. அந்தத் திருவருளுக்கு இலக்காக முயல்வ தொன்றே நாம் செய்ய வேண்டுவது.

இத்தகைய தத்துவம் சிந்தனைப் பயிர் விளைப்பதற்குரிய விளை நிலமாக இருப்பது இதோ!

“கார் ஆரும் அகந்தை கரைந்து உகவே
நீராய் உருகும் தனி நெஞ்சகம் நீ
சேர் ஆலயம் என்று தெளிந்திலெனே!
நாராயணனே தனி நாயகனே!”

அகந்தை ஒழித்தல், நெஞ்சைப் பயன்படுத்தல், இறைவனை நெஞ்சில் நிறுத்தல் என்பன பல சமயங்களும் போதிக்கும் அடிப்படை உண்மைகள். காந்தியடிகள் பல சமயங்களும் தேர்ச்சி பெற்றமை குறிக்கும் சமயத் தேர்ச்சிப் படலத்துக்கு இன்றியமையாமல் அமைந்த காப்பு இது.

---

கார் - இருள். ஆரும் - போன்ற; நிரம்பிய.

# 13. எழுதும் என்னும் இது மிகை

இறைவன் எளிதாக ஆராதிக்கத்தக்கவன். தண்ணீரைக் காட்டிலும் பெரிதாக அவன் எதையும் விரும்புவதில்லை என்று சஞ்சயன் கூறுகின்றான். பழமோ, மலரோ, இலையோ, நீரோ ஏதோ ஒன்றால் வழிபடலாம் என்கின்றது கீதை.

நம்மாழ்வார் இன்னும் ஒரு படி மேலே போகின்றார். அவனைப் பூசிப்பதற்காகத் "தொழுது மாமலர் நீர் சுடர் தூபம் கொண்டு எழுதும் என்னும் இது மிகை" என்கின்றார்·

'மலர், நீர், தூபம் கொண்டு வழிபடச் செல்லக்கூட வேண்டா. வழிபடச் செல்வோம் என்று நினைப்பதே இறைவன் திருவுள்ளத்துக்கு அதிகம்" என்பது அதன் பொருள்.

"ஆராதனைக்கு எளியவனான உன்னைத் தொழுதால் பெறலாம் என்றனர் சிலர், அதன்படி தொடர்ந்து தொழுதேன். அழுதால் பெறலாம் என்றனர் சிலர். இருவிழி கன்றும்படி தொடர்ந்து அழுதேன். அதுகாறும் நீ அருள் தரவில்லையே!

"அப்படியானால் எழுதும்· என்னும் இது மிகை (வழிபடச் செல்வோம் என்று நினைப்பதே அதிகம்) என்று சொன்னாரே நம்மாழ்வார்! அவர் வெற்றுரை தொடுப்பாரா? அருளாளராகிய அவரின் வாய்மொழி பொய்ம்மை ஆகாதே! அவர் சொல்லானது பொய்க்காமலிருப்பதற்காகவாவது என்னை ஆட்கொள்ளலாகாதா! பரந்தாமனே!" என்னும் பிரார்த்தனை ஒரு பாடலாக உருப்பெற்றுள்ளது.

''தொழுது நின்றும் துணைவிழி கன்றிட
அழுது நின்றும் அருள்தர வில்லையேல்,
'எழுதும் என்னும் இதுமிகை' என்றவர்
பழுது சொல்லின ரோபரந் தாமனே!''

அடிகள் கல்வி கற்பதற்காக மேனாடு செல்வதற்கு ஆலோசனை செய்யும் படலம் ஆய்வுப் படலம்.

இறைவனை அடைவது எளிது என்று கூறும் இப்பாடல், அடிகள் கலையறிவை அடைவது என்பதைக் குறிப்பால் உணர்த்துவதாக உள்ளமையால், இப்படலத்துக்குத் தக்க காப்பு இதுதானே!

---

துணைவிழி - இருகண்கள். எழுதும் - எழுந்து செல்வோம். மிகை - அதிகம். என்றவர் - நம்மாழ்வார். பழுது - வெற்றுரை.

# 14. இணை என்று யாரை இயம்புவேன்

உயிர்கள் அறியாமையால் அகந்தை ஏறி விலகிச் சென்றாலும், அவ்உயிர்களுக்கு வேறு புகலிடம் இல்லை என்பது அறிந்து இரங்கி, இறைவன் அவர்களுக்குத் தோன்றாத் துணையாகத் தொடர்ந்து தொடர்ந்து செல்கின்றான்.

உயிர்கள் அடையும் துன்பமானது பெருங்கடல். சாதாரணக் கடல் அல்ல. கரையில்லாத பெருங்கடல். தானே தெப்பமாகி அக்கடலைக் கடத்துகின்றான் இறைவன். இத்தகைய அருட்குணம் படைத்த இறைவனுக்கு ஒப்பாக யாரைச் சொல்லலாம்! தனக்கு உவமை இல்லாதவன் அவன். ஒத்தார் மிக்காரை இல்லாத மாமாயன் அவன்.

இறைவனின் காரணம் பற்றாத கருணையைக் காட்டும் சாளரமாக அமைந்த பாடல் இதோ!

''துணைஎன்று தொடர்ந்து தொடர்ந்து இடராம்
அணை என்பதில் லாததொர் ஆர்கலியைப்
புணை என்று புகுந்து கடத்தும் உனக்கு
இணை என்று இனி யாரை இயம்புவெனே!''

அடிகள் கல்விகற்கும் பொருட்டுக் கடற்பயணம் மேற்கொண்ட செய்தி கூறும்பகுதி, கடற்செலவுப் படலம். இறைவன் இடர்க் கடலைக் கடத்துவதைக் கூறும் இப்பாடல் இப்படலத்துக்கு ஏற்புடையது அன்றோ!

---

இடர் - துன்பம். அணை - கரை. ஆர்கலி - கடல் புணை - தெப்பம். இணை - ஒப்பு.

# 15. திருவுருத் தீட்டல் வேட்டேன்

சிந்தனை உனக்குத் தந்தேன் என்றான் அதிவீரராம பாண்டியன். சிந்தனைக்கு நிலைக்களன் ஆவது நெஞ்சு. அது நேர்மையான பண்புகள் நிரம்பியதாக இருத்தல் வேண்டும். அத்தகைய நெஞ்சு பெற்ற பயன், அதை இறைவனுக்கு உரிமையாக்குவதே ஆகும்.

உரிமை ஆக்குவது எப்படி? நெஞ்சத்தில் இறைவனை நிலைநிறுத்திக் கொள்வதே உரிமையாக்குவது எனலாம். இறைவனை நெஞ்சில் நிறுத்துவது எப்படி!

"உன்னுடைய விக்கிரமம் ஒன்று ஒழியாமல் எல்லாம்
என்னுடைய நெஞ்சகம்பால் சுவர்வழி எழுதிக்
கொண்டேன்"

என்பது பெரியாழ்வார் வாக்கு.

"மார்வம் என்பதோர் கோயில் அமைத்து
மாதவன் எனும் தெய்வத்தை நாட்டி
ஆர்வம் என்பதோர் பூவிட"

வேண்டும் என்பதும் அவர் இட்ட கட்டளை.

நெஞ்சத்தைத் திரைச்சீலையாகக் கொண்டு, அதில் இறைவன் திருவுருவைத் தீட்டிக் கொள்ளுதல் வேண்டும். திருவுருவை ஓவியமாக எழுதுவது எப்படி?

சாதாரணத் தூரிகையும் வண்ணக் குழம்பும் அதற்குப் பயன்படாது.

இறைவன் எத்தனையோ கொடை நமக்குக் கொடுத்துள்ளான். அவற்றுள் தலைசிறந்தது தக்க இன்ன தகாதன இன்ன என்று ஒக்க அறியும் அறிவேயாகும்.

அந்த அறிவின் பயனாக அமைவது அன்பு. அந்த அறிவையே தூரிகையாகவும் அன்பையே வண்ணக் குழம் பாகவும் கொண்டால் உள்ளத்திரையில் இறைவன் உருவோவியம் நன்கு உருவாகிவிடும்.

அவ்வாறு ஓவியம் தீட்டிவிட்டால், ஓவியம் உயிர்பெற்று வருவதுபோல், ஆசான் உருவிலே இறைவன் எழுந் தருளுவான். எழுந்தருளி நம்மை அடிமை கொண் டருளுவான்.

''தூரிகை அறிவது ஆகச் சுடர்வண்ணம் தூ அன் பாக
நேரிய நீர்மைமலரும் நெஞ்செனும் திரையின் கண்ணே
சீரிய நினது கோலத் திருவுருத் தீட்டல் வேட்டேன்,
ஆரியன் ஆகி என்னை அடிமை கொண் டருளும் மாலே'

என்பது இந்த நினைவு மலர் அரும்பும் நெடும்பூங்கா.

அடிகள் மேனாட்டில் சத்துவ உண்டி தரும் பயன் அறிந்து, சித்தத்தின் உரம்பெற்ற செய்தி கூறுவது சத்துவப் படலம். சத்துவமனத்தினரே சத்துவ உண்டியின் மேன்மையை உணர்வர். அந்தச் சத்துவப் பண்பு, இறைவனுக்கு உரிமை யாக்கப்பட்ட மனத்துக்கே உரியது. ஆதலால் இப்பாடல் சத்துவப் படலத்துக்கு உரியதாகி உயர்வு பெறுகின்றது.

---

தூ - தூய. நீர்மை - பண்பு. கோலம் - அழகிய' வேட்டேன் - விரும்பினேன். ஆரியன் - ஆசாரியன்,

# 16. நெஞ்சம் எனும் மீன்

நீர்உள எனின்உள மீன் என்பர் கம்பர். மீன் உயிர் தரிப்பதற்கு இன்றியமையாதது நீர். அதனால், மீனுக்கு நீரே தாரகம் ஆகும்.

அதைப்போல் மனத்துக்குத் தாரகம் இறைவன் திருவடி. ஆனால் மனமானது ஈசன் எந்தை இணையடி நீழலின் இன்பத்தை மறந்து, உலகப் பற்றே தாரகம் என்று மயங்கி, ஐம்புல நுகர்ச்சியிலே திளைத்து மகிழ்கின்றது. அதாவது நெஞ்சம் ஆகியமீன் ஐம்புல நுகர்ச்சியாகிய நீரையே தாரகமாகக் கருதி, அதனை விட்டு வெளியே வர மறுக்கின்றது. அதனால் அந்த மனம் அடையும் பயன் பெருந்துன்பமாகிய நரகமே யாகும்.

"பெயரும் உருவமும் கடந்த அறிவு மயமான கடவுளே! என் மனமாகிய மீனைக் கைவிட்டுவிடாதே! அதைப்பிடித்து, அதற்கு உண்மையான தாரகமாகிய உன் திருவடியில் சேர்த்து ஆட்கொள்ளல் வேண்டும்.

"அந்த மீனைப் பிடிப்பது எப்படி என்று யோசிக்கின்றாயா! உன் தாமரை மலர் போன்ற திருவடிகளைத் தூண்டிலின் சிறிய கோல் ஆக்கு! உன் திருவருளை அக்கோலின் நூல் ஆக்கு! எல்லோர்க்கும் தஞ்சமாகிய உன் அன்பினை அந் நூலில் கட்டிய இரையாக்கு!

"இதுவே என் நெஞ்சமீனைப் பிடிப்பதங்கு எளிய உபாயம். நீ அவ்வாறு இந்த மீனைப் பிடித்து, துன்ப நரகில் விழும் என்னைத் தடுத்து ஆளாமல் நஞ்சுபோல் வெறுத் தொதுக்கினால், எனக்கு வேறு கதி ஏது!"

என்ற பிரார்த்தனையை வெளியிடும் அரிய பாடல் இதோ!

"நெஞ்சம்எனும் மீன், சிறிதும் விடய நீரை
நீங்காது, துன்பத்து நிரயம் சேரும்.
கஞ்சம்எனும் அடி தூண்டில் சிறுகோ லாகக்
கருணைசிறு நூலாகக் கனிவால் யார்க்கும்
தஞ்சம்எனும் அன்பைஇரை ஆக்கி, அந்தத்
தனிமீனைப் பிடித்துஎன்னைத் தடுத்துஆட் கொள்வாய்!
நஞ்சம்என வெறுப்பின்,எனக்கு அரண்வேறுண்டோ?
நாமஉரு வம்கடந்த ஞானத் தேவே!"

இலண்டனில் அண்ணல் வாழ்ந்தபோது, சில மாணாக்கரின் பொய்யொழுக்கம் கண்டு, தாமும் அவ்வாறே ஒழுக முனைந்து, தக்க தருணத்தில் இறையருளால் தவறு நேராமல் தப்பிய வரலாறு உய்திப் படலம்.

ஐம்புல நுகர்ச்சியின் கேட்டையும் இறைவன் அருளையும் காட்டும் இந்தக் காப்பு அப்படலத்துக்கு ஒளியூட்டுகின்றது.

---

விடயம் - ஐம்புலநுகர்ச்சி. நிரயம் - நரகம். கஞ்சம்- தாமரை. நஞ்சம் - விஷம். நாமம் - பெயர்.

# 17. ஆற்றல் அருள வேண்டும்

அடியேன் படைத்த செந்தமிழ்க் காப்பியத்தில் ஏதேனும் சுவையிருந்தால், அது என்னால் இயன்ற தன்று. நான் அறியாச் சிறுவன். ஏதும் அறியேன். இன்பச் சுவைகளை நீதான் சொரிந்து வைத்திருப்பாய்! திருமாலே!

வாழ்வு என்பது இன்ப துன்பக் கலவை. இன்பம்வரும் போது, அந்த இன்பம் தம்மால் வந்தது என்று நினைப்பது உலகர் இயல்பு. துன்பம் வரும்போது, அது இறைவனால் (வினைப்பயனால்) வந்தது என்று அங்கலாய்ப்பர்; 'இறைவா! அத்துன்பத்தைத் தடுத்து விடு!' என்று மன்றாடுவர்.

அடியேன் அவ்வாறு உன்னிடம் மன்றாடமாட்டேன். ஏனெனில், அந்தத் துன்பமும் உன் கருணையால் வந்த கொடையாகவே கருதுகின்றேன். ஆம்! இன்பம் வரும்போது, உன் நினைவு வருவதே இல்லை. துன்பமானது உன் திருவடிகளை மறவாது நினைக்கத் தூண்டுகின்றது. உன் திருவடிகளை மறவாதிருப்பது பெரும்பேறு அல்லவா!

துன்பம் வரும்போது, "அதைத் தடுப்பாயாக!" என்று பிரார்த்திக்க மாட்டேன். வேறு ஒன்று கேட்பேன்.

"என்னை வந்தடைந்த துன்பத்தை நீ தடுக்க வேண்டா. அதைத் தாங்கிக் கொள்வதற்கு உள்ளத்தில் வலிமை கொடு" என்பதே என் விண்ணப்பமாக இருக்கும்.

இந்த விண்ணப்பம் அமைந்த பாடல் இதோ!

"கடுத்தவன் துன்ப மேஉன்
    கழலிணை கருதத் தூண்டும்.
தடுத்தினித் துன்பந் தன்னைத்
    தவிர்என இரத்தல் செய்யேன்.

அடுத்தஅத் துன்பம்தாங்கும்
ஆற்றல்ஒன் றருளல் வேண்டும்.
தொடுத்தசெந் தமிழில் இன்பச்
சுவைபல சொரியும் மாலே!

இது சமயத் தொடர்புப் படலத்தின் காப்புச் செய்யுள். மனித மனங்களின் சலனங்களை நிறுத்தி, துன்பத்திலும் அலமதியைத் தருவதுதானே சமயங்களின் பணி.

இக்கருத்துப்படி நோக்குகையில், இப்பாடல் அப் படலத்தின் விரிவுக்கு விதையாக உள்ளது அன்றோ!

---

கடுத்த - கொடிய. கழலிணை - திருவடிகள். இரத்தல் - யாசித்தல்,

# 18. உன்புகழ் குறைந்திடுமோ!

இறைவனுக்கு நாராயணன் என ஒரு பெயர் உண்டு. நாரம்+அயனம் எனப் பிரித்து அதற்குப் பொருள் உரைப்பார். நாரம் என்பது உயிர்கள் அனைத்தையும் குறிக்கும். அயனம் என்பது தங்குமிடம். ஆக, நாராயணன் என்பது, உயிர்கள் அனைத்துக்கும் தான் தங்குமிடமாக இருப்பவன் என்று பொருள்படும். உயிர்களைத் தான் தங்குமிடமாகக் கொண்டவன் என்று பொருள் கொள்ளலாம்.

இறைவன் என்ற சொல்லும் அதே பொருளையே தருவதைக் காணலாம். இறுத்தல் என்பது தங்குதல். எல்லா உயிர்களிலும் தங்கியிருப்பவன் என்பதே இறைவன் என்பதற்குப் பொருள். எல்லா உயிர்களும் தங்குவதற்கு இடமானவன் என்றும் பொருள் கொள்ளத் தடையில்லை.

''ஐயா! என்னை நீ அறிவுமயமாக ஆக்கினாய்! நான் என் இயல்பினை அறியாமலும் அறிவால் அறிய வேண்டிய உன்னை அறியாமலும் அற்பசாரங்களே நுகர்ந்து புன்மைக் குணமுடையவன் ஆகிவிட்டேன். ஆதலால் அடியன் என்ற பெயருக்கு உரிய யான், புலையன் ஆகிவிட்டேன். ஆயினும் நீ எல்லா உலகங்களையும் உயிர்களையும் தாங்குபவன், நாராயணன் என்றால், நல்லவர்களை மட்டும் தாங்குபவன் என்று பொருள்படும்! நலம் அவை தீங்கு அவை என்று நம்மாழ்வார் அடுக்கிய அனைத்தையும் தாங்குபவன் நீ அன்றோ!

சூதாட்டமாகவும் உள்ளேன் என்று கீதையில் நீ சொன்னாயே! சூதாட்டம் கொடியதுதானே!

நல் குரவும் செலவும் நரகும் சுவர்க்கமும் பகையும் நட்பும் விடமும் அமுதும் ஆகிய ஒன்றுக்கொன்று முரண்பட்ட பொருள் எல்லாங்கூட நீயே என்று காரிமாறன் கூறினார் அன்றோ!

ஆதலால் இந்தப் புலையனைமட்டும் தாங்கமாட்டேன் என்று கூறலாமா! என்னைத் தாங்கினால் உன்புகழ் கூடுமே தவிர, குறையாது.

உயர்ந்த பண்பாளரைத் தாங்குவதற்கு எத்தனையோ தெய்வங்கள் உண்டு. என்னைப் போன்ற புல்லியரைத் தாங்குவதற்கு, உன்னையல்லால் வேறு, யார் உண்டு? புல்லியரைத் தாங்கும் பொருட்டுத் தானே, இமையோர் தலைவனான நீ, எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்! அவதாரம் செய்வதால் தான் உனக்கு ஒளி வருகின்றது என்பர் பெரியோர்.

என்னைத் தாங்குவதால், என் புன்மைக் குணங்கள் உன்னை ஒட்டிக் கொள்ளுமா? நீ உலகெங்கும் உடல் மிசை உயிர் எனக் கலந்து பரவியுள்ளனையே! அந்த உலகத்தின் அழுக்கு உன்னை ஒட்டிக் கொண்டதா? 'தோய்ந்தும் பொருள் அனைத்தும் தோயாது நின்ற சுடர்' என்று கம்பர் கூறுவது பொய்யா!

கடல் மிகப் பெரியது. நுரை மிகப் புல்லியது. அது நீரின் அழுக்கு. அந்த நுரையைக் கடல் கை விடுகின்றதா? தன் அலைக்கரத்தால் எடுத்து அணைத்துத் தாலாட்டு கின்றதே!

மலை மிகப் பெரியது. துரும்பு மிக அற்பமானது. அத்துரும்பை ஏந்தமாட்டேன் என்று மலை, அதைக் கீழே தள்ளி விடுகின்றதா!

பூமி புனிதமானது. புழுதி அழுக்குமயமானது. அந்தப் புழுதியை வெறுக்கின்றதா பூமி! அதையும் தாங்கத் தானே

செய்கின்றது. அதற்காகப் பூமியை யாராவது பழிக்கின்றார்களா?

கடல், மலை, நிலம் ஆகியவற்றின் இத்தகைய சிறப்புக் கண்டல்லவா வள்ளுவப் பெருமான் அவற்றை உவமையாக்கிப் பெருமை சேர்த்தார்.

அவை உயிரில் பொருள்கள்; அசேதனங்கள். அவற்றுக்கு உள்ள இயல்பு, பரமசேதனனாகிய உன்னிடம் இல்லாமல் போகுமா? நீ என்னைத் தாங்கத் தான் செய்கின்றாய்! என்றும் தாங்குவாய்! என்று நம்புவதே என் கடமை. தாங்குவதோ தாங்காமலிருப்பதோ உன் விருப்பம். அதை வலியுறுத்த நான் யார்?

இத்தகைய தத்துவச் சிந்தனைக் கனிகள் குலுங்கும் மாமரமாக இருப்பது ஒருபாடல்.

> ''அலைமிசை நுரையைத் தாங்கின்
> ஆழியைப் பழிப்பார் உண்டோ?
> தலைமிசைத் துரும்பொன்று ஏந்தின்
> மலைக்கு ஒரு தாழ்வுண்டாமோ?
> நிலைபெறப் புழுதி தாங்கின்
> நிலத்தினைப் பழிப்பார் யார்? இப்
> புலையனைத் தாங்கின் உன்தன்
> புகழ்குறைந் திடுமோ! ஐயா!''

இலண்டன் மாநகரில் அடிகள் சில தகாத நண்பர்களுடன் ஒரு மை விழியாளின் மனையில் புலனழியத் தொடங்கிய போது, ஒரு நண்பன் உருவில் இறைவன் வந்து தடுத்துத் தாங்கிய செய்தி கூறுவது மயல்தெறு படலம். அதற்குத் தகுதியான காப்பு இது.

# 19. தவளையின் கால் பிடித்தேன்

மனிதப் பிறவி உயர்ந்தது என்கின்றோம். பிறஉயிர்கள் அனைத்தும் மனிதனது நோக்கில் தாழ்ந்தனவேயாகும். ஆனால் நுனித்து ஆயின், மனிதன் சில சமயங்களில் விலங்கினும் தாழ்ந்த நிலையை அடைந்து விடுகின்றான்.

> ''தக்க இன்ன தகாதன இன்னஎன்று
> ஒக்க உன்னலர் ஆயின் உயர்ந்துள
> மக்க ளும்விலங்கே''

மனுவின் நெறி புக்கவேல் அவ்விலங்கு மனிதனைவிட உயர்ந்தது தெய்வ நிலையை அடைந்துவிடும் என்பதும் கம்பர் கருத்து.

துன்பம் வந்தபோது ஆதிமூலமே என்ற யானை கஜேந்திராழ்வான் ஆகிச் சிறப்புற்றது.

நற்செயலுக்காக உயிர்த் தியாகம் செய்த சடாயு என்ற பறவை பெரிய உடையாராகப் பெருமை பெற்றது.

வெள்ளம் அடித்துச் செல்லும் குழந்தையைக் காக்க மனிதர் ஒருவரும் முன்வராதபோது, ஒரு நாய் காப்பாற்றியதாக அண்மையில் ஒரு செய்தி வந்தது. அங்குக் கூடியிருந்த மக்களைக் காட்டிலும் நாய் உயர்ந்து விட்டது அன்றோ!

மனிதப் பிறப்பு மட்டும் உயர்ந்தது ஆகிவிடாது. மனிதப் பண்புகள் தாம் உயர்வுக்குக் காரணம்.

நான் அனைவரினும் தாழ்ந்தவன். என்னைவிடத் தாழ்ந்தவர் இலர் என்று நைச்சியம் (பணிவு) பாவித்தல் வேண்டும் என்று வைணவம் வலியுறுத்துகின்றது.

வைணவ ஆசாரியராகிய இராமானுசர் ஒருமுறை திருவேங்கடம் எழுந்தருளினார். கீழைத் திருப்பதிக்கு அவர் எழுந்தருளியிருப்பதை அறிந்தார் பெரிய திருமலைநம்பி. அவர் இராமானுசருக்கு ஆசாரியர். தாய்மாமனுங்கூட. வயோதிகர் அவர்.

இராமானுசரை எதிர்கொள்ள, அவரே மலையினின்று இறங்கி வந்தார். "தாங்களே வரவேண்டுமா! யாரையாவது அனுப்பலாகாதா!" என்றார் இராமானுசர். "திருமலையின் நாலு திசையிலும் தேடினேன். நான் ஏவலிடும் அளவுக்கு என்னைவிடத் தாழ்ந்தவர் யாரையும் கண்டிலேன். ஆதலால் நானே வந்தேன்" என்பது திருமலைநம்பியின் பணிவுரை. யாரினும் கடையேன் என்னும் நினைவே சேதனனின் உண்மை இயல்பு என்பதை இதனால் அறியலாம்.

விட்டில் என்பது நான்கு அறிவு மட்டுமே உடையது. மீனுக்கு ஐந்து அறிவு உண்டு. விளக்குச் சுடரைக் கனி என்று அதில் விழுந்து உயிர் விடுகின்றது விட்டில். தூண்டில் முள்ளை இரை என்று அதை விழுங்கி உயிர் விடுகின்றது மீன். கண் என்ற ஒரே பொறி விட்டிலைக் கொல்கின்றது. வாய் என்ற ஒரே பொறி மீனைக் கொல்கின்றது. ஆனால் விளக்கும் தூண்டிலும் தம்மைக் கொல்லும் என்னும் அறிவு அவற்றுக்கு இல்லை. அதனால் அவை இறக்கின்றன. அறியும் பகுத்தறிவு மட்டும் பெற்றிருக்குமாயின், அவை அவற்றின் அருகிலும் செல்லமாட்டா.

மனிதன் பகுத்தறிவு என்னும் ஆறாவது அறிவு பெற்றவன். ஆறறிவு பெற்றிருந்தும் ஐந்து புலன்களாலும் மயக்கப்படுகின்றான். ஐம்புல நுகர்ச்சிக்காக ஓடுகின்றான். துன்பம் வரும் என்று தெரிந்தே புலன்களுக்கு ஆட்படுகின்றான்.

இந்த வகையில் நோக்கும்போது, விட்டிலும் மீனும் மனிதனைவிடப் பல மடங்கு அறிவுடையவை (மேதைகள்) என்று தேறுகின்றது.

ஐம்புல வசப்பட்ட மனிதன், மோகமாகிய கடலில் மூழ்கித் துடிக்கின்றான். இறைவன் திருவருளாகிய தெப்பம் அருகில் இருக்கின்றது. அதைப் பிடித்தால், அது உறுதியாக அக்கரை சேர்க்கும். ஆனால், அவன் அதைப் பிடிப்பதில்லை. நீரின் மேலே நுரைத்து நிற்கும் நுரையைப் பிடிக்கின்றான். நுரை அவனைத் தாங்குமா! இறைவனைப் பற்றாமல் உலகியலைப் பற்றினால் கடைத்தேற இயலாது என்பதை அவன் அறியவில்லை.

ஒரு நாய்க்கு ஓர் எலும்பு கிடைத்தது. அது நன்கு உலர்ந்து போனது. அதை நாவால் நக்கிச் சுரண்டத் தொடங்கியது. எலும்பு வெற்றெலும்பு. அதில் எச்சுவையும் கிடைக்கும் வாய்ப்பில்லை. அதைச் சுரண்டும் போது, நாயின் வாய் இரணமாகிவிட்டது. அந்த இரணத்திலிருந்து குருதி கசியத் தொடங்கியது. அந்தக் குருதி நாவில் பட்டதும், "ஆகா என ருசி!" என்று சுவைக்கத் தொடங்கியது. தன் குருதி தான் அது என்பதை நாய் அறிய வில்லை.

உலக இன்பம் என்பது ஒரு வற்றல் எலும்பு. அதில் எவ்வித சாரமும் இல்லை. அதை அற்ப சாரம் என்பர் நம்மாழ்வார். அதைச் சாரம் என்று சுவைத்து மகிழ்வது, அந்த அறிவற்ற நாயின் செயலையே ஒக்கும்.

பிறவி வஞ்சக மயமானது. அதை ஒரு பாம்புக்கு ஒப் பிடுவர். அந்தப் பாம்பு விழுங்கி விடுமே என்று அஞ்சி விலக வேண்டும். விலகுவதற்கு இறைவன் திருவடியைச் சரண மாகப் பற்றுதல் வேண்டும். ஆனால் மனிதனோ இறைவன் திருவடி பற்றாமல் ஒரு தவளையின் காலைப் பற்றுகின்றான்.

தவளையால் பாம்பை வெல்ல முடியாது. தவளை பாம்புக்கு நல்ல இரை.

பிடித்த தவளையானது இவனையும் சேர்த்துக் கொண்டு பாம்புக்கு நல்விருந்தாகி விடுவது உறுதி.

மீன்கள் வலையில் அகப்பட்டு விட்டன. அடுத்த கணம் அவை சாகப்போவது உறுதி. அவை அந்த ஆபத்தை உணர்வதில்லை. அந்த ஆபத்து வேளையிலும் இரையில் ஆசையைத் துறக்காமல், பெரிய மீன் சிறிய மீனைப் பிடித்து உண்டு மகிழும்.

மனிதனும் நமன் விரித்த மரண வலையில் சிக்கியுள்ளான். மீன்களுக்கு இறப்பு அருகிலுள்ளது தெரியாது. ஆனால் மனிதனோ இறப்பது உறுதி என்பதை நன்கு அறிவான்.

ஆயினும் மரணத்தைப் பொருட்படுத்தாமல், ஐம்புலனுக்கு இரை தேடித் தன்னினும் மெலியோரைச் சுரண்டி வாழத் தலைப்படுகின்றான். மீன்கள் அறியாமல் தவறு செய்கின்றன. மனிதன் அறிந்தே செய்கின்றான்.

மனிதன் செய்யும் தவறுகள் இவ்வளவென்று கணக்கிட்டுக் கூற எவராலும் இயலாது. கலைத் தெய்வமாகிய நாமகளே பலகாலம் முயன்றாலும் முடியாது.

பிழைகளினின்று நீங்குவதற்கு இறைவனைப் பற்றுவதே உபாயம். இறைவனே தீனரட்சகன். அதாவது தாழ்ந்தவரைத் தாங்கும் துணைவன்.

இத்தகைய சிந்தனைத் தேரை இழுத்துச் செல்லும் வடமாக அமைவது ஒரு நீண்ட பாடல்.

''பூதல மேல்அடி யேன்நிக ராகிய
புல்லறி வாளரும் யாரே
பேதைமை கூரும்அம் மீனமும் விட்டிலும்
மேதைகள் ஆகும்என் நேரே (1)

சுடும் அடும் என்றுஅறி யாதுஅவை தீயினில்
தூண்டிலில் விட்டிடும் ஆவி
படுவது கண்டு புலன்களுக் காட்படும்
பாவி அவற்றினும் பாவி (2)

மோகம் எனும்பெரு வாரியி லேநிதம்
மூழ்கி உளம்துடித் தேனே
ஏகன் நினதடித் தோணி இருக்கையில்
ஏன்நுரை யைப்பிடித் தேனே! (3)

நாய்ஒரு வற்றல் எலும்பு கிடைத்திடின்
நக்கிச் சுரண்டிடும் நாவில்
வாய்இர ணம்படச் சோரி சுவைத்து
மகிழ்ந்திடு மேவிரு தாவில் (4)

வஞ்ச நெடும்பவ நாகம் விழுங்கிடும்
வாதனைக் கேபயந் தேனே!
தஞ்சம் எனச்சரண் எய்துகி லேன்ஒரு
தவளையின் கால்பிடித் தேனே! (5)

வலைப்படும் மீனினம் மறுகணத் தேஉயிர்
மாய்வதை எண்ணுகி லாது
தலைப்படும் ஒன்றைஒன்று உண்டிட வேஇரை
தன்னில் விருப்பக லாது (6)

நாள்பல ஆகிலும் என்பிழை எண்ணிட
நாமகட் கும்இய லாதே
தாழ்பவர்க் கோர்துணை நீஎன நெஞ்சம்உன்
தாளிணை நம்பும்இப் போதே'' (7)

கரவு இயங்கு உள்ளக் கன்னியர் கால் மலர் வருடிப் பரவி அம்கனி இதழ்தரு பனிமதுப் பருகி, விட புருடர் உழல்கின்ற இடம் பாரிசு. அந்தப் பாரிசினை ஓவியமாக்கிக் காட்டுவது பாரிசுப் படலம். ஐம்புல இன்பத்துக்கு ஆட்படும் பாரிசுக்கு இந்தக் காப்பைவிடப் பொருத்தமாக வேறு இருக்க இயலாது.

---

பேதைமை - மடமை. மீனம் - மீன். மேதை - அறிவாளி. அடும் - கொல்லும். படுவது - நேரப்போவது கண்டும் - அறிந்தும். வாரி - கடல். தோணி - தெப்பம். விருதா - வீண்செயல். பவம் - பிறப்பு. சரண - இறைவன் திருவடி; தஞ்சம். தலைப்படும் - தொடங்கும். தாளிணை - திருவடி.

# 20. துன்பங்கள் பொறுத்திடுவேன்

பிறவியைக் கடலாக உருவகம் செய்கின்றார் வள்ளுவர். கடல் அளவிட முடியாதது. பிறவியும் அளவிட முடியாதது. கடலைக் கடப்பது அருமை, பிறவியும் அப்படியே!

அந்தப் பிறவிக் கடலை நீந்தி நாம் அக்கரை சேர்வதற்கு இறைவன் நம்மைப் பக்குவப்படுத்திக் கொண்டேயுள்ளான்.

போரில் வெற்றிபெறப் படைவீரர்க்குப் பயிற்சி தரப் படுகின்றது. அப்பயிற்சிகள் துன்பமாகவே இருக்கும். ஆயினும் அப்பயிற்சியில்லையேல், போரில் வெற்றிபெற இயலுமா?

நீச்சுப் பழக்குபவர், முதலில் சிறு சிறு நீர் நிலைகளில் தள்ளித் தத்தளிக்க விடுவர். நீரில் தள்ளுபவர் கருணையில் லாமல் தள்ளுகின்றனரா! நீச்சல் கற்கட்டும் என்ற கருணையே அதற்குக் காரணம்.

பிறவிக் கடலை நீந்தக் கற்பிப்பதற்காகவே இறைவனும் சோதனையாகிய பல மடுக்களில் நம்மைத் தள்ளி விடுகின்றான்.

துன்பங்களும் அவன் கருணையால் வந்தனவே என்று துணிதல் வேண்டும்.

இறைவன் தரும் இந்தச் சோதனைப் பயிற்சியில் தேர்ந்து விட்டால், பிறவிக் கடலை எளிதில் நீந்தி விடலாம். இறைவன் திருவடியாகிய அக்கரை சேர்வதும் உறுதி.

எத்தனை துன்பங்கள் சூழ்ந்தாலும், அதுவும் நம் நன்மைக்காகவே என்று அமைதியுடன் பொறுத்தல் ஒன்றே அடிமையாகிய நம் இயல்புக்கு ஏற்றது.

இக்கருத்து மணிகள் பதித்த அணிகலமாக ஒளிர்வது ஒரு பாடல்.

"புன்பிறவிப் பெருங்கடலை நீந்தி அப்பால்
போய்க்கரையில் ஏறுவதற்குப் போதிக் கத்தான்
துன்பம்எனும் பலமடுவில் தள்ளி என்னைச்
சோதிக்கின் றாய்என்று துணிந்தேன், ஐயா!
இன்பருளும் உன்கழல்கள் அடைதல் திண்ணம்
என்றிருப்பேன் ஆதலினால் இன்னும் இன்னும்
அன்புடையாய்! துன்பங்கள் தந்தா யேனும்
அமைதியுடன் பொறுத்திடுவேன் அடியனேனே"

இப்பாடல் மீட்சிப் படலத்தின் காப்பு. இலண்டனில் கல்வி பயிற்சி பெற்றுத் தாயகமாகிய இக்கரையை அடிகள் அடைந்தமை கூறும் பகுதிக்கு வளம் தரும் காப்பு இது.

---

மடு - நீர்நிலை. துணிந்தேன் - நம்பினேன்
கழல்கள் - திருவடிகள்.

# 21. புனிதம் ஆகாதோ

உள்ளம் இறைவனுக்கு ஆலயம் என்பர். அந்த ஆலயத்தை நாம் தூய்மையாக வைத்திருப்பது அவசியம். உள்ளம் தூய்மையாக இருந்தால்தான், இறைவன் அதில் தங்குவான். தூய்மையில்லையேல் அவன் எட்டிப் பாரான்.

நாம் என்ன செய்கின்றோம்! உள்ளக் கோவிலைக் கள்ளக் கோவில் ஆக்குகின்றோம். அதில் கள்ளமாகிய புழுக்கள் நெளிகின்றன. காமமாகிய புலை நாற்றம் வீசுகின்றது. உள்ளத்தையே சாக்கடையாக மாற்றி விட்டோம். இறைவன் ஒட்டிச் சேராமல் எட்டிப் போகச் செய்துவிட்டோம்

நம் உள்ளம் தூய்மை பெறாதா? இறைவன் குடிபுக மாட்டானா? இதற்கு நம்மால் ஆவது ஒன்றும் இல்லை' அந்த இறைவனே தன் இருப்பிடத்தைத் துப்புரவு செய்து கொள்ளல் வேண்டும். அவனது கருணையால் கடவுட் கங்கை பாய்ந்தால்தான், நம் உள்ளத்துக் சாக்கடை அடித்துக் செல்லப்பட்டுத் தூய்மையடையும்.

உலகியற் பள்ளத்தில் வீழ்ந்து மேலே ஏற முடியாமல் தவிப்பார்க்குப் பற்றாக இருப்பவன் இறைவன் ஒருவனே! ஆதலால் அவன் நம் உள்ளத்தையும் தூய்மை செய்வான். நம்மையும் கை தூக்கி விடுவான். அதற்காக நாம் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான்.

"என் உள்ளம் உன்வீடு. எதுவேண்டுமாயினும் செய்து கொள்க!" என்று ஒப்படைப்பதே அது.

"கள்ளத்துப் புழுநெளியக் காமத்துப் புலை நாறும்
உள்ளத்துச் சாக்கடையில் உன்கருணைப் பெருங்கங்கை
வெள்ளத்துப் புனல்பாய விடின், புனிதம் ஆகாதோ?
பள்ளத்து வீழ்ந்தார்க்குப் பற்றாகும் பரம் பரனே!"

இலண்டனிலிருந்து மீண்டு அடிகள் தாயின் பிரிவு அறிந்து, கண்ணீர் விட்டுக் கதறிய பகுதி தாய்பிரிவு அறி படலம். தாயின் ஆதரவு இழந்தபின் அந்த இடத்தைப் பூர்த்தி செய்வார் உலகில் பிறர் உண்டோ!

இறைவனே அன்றோ தாயாக உதவத் தக்கவன். இத்தகைய கருத்துக்களைச் சுரக்கும் இப்பாடல் அப் படலத்துக்கு முகமாக விளங்குகின்றது.

---

புலை - புலை நாற்றம். புனல் - நீர். புனிதம் - தூய்மை. பற்று - தஞ்சம்.

# 22. கடைக்கண் நோக்கம் எளிதாகும்

வான்குருவி யின்கூடு வல்அரக்குத் தொல்கரையான்
தேன்சிலம்பி யாவர்க்கும் செய்யரிதால்—யாம்பெரிதும்
வல்லோமே என்று வலிமைசொல வேண்டாகாண்
எல்லோர்க்கும் ஒவ்வொன்று எளிது.

என்பது ஔவை வாக்கு.

எவ்வளவு பெரியவரானாலும் அவரால் சில செயல்களைச் செய்ய இயலாமற் போகலாம். அச்செயல்களை மிக மிகச் சிறியர் செய்து விடுவதுண்டு. ஆதலால், நாமே வலியோம் என்று யாரும் மார்தட்டிக் கொள்ளலாகாது.

கடல் மிகப் பெரியது; பரப்புடையது; ஆழமானது. அந்தக் கடலில் ஒரு யானை விழுந்துவிட்டால் நிலை கொள்ளாமல் இறக்க நேரலாம். யானையை விட மிகச் சிறியதான மீன் எளிதில் நிலைகொண்டு உயிர்வாழும்.

சிறிதளவு சர்க்கரை புழுதியில் சிந்தி விடுகின்றது. அறிவிலுயர்ந்த மனிதன் அதைப் பிரித்து எடுத்து உண்ண முடியுமா? சிற்றெறும்பு, புழுதியினின்று சர்க்கரையைப் பிரித்தெடுத்து உண்பதைப் பார்க்கிறோம்.

இறைவன் ஊழி முதல்வன். ஊழி என்பது. பிரளயத்தால் உலகம் அழியும் காலம். அப்போது இறைவன் உயிர்கள் வருந்தாமல் தன் வயிற்றில் வைத்துக் காப்பான். பின்பு காலம் வந்தவாறே, அவற்றுக்கு மீண்டும் உடல் முதலிய கரணங்கள் தந்து, உலகில் உலவ விடுவான். இச்செயலுக்குக் காரணம், இறைவன் கருணையே. உயிர்கள் இறைவனால்

படைக்கப்பட்டன அல்ல. என்று நீ அன்று நான் என்பார் தாயுமானவர். இறைவன், உயிர், உலகு என்பன மூன்றுக்கும் தொடக்கமும் ஒடுக்கமும் இல்லை.

உயிர்கள், இறைவனை அடைந்து இடையறாத இன்பம் துய்க்க உரியன. அந்த உரிமையை அவை அறிவதில்லை. அறியாமைக்குக் காரணம் இயல்பாகவே உயிருடன் கலந்துள்ள அகந்தையேயாகும். அந்த அகந்தையாகிய அழுக்கைத் துடைத்தால் உண்மை அறிவு வெளிப்படும். அப்போது நாம் இறைவனுக்கு உரிமை என்று உணர்ந்து கொள்வோம். இறைவனை அடைய முயல்வோம்.

ஊழி முதல்வனை அடைவது, அகந்தையால் மூடுண்டு. உலகியலில் கட்டுப்பட்ட உயிர்களால் இயலாது என்று சொல்வார் உளர். இஃது உண்மையே ஆயினும், இறைவனது திருவருள் நோக்கம் பெற்றவருக்கு அது அரிய செயல் அன்று. எளிதாகவே இறையனுபவம் கிட்டும்.

யானையால் முடியாததைச் சிறுமீனும் மனிதனால் முடியாததைச் சிற்றெறும்பும் சாதிக்க வில்லையா?

இந்தச் சிந்தனையைச் சுரக்கும் ஊற்றுக் கண்ணாக அமைவது ஒரு பாடல்.

“ஆழியிடைக் கரிமூழ்கும். சிறுமீன் நீந்தும்.
அயிர்சிறிது சிந்திவிடின், அறிவி னாலே
பூழியினின்று அதைப்பிரிக்க வல்லார் உண்டோ?
போய்எறும்பு பிரித்துஎளிதே புசிக்கும் அன்றோ!
ஊழிமுத லாம்இறைவன் அருளைத் துய்த்தல்
உலகத்தார்க்கு அரிதென்பார் உளர்என் றாலும்
வாழிஅவன் திருக்கருணைக் கடைக்கண் நோக்கம்
வாய்த்தவருக்கு எளிதாகும். வாய்மை அம்மா!

அடிகள் இலண்டனிலிருந்து திரும்பிய பின்னர், பம்பாயில் தங்கி வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட முயன்று தோல்வி கண்டார். "மதியிடைத் துணிவினை வளர்த்த புதியதோர் வழக்கினில் புகுவேன்" என்று சூளுரை செய்து, பெரு வழக்கறிஞராக முயன்றமை கூறும் பகுதிக்கு இக்காப்புச் சிறப்புக் காட்டுகின்றது.

---

ஆழி - கடல். கரி - யானை. அயிர் - சர்க்கரை. பூழி - புழுதி. துய்த்தல் - அனுபவித்தல். வாய்மை - சத்தியம்.

# 23. அழகோவியம் தீட்டுகின்றேன்

உயிர், பிறவிச் சுழலில் சிக்குவதற்குக் காரணம் இரு வினைப் பயனே. வினையால்தான் பிறப்பு வருகின்றது என்பர் அறிஞர். பிறப்பு இல்லாமல் வினை எப்படி வந்தது. 'விதை முந்தியதா மரம் முந்தியதா?' என்பதைப் போன்று, பிறப்பு முந்தியதா வினை முந்தியதா என்ற வினாவும் வினோதமானது.

பிறப்புத்தான் முந்தியது என்பது ஆன்றோர் கருத்து! தொடக்கமே இன்றி என்று முள்ள உயிரில் அகந்தை என்ற அழுக்குக் கலந்துள்ளது. அந்த அழுக்கு உயிரின் அறிவை மறைக்கின்றது. அதனால், வீடுபேறு பெற்று இறை பணி செய்யும் உரிமையை உயிர் இழந்து விடுகின்றது.

இந்நிலையில் அந்த அழுக்கைத் துடைத்துக் கொள்ள இறைவன் ஒரு கருவி தருகின்றான். அந்தக் கருவிதான் பிறப்பு (உடல்). அழுக்கைத் துடைக்கப் பிறவி தந்தால் போதுமா? செயல் செய்வதற்குரிய மூன்று வகை ஆற்றலையும் தருகின்றான். எண்ணும் ஆற்றல், அறியும் ஆற்றல், செய்யும் ஆற்றல் என்பன அவை. அந்த ஆற்றலைச் செயல்படுத்தப் பதினொரு கரணங்கள் தருகின்றான். மெய், வாய், கண், மூக்கு, செவி. கால், கை, வாக்கு, குதம், குறி, மனம் என்பன அந்தக் கரணங்கள்.

உயிர் என்பது ஆடை. அகந்தை என்பது அழுக்கு. பிறப்பு என்பது அந்த அழுக்கைக் கழுவுவதற்கு உரிய நீர். மூவகை ஆற்றல என்பது கழுவுவதற்கு உதவும் சோப்புக் ட்டி. நீரும் சோப்பும் இருந்தால் அழுக்குத் தானே போய்

விடுமா? அந்தச் சோப்பைப் பயன்படுத்தக் கை வேண்டுமே! அந்தக் கைதான் கரணங்கள்.

அழுக்கைத் துடைக்க வேண்டிய கையால் சேற்றை ஊற்றிக் கொண்டால், ஆடை தூய்மையாவது எப்படி?

உயிரானது தனக்குள்ள ஆற்றல் கொண்டு கரணங்களைத் தவறாகப் பயன்படுத்தினால், சகடக்கால் போலப் பிறவிச் சுழலில் சிக்கத்தான் நேரும்.

இறைவன் தந்த கரணங்களைக் கொண்டு அகந்தை அழுக்கைத் துடைப்பதே பிறவி வாராமல் தடுக்கும் வழி.

பிறவிக்குக் காரணமான வினை தீர்வதற்கு வரம் தர வேண்டும் என்று இறைவனிடம் நாம் கேட்க வேண்டிய தில்லை. நம் வினைப் பயனுக்கு ஏற்பவே பலனை அனு பவிப்போம். அந்த வினைப் பயனைக் கூட்டவோ குறைக்கவோ மாட்டான் இறைவன். சாட்சியாக இருந்து பார்த்துக் கொண்டிருப்பான்.

வினைச்சுமை சேராமலிருக்க வேண்டுமாயின் நம் மனம் தூய்மை பெற வேண்டும். அந்தத் தூய்மையும் இறை வனிடம் வேண்டிப் பெறுவது அல்ல. அவன் திவ்விய மங்கள விக்கிரகமாகிய திருவுருவத்தை மனத்திரையிலே அழகோவியமாகத் தீட்டிக் கொண்டால் போதும்! இறைவன் நம் உள்ளத்தில் குடி புகுந்து விடுவான்.

உலகில் தாம் குடியிருக்கும் வீட்டை அவரவரே தூய்மை செய்து கொள்ளக் காண்கின்றோம். அவ்வாறே இறைவனும் தான் குடிபுகுந்த வீடாகிய உள்ளத்தைத் துப்புரவாக்கிக் கொள்வான்.

இதயத்தை இறைவனிடம் ஒப்புவித்து விட்டால், வினையோ பிறப்போ தொடர வழி ஏது?

இத்தகைய சிந்தனை அலை எழும்பும் பொய்கையாக இருப்பது இதோ ஒரு பாடல்!

''வினையே தீர வரமெல்லாம்
வேண்டித் தருவாய் எனஎண்ணி
உனையே நினைந்தேன் அல்லேன், என்
உள்ளம் தூய்மை பெறுதற்கே
அனையே போல்வாய்! உனைமனத்தில்
அழகோ வியமாய்த் தீட்டுகின்றேன்.
பனையே போல்வேன் என்னினும், உன்
பரிவுக் குரியேன் ஆகேனோ!''

இராசகோட்டில் வெள்ளை அதிகாரிகள் சினத்தால் இழி வரலுற அடிகள், அந்த நிலையினின்று மீள்வது எப்படி என்று செய்வதறியாது சிந்தித் திருந்த செய்தியைக் கூறும் இராசைப் படலத்துக்கு இப்பாடல் உரியதாகி உயர்வு பெறுகின்றது.

---

அனை - தாய். பரிவு - இரக்கம். பனை - பனை மரம்.

# 24. அறியாமையும் நின்கொடையாம்

எல்லாப் பொருளிலும் நானே இருக்கின்றேன் என்று உரைத்தான் கண்ண பெருமான். உலகிலுள்ள அனைத்துப் பொருளும் இறைவனுக்கு உடலே. அவற்றில் அவன் உயிராகத் தங்கியுள்ளான். தங்கியுள்ளவனே அவற்றைத் தாங்கியுமுள்ளான்.

உயிர் உடலில் தங்கியுள்ளது. உடலில் தங்கியுள்ள உயிருக்கு உடல்தான் ஆதாரம் என்று தோன்றலாம். ஆனால், உண்மையில் உயிர்தான் உடலுக்கு ஆதாரம். உயிர் பிரிந்துவிட்டால், உடல் செயலற்று வீழ்ந்து விடுகின்றதே!

இதைப்போலவே இறைவன் தங்கியுள்ள அனைத்துப் பொருளும் அவனுக்கு ஆதாரமாகத் தோன்றினும், உண்மையில் இறைவனே அவற்றுக்கு ஆதாரம். இறைவன் இல்லையேல் இயக்கமே இல்லை.

அவன் எல்லாப் பொருளிலும் அந்தர்யாமியாக இருந்து நியமிப்பவனாக உள்ளதை,

''நாம்அவன் இவன்உவன் அவள்இவள் உவள்எவள்
தாம்அவர் இவர்உவர் அதுஇது உதுஎது
வீம்அவை இவைஉவை அவைநலம் தீங்குஅவை
ஆமவை ஆயவை ஆய்நின்ற அவரே''

-என்று நம்மாழ்வார் குறிப்பிடுகின்றார்.

கீதையிலே கண்ணபிரான் ஒவ்வொரு பொருளிலும் தலைமையானதை எடுத்து 'நான் அப்பொருளாக உள்ளேன்' என்று அடுக்குகின்றான். அவன் கூறிய அனைத்தும் உயர்ந்த பொருள்களாகவே உள்ளன. 'உயர்ந்த பொருள்கள் மட்டும் அவன் என்றால், பிற பொருள்களில் அவன் இல்லையா?' என்ற வினா எழலாமே!

அதற்கு விடையும் சுட்டிக்காட்டியுள்ளான். கண்ணன். 'நான் சூதாட்டமாகவும் உள்ளேன்' என்பது அவன் தரும் குறிப்பு. சூதாட்டம் கொடியது தானே! சூதாட்டம் என்ப தால் பிற தாழ்ந்த பொருள்கள் எல்லாம் உபலட்சணத்தால் பெறப்படும் அன்றோ!

நம்மாழ்வாரும் மேலே கண்ட பாடலில் ஐம்பாற் பொருளையும் அடுக்கி, இவை நலம் தீங்கு இவையாகவும் உள்ளான் இறைவன் என்று முடிக்கின்றார். அதாவது நல்ல பொருளாக இருப்பது போலவே தீயபொருளாகவும் அவனே உள்ளான் என்பது பொருள். இறைவனுக்குப் பேதமே இல்லை என்று உறுதிப்படுத்தி, தாம் கூறப்போகும் இறை யுண்மைக்கு முதலிலேயே அடிப்படை அமைத்துக் கொள் கின்றார்.

இதையே பின்னும் விரித்து நல்குரவும் செலவும் என ஒரு பதிகமே பாடிவிடுகின்றார்.

அப்பதிகத்திலுள்ள ஞானம் - மூடம் என்ற தொடரை மட்டும் எடுத்துக் கொள்வோம். அது அறிவு - அறியாமை என்று பொருள்படும். ஞானமூர்த்தி என்று இறைவனை அழைப்பர். அவன் அறிவு மயமானவன் என்பது கருத்து. இங்கே மூடமூர்த்தியும் அவனே ஆவதைக் காண்கின்றோம்.

இறைவன் மூடமாக - மூடமூர்த்தியாக இருப்பன், அந்த அறியாமையையும் நாம் போற்ற வேண்டுமா? அறிவுதானே

உயிர்க்குத்தேவை! அறியாமை தேவையா! என்ற வினாக்கள் எழுமே!

அறியாமையும் தேவைதான். அதுவும் இறைவன் கொடுத்த கொடைதான் என்பது ஆன்றோர் கொள்கை என்பது நூல்களால் அறிய முடிகின்றது.

வெய்யில் இருந்தால்தானே நிழல் அருமை தெரிகின்றது. துன்பம் அனுபவித்தவனுக்கே இன்பத்தை முழுமையாக உணர முடிகின்றது, வறுமையில் வாடியவனே செல்வத்தின் பயனை அறிந்து நன்கு துய்ப்பான். அறியாமையில் உழன்றவனே அறிவின் பெருமையை உணர்வான்.

முன்பே தெரிந்த பொருளை மீண்டும் காணும்போது, வியப்பு மேலிடாது. கண்டறியாதன காணும்போதுதான் களிப்பு வருகின்றது.

திருக்குறளை ஒருவன் பார்த்ததே இல்லை. கேள்விப் படவும் இல்லை. ஒருநாள் திருக்குறள் அவனுக்குக் கிடைத்தது. முதற்பாடலைப் படிக்கின்றான். ஆகா என்று வியக்கின்றான். அவன் மனம் கண்டறியாதன கண்டேன் என்று துள்ளுகின்றது. அவன் வியப்புக்கும் துள்ளுவதற்கும் காரணம் அவன் அதுகாறும் திருக்குறளைப் பற்றி அறியாமையேயாகும். முன்பே அவன் திருக்குறளை அறிந்திருப்பானாயின், இவ்வளவு மகிழ்ச்சி உண்டாகுமா?

சென்ற நூற்றாண்டில் சங்க நூல்களை யாரும் கண்டதே இல்லை. கிடைக்கவில்லையே என்று கவலைப் படவும் இல்லை. உ. வே. சாமிநாதையர் அவற்றைத் தேடித் தமிழுலகுக்கு அறிமுகம் செய்தார்.

அந்த நூல்களைக் கண்டவர் வியந்தனர். கற்றவர் நயந்தனர். தமிழில் இத்தகைய நுண் பொருள் நூல்களும் உள்ளனவா என்று இறும்பூது கொண்டு பாராட்டினர்.

அவ்வாறு பாராட்டியதற்குக் காரணம் யாது? அதுகாறும் அவர்கள் அறியாமையேயாகும்.

அவ்வாறு காணாதனவற்றைப் புதுவனவாகக் கண்டு, இன்பம் துய்க்கட்டும் என்ற கருணையாலேயே இறைவன் மூடமூர்த்தியாகவும் உள்ளான். அதாவது அறியாமையை நமக்கு நல்கியுள்ளான்.

அறியாமையை நமக்குக்கொடுத்துள்ளானே இறைவன் என்று நாம் குறைப்பட வேண்டியதில்லை. அறியாமையே அவன் கொடுத்த கொடைகளுட் சிறந்தது என்று நன்றி செலுத்தவேண்டும்.

இந்த அறியாமை இருப்பதால்தானே, அறியாத புதுப் பொருளை அவ்வப்போது அறிதோறும் அமரர்க்கேயும் குறியாத பேரின்பம் பெருகுகின்றது!

இவ்வாறு நம் சிந்தனைக் குதிரையைச் செலுத்தும் சாட்டையாக அமைந்தது ஒரு பாடல்.

''பிறியாத பேதைமையைக் கொடுத்தாய் என்றே
பெருமானே! உனை வெறுத்துப் பேசி நின்றேன்.
அறியாத புதுப்பொருளை அவ்வப்போதே
அறிதோறும் அறிதோறும் அமரர்க் கேயும்
குறியாத பேரின்பம் பெருகக் கண்டேன்.
கூர்த்தஅறி யாமையும்நின் கொடையாம் என்றே
நெறியாலே உணர்கின்றேன். வெயல்இன் றாயின்
நிழலருமை ஏதுஎன்றே நினைக்கின் றேனே!'

அடிகள் தொழிலின் பொருட்டுத் தென்னாப்பிரிவுக்குப் பயணம் மேற்கொண்டார். அங்கு அதுகாறும் அறியாத பல வற்றைப் புதுவதாக அறிகின்றார். அப்போது அவர் அடைந்த மகிழ்வுக்கு அளவே இல்லை. இச்செய்தியைக் கூறும் பகுதி பயணப் படலம். இப்படலத்துக்கு இக்காப்பு இன்றியமையாதது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

---

பேதைமை-அறியாமை. அமரர்க்கேயும்-தேவர்க்குக் கூட. குறியாத - நினைத்துப் பாராத. கூர்த்த-மிகுந்த.

# 25. கவிஎனும் தாளம் தோன்றும்

சோதி நட்சத்திரத்தன்று முத்துச் சிப்பிகள் நீரின் மேலே வந்து வாய் (உடல்) திறந்து மிதக்கும். அப்போது மேகம் திரண்டு மழைத்துளி சிந்தினால், அவற்றுள் ஒன்றை ஏற்றுக் கொண்டு நீருட் சென்றுவிடும். அந்த மழைத் துளியே பருவம் முற்றியபின் நல்லமுத்தாக உருப்பெற்றுப் பெருவிலையன் ஆகின்றது. இப்படி ஒரு நம்பிக்கை உண்டு.

இறைவன் இன்ப வடிவானவன். சோதிமயமானவன். காண்பார்க்குத் தாபம் தீர்க்கும் கார்மேகம் போன்ற திருமேனியன். கைம்மாறு கருதாது கருணை சுரப்பவன்.

ஆதலால் அவனைச் சுகமுறு பேரருட்சோதி மேகமே! என்று அழைக்கலாம்.

சோதி மேகம் என்பது சோதி நட்சத்திரத்தன்று வானில் தோன்றும் மேகம் என்றும் பொருள்படும்.

சோதி நட்சத்திரத்து மேகம் மழைத்துளி சிந்துவது போல, இறைவனாகிய சோதி மேகம் அருள்துளி சிந்தும்.

மழைத்துளி பெறச் சிப்பிகள் மலர்ந்து காத்திருக்கும். அதுபோல் அருள்துளிபெற மனமாகிய கடலில் அறிவாகிய சிப்பி மலர்ந்து காத்திருக்கவேண்டும். காத்திருந்தால் சோதி மேகத்தின் அருள்துளி காதில் விழும்,

சிப்பியில் விழுந்த மழைத்துளி முத்தாகத் திரள்கின்றது. அறிவுச் சிப்பியில் விழுந்த அருள்துளி கவிமுத்தாக உருப் பெறும். சோதி மேகத்தின் அருள்துளி பெறாத அறிவுச் சிப்பிகளில் கவிமுத்துப் பிறக்காது. கசடுதான் பிறக்கும்.

அக்கருத்துக்களைச் செறித்துக் கொண்டுள்ள சீரிய பாடல் இதோ!

"சுகமுறும் பேரருட் சோதி மேகமே!
அகம்எனும் கடலிடை அறிவுச் சிப்பியில்
துகள்அறும் நின்அருள் துளிவிழுந்திடின்
தகவுறக் கவிஎனும் தரளம் தோன்றுமே!"

தென்னாப்பிரிக்காவை அடைந்த அடிகள் புகைவண்டியிலும் இளிவரல் அடைய நேர்ந்தது. அப்போதும் அண்ணல் மனம் பேதலிக்காமல், பொறுமையாக இருந்தார். ஆண்டவன் அருள்துளி அவர் இதயத்தில் இருந்தமையால், மகாத்மாவாக மலர்வதற்கு அடிப்படை அங்கு அமைந்தது என்னும் வரலாறு கூறும் வழிப்படு படலத்துக்குப் பொருத்தமான காப்பு இது.

---

சுகம் - இன்பம். அகம் - மனம். துகள் - குற்றம். தகவு - தகுதி. தரளம் - முத்து.

# 26. என்பாட்டுள் நின்றாய்!

இறைவன் எங்கோ எட்டாத உயரத்தில் இருப்பவன் அல்லன். அனைத்துயிர்களில் மட்டுமல்ல; உயிரில்லாத பொருள்களிலும் உருவில்லாத பண்புகள், கலைகளிலும் கூட இருப்பவன் என்பது ஆன்றோர் கொள்கை.

இவ்வாறு சேதனம், அசேதனம் அனைத்திலும் இறைவன் உள்ளான் எனில், ஆருயிர் அனைத்தும் தம்மில் உறவுடையன என்று தேறுகின்றது அன்றோ!

இந்தத் தத்துவத்தை உணர்ந்து கொண்டால், மனிதர்கள், பிறிதின் நோய் தம் நோய் போல் கருதுவர். துன்புறும் உயிர்களுக்கு ஐயோ என்று இரங்குவர். அவ்வாறு இரங்காமல் இறைவன் எங்கோ உள்ளான் என்பவர் பெருவீணர்களே யாவர்.

எளியோர்க்குச் செய்யும் பணி இறைவன் பணியே ஆகும்.

"பண்ணுள்நின் றாய்!அந்தப் பண்ணினைநாடும்என்
பாட்டுள் நின்றாய்!
எண்ணுள்நின் றாய்!எண் எழுத்துள்நின்றாய்! உயிர்
யாவையுமாய்
மண்ணுள்நின் றாய்!என்று அறிந்து எளியோர்க்கு
மனம் கசியார்,
'விண்ணுள்நின் றாய்'என்பவர் விமலா!பெரு
வீணர்களே!

அடிகள் தென்னாப்பிரிக்காவில் தங்கிப் பலநிறத் தாரோடும் சமத்துவமாக உறவாடி, வாழ்வாங்கு வாழ்வதற்குரிய வழி முறையைப் போதித்த செய்தி கூறும் தொடர்புப் படலத்துக்கு இக்காப்பு எழில் கூட்டுகின்றது.

---

பண் - இசை. எண் - மனம். எண் - கணிதம்.

# 27. மறுப்பிறவி ஆகாமல் வரம்தா

பிறவிப் பெருங்கடல் நீந்துவதற்கு உதவுவது இறைவன் அடி என்பர் வள்ளுவர்.

இறைவன் கண் செங்கண் எனப்படும். செங்கண் என்பதற்குச் சாதாரணப் பொருள் சிவந்தகண் என்பது. செம்மையான கண் என்பதே சிறந்த பொருள். செம்மை என்பது நேர்மை. அதாவது நடுநிலை. சமநோக்கு. இறைவன் எவ்வுயிரையும் சமமாகவே நோக்குவதால் செங்கண்மால் எனப்பட்டான்.

மால் என்பது பெருமை என்றும் பேரன்பு (மயக்கம்) என்றும் பொருள்படும். இறைவன் இயல்பாகவே பெருமை யுடையவன். ஆதலால், பெருமை என்பது சிறப்புப் பொருள் அல்ல.

சர்வ சுவாமியான இறைவன் தன்னை அடைந்த அடியாருடைய தகுதிகளை ஆராயாமல், தன்னையே அவர் களுக்கு வழங்கி விடுகின்ற பேரன்புதான் மால் என்பதற்குத் தக்க பொருள்.

கணிகண்ணன் பின்னேபோனது, பார்த்தனுக்குத் தேர் ஊர்ந்தது. பஞ்சவர்க்குத் தூதனானது முதலியவற்றை இறைவன் பேரன்புக்கு—தன்னையே தரும் செயலுக்கு உதாரணங்களாக அடுக்கலாம்.

இறைவன் ஒருவனே நம் பிறவியைப் பயன்பெறச் செய்ய வல்லவன். பிறப்பறுப்பது நம் கையில் இல்லை. அது வினையின் பயனாக வருவது. ஆனால் இனி எடுக்கும் பிறவி யாகினும் அன்புடைப் பிறவியாக அமைய நாம் விரும்ப

வேண்டும். அடுத்த பிறப்பாகிலும் குற்றப் பிறப்பாகாமல் தூய பிறப்பாகுமாறு இறைவனிடம் மன்றாடுவதொன்றே நாம் செய்ய இயல்வது!

இத்தகைய எண்ண முத்துக்கள் விளையும் வலம்புரிச் சங்காக விளங்குவது ஒரு பாடல் :

"உறுபிறவி யான்எடுத்த ஒருகோடி
யானாலும், உண்மை அன்பு
பெறுபிறவி ஒன்றேனும் பெற்றிலெனே!
பெறின்,மீண்டும் பிறப்பேன் கொல்லோ!
மறுபிறவி யேனும்ஒரு மறுப்பிறவி
ஆகாமல் வரம்தந் தாள்வாய்!
தெறுபிறவிப் பெருங்கடற்குத் தெப்பம்எனும்
பதயுகளச் செங்கண் மாலே"

தென்னாப்பிரிக்காவில் பல இழிவுகளைப் பொறுத்துக் கொண்டு இந்தியரின் இழிநிலை அறிந்து, அதை மாற்ற முனைந்த அண்ணல், முதலில் தாம் மேற்கொண்ட பெரு வழக்கினைச் சமரசமாகத் தீர்த்தமை கூறும் படலம் இடர் தொடர் படலம். இதற்கு இப்பாடல் பொருத்தமானது எனத் தடையில்லை.

---

உறுபிறவி - பெற்றபிறப்பு. மறுப்பிறவி - குற்றமுள்ள பிறப்பு. தெறுபிறவி - துன்பம் தரும் பிறவி. பதயுகளம் - இரு பாதங்கள்.

# 28. நமன்நாண நல்லருள் தருவாய்

பிறவிப் பெரும்பயன் தொண்டு செய்வதே. தொண்டுச் செல்வமும் எல்லோர்க்கும் எளிதில் வாய்க்காது. அதற்குப் பயிற்சி வேண்டும், பயிற்சி பெறுவது எப்படி?

இறைவன்பால் நம்பிக்கை வேண்டும். அந்த நம்பிக் கையை மேலும் மேலும் வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும். இறைவன் திருக்கோவிலை வணங்குதல், இறைவன் திருவடி களைச் சிந்தித்தல் முதலியன நம்பிக்கை வளர்க்கும் வழி களாகும். நம்பிக்கை வளர்ந்தால் அன்பர்களுக்குத் தொண்டு செய்யும் பேறு கிட்டும். இறைவனிடம் பற்று வைப்பவரே அன்பர்கள் ஆவர். உயிர்கள் எல்லாம் இறைவடிவம் என்ப தால் எல்லாருமே அன்பர்கள் தாமே!

"அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந்து எய்தும்"

என்று தொண்டுக்கு ஆசைப்பட்டார் தாயுமானவர். அன்பர்க்குச் செய்யும் தொண்டு ஆண்டவன் தொண்டாகவே முடியும்.

அந்தத் தொண்டுச் செல்வம் கிட்டிவிட்டால், நமனையே வென்றுவிடலாம். உயிர்த்தொண்டு செய்பவனை அணுக லாமா என்று கூசி எமன் விலகிச் செல்வான், எமன் கைப் பட்டால்தானே மறுபிறவி உண்டாகும்!

எமன் கைப்படாமல், இறைவன் கால் பட்டால் மறுபிறவி வருமா? இறைவன் கால்பட வேண்டுமானால், தொண்டுவழிப் படல் வேண்டும், இத்தகைய நினைவலைகள் எழும்பும் கடல் ஒரு பாடல்,

காணக் கொடுத்துவைத் தேன்திருக்கோவில்.
கழல்கள் சென்னி
பூணக் கொடுத்துவைத் தேன்அன்பர்க்கே தொண்டு
பூண்டுஉன் அன்பு
பேணக் கொடுத்துவைத் தேன்.கொல்ல என்பின்
சுழலும் நமன்
நாணக்கொடுத்துவைப் பாய்!அரங்கா! உன்தன்
நல்லருளே!

தென்னாப்பிரிக்காவில் வழக்குப்பணி முடிவுற்று மீள எண்ணு கையில், அங்குள்ள இந்தியர்க்குப் பேரிடர் ஒன்று வருவதை உணர்ந்து, நாடு திரும்பாமல் அங்கேயே அன்பர் பணியைத் தொடர்ந்தமை கூறுவது பணிதொடர் படலம். இப்படலத் துக்கு இக்காப்பு ஒளி செய்கின்றது.

---

கழல்கள் - திருவடிகள். சென்னி - தலை. பேண - அடைய.

# 29. இன்னொளி

இறைவன் தாயன்பு உடையவன். பிள்ளை, தாயிடம் எதுவும் கேட்க வேண்டியதில்லை. மகவின் தேவை அறிந்து தாயே, தரவேண்டியன தருவாள். இறைவனும் நமக்கு வேண்டியது இன்னதென்றறிந்து உதவுவான். தாய் தருவதை பிள்ளை மறுக்காமலிருந்தால் போதும். இறைவன் தருவதை மறுக்காமல் ஏற்பது ஒன்றே நாம் செய்ய வேண்டியது. நாம் ஏதும் கேட்டுப் பெற வேண்டுவதில்லை.

வேறு ஏதும் கேட்காவிடினும் அவன் திருவருளைக் கேட்கலாமா! அவன் கருணை வடிவானவன். தானே கருணை செய்வான்! அவனிடம் அதையுங் கேட்க வேண்டா!

உலகில் உள்ள மட்டும் நம் உடலை ஓம்ப வேண்டுமே! அதற்குரிய சாதனங்களையாவது இறைவனிடம் கேட்க லாமே! கேட்காமலே எல்லாம் தரும் கற்பகத்திடம் சென்று, காஞ்சிரங்காய் கேட்கலாமா? அழியும் பொருள் கேட்க வேண்டா! ஆனால்,

> "நாறு இணர்த் துழாயோன் நல்கின் அல்லாது
> ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்"

என்று அறுதியிட்டுள்ளனர். அதனால் வீடுபேறு அவனால் மட்டுமே தரமுடியும். அதை அவனிடம் கேட்கலாமே!

வீடும் வேண்டா விறலினர் என்று அருளாளர் போற்றப் படுகின்றார். வீடு தருவதும் தராமலிருப்பதும் இறைவன் விருப்பம். அதைக் கேட்க நான் யார்?

அப்படியாயின், இறைவனிடம் எதைத்தான் கேட்பது? அவன் திருநாமங்கள் இறைவனை விடச் சிறந்தன என்பர். அவன் எட்ட இருந்தாலும் திருநாமங்கள் கிட்டி வந்து உதவும் என்பது ஆன்றோர் நம்பிக்கை. அவன் கை விட்டாலும், அவன் பெயர் நம்மைக் கைவிடாது. திரௌ பதிமுறையிட்டபோது, கண்ணன் தூரத்தில் துவாரகையில் இருந்தான். ஆனால் அவன் திருநாமம் அவளுக்குப் புடவை சுரந்தது.

அவன் திருப்பெயர் அறிவு மயமானது; இன்ப மயமானது; செழுமையானது. அந்தத் திருப்பெயரை நாவில் வைத்துக் கொண்டால் போதும்!

திருப்பெயரால் நமக்கு வரும் நன்மை என்ன? நம் இதயம், உலகப் பற்றால் இருள் அடைந்துள்ளது. இருளில் இறைவன் இருக்கமாட்டான். அவன் குடியிருக்க வேண்டு மென்றால், அங்கு ஒளியேற்ற வேண்டும். வீட்டில் ஒளி யேற்றச் சாதாரண விளக்குப் போதும். இதயத்தில் ஒளி ஏற்ற இறைவன் திருநாமமே விளக்கு ஆகும்,

வீட்டில் இடைகழியில் (வாசலில்) விளக்கை ஏற்றி வைத்தால், அதன் ஒளி வீட்டுள்ளும் பரவும். வாசலுக்கு வெளியிலும் ஒளிரும். நம் உடலாகிய வீட்டிற்கு வாசல் நம் வாய்தான். அந்த வாசலில் இறைவன் திருநாமமாகிய விளக்கை ஏற்றி வைத்தால்,—அதாவது இறைவன் திரு நாமத்தை வாயால் சொன்னால்—உள்ளும் புறமும் ஒளி பரவும்.

இந்தச் சிந்தனைச் சுடர்க்கு ஆதாரமாக உள்ளது இந்தப் பாடல்.

அருள்பெறக் கருதி அன்று; உன்
அடிபெறக் கருதி அன்று;
பொருள்பெறக் கருதி அன்று;
புகழ்பெறக் கருதி அன்று
தெருள்பெறு நின்றன் இன்பச்
செழும்பெயர் நாவில் வைத்தேன்
இருள்பெறும் இதயந் தன்னில்
இன்னொலி தழைப்ப தற்கே!

தென்னாப்பிரிக்காவில் பாலசுந்தரம் என்ற அன்பரின் அவலம் கண்டு, ஆட்சியாளரின் கொடுமையைக் எதிர்த்து குரல் எழுப்பி, இந்தியர் வாழ்வு விடிவதற்குப் பொருளோ புகழோ கருதாமல் தொண்டு என்னும் ஒளிச்சுடரை ஏற்றிய பகுதி கூறும் படலம். கூலிக்கு இரங்கிய படலம். அதற்கு மிக மிகத் தகுதியானது இந்தக் காப்பு.

---

தெருள் - ஞானம்.

# 30. ஒரு விரதம் தாராய்

இறைவனுக்கு நெடுமால் என்று ஒரு பெயர். மால் என்றால் வியாமோகம் என்பர். மட்டற்ற அன்பு என்பது அதன் பொருள். அன்பருக்கு உதவும் போது கொடை மடம் பட்டு உதவும் பண்பு அது.

அத்தகைய இறைவன் நமக்கு வேண்டியவற்றைப் பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிந்து தானே தருவான். அவனிடம் பொன்னோ பொருளோ போகமோ இரந்து பெற எண்ணுவது கூடாது.

நாம் எதுவுமே அவனிடம் கேட்கக் கூடாதா? கேட்கக் கூடியது எது என்பதை இங்கே சிறிது சிந்தனைக்கு இலக் காக்குவோம்.

நம்மை ஒருவர் இகழ்கின்றார். பற்றி இழுத்து அடிக் கின்றார். அடிப்பதோடு அவர் ஆத்திரம் அடங்கவில்லை. எற்றித் தள்ளுகின்றார். அப்போது நாம் என்ன செய்ய வேண்டும்? திருப்பித் தாக்கலாமா? பிறர் அடிபடும்போது, அவரைக் காக்கும் பொருட்டு அடித்தவரை அடித்து விலக் கலாம். ஆனால் நாம் அடிபடும்போது, அடித்தவரைத் தாக்கலாகாது என்கின்றன அறநூல்கள். அறநூல்கள் சொல்லுவதைக் காந்தியடிகள் செயலாக்கிக் காட்டினார்.

அடிகளின் வழியிலே நாம் அடித்தவரை அடிக்காம லிருப்பது மட்டுமல்ல. அவரை வெறுக்கவும் கூடாது.

அடித்தவரை அடிப்பதுதானே சராசரி மனிதரின் இயல்பு. ஒருகால் அடிக்காமல் இருக்கலாம். பொறுக்காமல் இருக்க இயலுமா? இயலும் எப்படி?

அடிபட வேண்டியது நம் வினைப்பயன் போலும் என்று ஊழில் நம்பிக்கை வளர்த்துக் கொண்டோமானால், வெறுக் காமலும் இருக்கலாம். வெறுக்காமை மட்டும் என்ன, அடித்த வரிடம் அன்பு காட்டலாம். அடித்த கை வலிக்குமே என்று பச்சாதாபப் படலாம்.

வினைப்பயன் என்று கருதுவதை விரதமாகப் பயிலுதல் வேண்டும். அந்தப் பயிற்சி மகாத்மாக்களுக்கு எளிதாக இருக்கலாம். அல்லாத்மாக்களுக்கு எளியதாகுமா?

இறைவன் அருள் இருந்தால் எளிதாகி விடும். ஆதலால் அந்த விரதத்தை இறைவனிடம் கேட்கலாம்.

'எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா!' என்றார் பாரதியார். வாழ்வில் நமக்குப் பல பொருள்கள் கிடைக்கின்றன. நல்ல உணவு, நல்ல உடை முதலியன நம்மிடம் உள்ளன, அவை நம் முயற்சியால் வந்தனவா? நம் முயற்சியால் கிட்டியவை ஆயின், முயல்பவர் அனைவரும் பெறவேண்டுமே. எவ்வளவோ முயன்றும் சிலர் உண்டி உணவு கிடைக்காமல் தவிக்கின்றனரே!

ஆதலால் அவை நம் முயற்சியால் வந்தன அல்ல என்பது உறுதி. அப்படியாயின் அவை எப்படி வந்தன? அவை ஆண்டவன் திருவருளால் வந்தன என்பதே உண்மை!

நம் முயற்சியால் வாராதவற்றை நம் முயற்சியால் வந்தன என்று கருதுவது, அகந்தையைத்தான் வளர்க்கும்: அகந்தை அவாவை வளர்க்கும்; உலோப குணம் வரும். ஆதலால் அகந்தைக்கு இடம் தரலாகாது.

நாம் பெற்றவை அனைத்தும் நம்மால் வந்தன அல்ல. இறைவனின் கொடை என்று கருதுவது அகந்தை வாராமல் தடுக்கும் வழி.

நம்மிடமுள்ள செல்வம் ஆண்டவன் தந்ததாயின் அது நமக்குச் சொந்தமாக வழி உண்டா? அது தந்தவனுக்கே அன்றோ உரியது! இறைவன் தன் செல்வத்தை நம்மிடம் ஒப்புவித்துள்ளான்! ஆம் நம்மை அந்தச் செல்வத்துக்குத் தர்மகர்த்தாவாக நியமனம் செய்துள்ளான்.

தர்மகர்த்தா, தன்னிடம் ஒப்புவிக்கப்பட்ட செல்வத்தைத் தனக்காக வைத்துக் கொள்ளலாமா?

நாம் ஆண்டவன் சொத்துக்குத் தர்மகர்த்தாவாக இருப்பதால், அச்செல்வத்தை நம் உரிமை என்று கருத இடமில்லை.

நாம் அச்செல்வத்தைப் பாதுகாப்பதற்கு ஊதியமாக நம் எளிய தேவைக்குச் சிறிது அனுபவிக்கலாம். மீதியை என்ன செய்வது? இறைவனுக்காகச் செலவு செய்தல் வேண்டும்.

இறைவனுக்குச் செலவு செய்வது என்றால். கோவில் கட்டுவதா? கும்பாபிஷேகம் செய்வதா? கொடிமரம் நாட்டுவதா? தேர் ஓட்டுவதா? திருவிழா நடத்துவதா? மேளங்கள் முழங்குவதா?

இப்படிச் செலவிடுவதற்காக ஆண்டவன் நம்மைத் தர்மகர்த்தா ஆக்கவில்லை.

படமாடும் தெய்வத்துக்கு அந்தச் செல்வம் தேவையில்லை. கொடுத்ததைத் திரும்பப் பெறுவதும் பண்பாடு இல்லை. நம் கண்ணெதிரே எண்ணத் தெரியாத தெய்வங்கள் நடமாடுகின்றனவே! ஒருவாய்க் கூழுக்கும் வக்கின்றிப் பல தெய்வங்கள் தெருவில் ஊர்வலம் வருகின்றனவே! மானமாக வாழ நினைத்தாலும் செய்யத் தொழில் கிட்டாமல் தெருவலம் வருகின்றனவே! கற்க விருப்பமும் திறமையும் இருந்தும் கலைக் கூடத்தின் படிகளில் ஏறுதவற்கு

இயலாமல், தடைப்பட்டுக் கிடக்கின்றனவே! வந்த பிணிக்கு மருந்து வாங்க வழியின்றி, மடிந்து மண்ணாகின்றனவே! பட்டுடை வேண்டா, பழங் கந்தை கூட இல்லாமல், கையால் மானல் காக்க முயல்கின்றனவே! இவைகள் எல்லாம் எவை? இவை தாம் நடமாடும் தெய்வங்கள்! இந்தத் தெய்வங்களுக்குப் பயன்படுத்துக என்றே அந்த தெய்வம் நமக்குத் தந்துள்ளது.

இந்தத் தெய்வங்களுக்கு இறங்கிப் பிச்சை தந்தால் போதுமா? அந்தத் தெய்வங்களைப் பிச்சைக்காரர் ஆக்குவது பெரும் பாவம்.

தனியொருவனுக்குத் தருவது ஈகை. அதையே ஐயமும் பிச்சையும் என்பர். சமுதாயத்துக்குப் பயன்படுமாறு தருவது ஒப்புரவு.

பயன் மரம், ஊருணி, மருந்து மரம் ஆகியன போன்று ஒப்புரவு செய்தல் வேண்டும் என்றார் வள்ளுவர்.

செல்வம் கை வந்தால் சிந்தை திறம்பிப் போகும். அந்தச் செல்வத்தை ஒப்புரவுக்குப் பயன்படுத்த மனம் வாராது. பிறர்க்கு இரங்கும் ஈர நெஞ்சம் இறைவன் அருளால் தான் கிடைத்தல் வேண்டும். ஆதலால் ஈர நெஞ்சம் இறைவா நீ தாராய் என்று பிரார்த்தித்துப் பெறலாம்.

இறைவனிடம் ஈர நெஞ்சம் பெறவேண்டுமாயின் அவனை நம் நெஞ்சில் நிறுத்திக் கொள்ளல் வேண்டும்.

இவ்வாறு நினைவுத்துளிர் அரும்பும் கொடியாகப் படர்கின்றது ஒரு பாடல்.

எனைஒருவர் இகழ்ந்தாலும் இழுத்தாலும்
அடித்தாலும் எற்றினாலும்
வினைவலிய தெனஅமைந்து, வெறுக்காமல்
பொறுக்கும் ஒரு விரதம் தாராய்!

வனைகலன்நல் லுண்டிஉடை வந்தன நின்
கொடை என்று மதித்து, நீஎன்
நினைவிலக ஆதுலர்க்கு நெஞ்சிரங்கும்
படிஅருள்வாய்! நெடிய மாலே!

தென்னாப்பிரிக்க நாட்டில் அடிகள், ஒரு சிறுவனுடன் வேடிக்கையாகப் பேசியமையால், அவன் சத்துவ உண்டிய னாக மாறுமளவுக்கு நெஞ்சிரங்கினான் என்ற செய்தி கூறுவது அசதிப்படலம். அதற்கு உசிதமான காப்பு இது.

வனைதல் - அணிதல். கலன் - ஆபரணம். வந்தன - வந்த செல்வங்கள். மதித்து - நினைத்து. ஆதுலர் - வருந்தி வந்தவர்.

# 31. சன்ம நோய்க்கு மருந்து

சுழன்று கொண்டேயிருப்பது காற்றாடியின் இயல்பு. அந்தச்சுழற்சி நிற்கவே செய்யாதா. நிற்கும். எப்போது?

காற்றாடி ஏன் சுழல்கின்றது. காற்று அடிப்பதால், காற்று நின்றுபோனால் காற்றாடியும் சுழலாது. அல்லது காற்று வீசாத இடத்தில் பாதுகாப்பாக வைத்துவிட்டாலும் அது சுழலாது.

வண்டிச் சக்கரம் சுழன்று சுழன்று வரும். சுழல்வதற்குக் காரணம் வண்டியின் இயக்கம். வண்டி இயங்கா விட்டால், சக்கரம் சுழலாது.

பிறவியும் மாறிமாறி வந்து கொண்டேயிருக்கும் பிறவிக்கு முடிவே இல்லையா? பிறவி ஏன் வந்தது? ஏன் தொடர்கின்றது? இத்தகைய தத்துவ விசாரணையே பிறவிச் சுழலிலிருந்து தப்புவதற்குரிய முதற்படி.

உயிர் அனாதி. அனாதியாகவே அதனுடன் ஆணவம் (அகந்தை) என்ற அழுக்குக் கலந்துள்ளது. அந்த அழுக்கைத் துடைத்தால்தான், உயிர் தன் உண்மை இயல்பை அறிந்து இறையனுபவம் பெற இயலும்.

அந்த அழுக்கை உயிரானது கழுவிக் கொள்ளட்டும் என்ற கருணையாலேயே கருவி கரணங்களோடு கூடிய உடலை (பிறவியை)த் தருகின்றான் இறைவன். ஆனால் உயிரானது குளிக்கப் போய்ச் சேறு பூசிக் கொள்கின்றது. அதற்குக் காரணம் மாயை என்ற அறியாமையே. ஆக் அழுக்கைத் துடைக்கப் போன உயிர், அதனுடன் மாயை, வினை என்ற இரண்டு அழுக்கையும் சேர்த்துக் கொள்கின்றது.

அந்த அழுக்கு மூன்றனுள் அறியாமை (மாயை) இடையே வந்தது. உயிர் அறிவு மயமானது. ஆனால் அதன் அறிவு, ஒடுங்கியுள்ளது, அழிந்து விடவில்லை. அழியவே செய்யாது. என்றாவது ஒருநாள் அந்த அறிவு வெளிப்படவே செய்யும்! அறிவு வெளிப்படும்போது அறியாமை நிற்குமா? சூரியன் தோன்றும்போது இருள் என்ன ஆகும்!

அறியாமை விலகினால், அதனால் வந்த வினையும் மறையும் வினை மறைந்தால். உயிர் தன் இயல்பையும் உரிமையையும் உணர்ந்து கொள்ளும். அந்த உணர்வு மேலோங்கியவுடன் அனாதி அழுக்காகிய ஆணவம் கழன்று விடும், ஆணவம் கழன்றவுடன் இறைவனுடன் ஒன்றிக் கைங்கரியச் செல்வப் பெருநிலை அடையும். அந்நிலையே பேரா இயற்கை என்பர் வள்ளுவர்.

நம் அறிவு மேலெழ வேண்டுமாயின், ஒரு தூண்டுகோல் வேண்டாவா? சுடர் சுருங்கிய விளக்குத் தானாகவே ஓங்கி எரியுமா?

அறிவைத் தூண்டிவிடும் தூண்டுகோல் எது? இறைவன் கடைக்கண் பார்வையே அது. அந்த அருள் நோக்கமே நம் பிறவிக்கு மருந்து.

அறிவு மேல் எழாத வரையும் பிறவி உண்டு. பிறவி தோறும் பெற்ற தாய், தந்தை, சேய் ஆகியவர்க்கு அளவு கூற இயலுமா? எடுத்த உடலுக்காவது எண்ணிக்கை உண்டா? அந்த உடலால் தேடிக் கொண்ட வினைக்குத்தான் அளவு உண்டா?

இத்தகைய ஆராய்ச்சிப் பயிர் முளைக்கும் விதையான ஒரு பாடல் இதோ?

தாய்க்கும் கணக்கில்லை. தந்தைக்கும் கணக்
கில்லை. பெற்ற
சேய்க்கும் கணக்கில்லை. தேகத்திற்கும் கணக்
கில்லை. கன்ம
நோய்க்கும் கணக்கில்லை. நுன்னருள் தாமரை
நோக்கம் என்மேல்
வாய்க்கும் கணக்கில்லை யேல் சன்ம நோய்க்கு
மருந்தில்லையே!

சேக்குமகதாபு என்பவன் காந்தியடிகளின் பாலிய நண்பன். அண்ணலை ஊன் உண்பதற்கும் பரத்தை வீடு சேர்வதற்கும் ஊக்கியவன் அவன்.

தென்னாப்பிரிக்காவிலும் அண்ணலைத் தேடிச் சென்றான். "முன்னைய தீமைகளைத் துறந்துவிட்டேன். என்னை ஆதரியுங்கள்" என்று முறையிட்டான். திருந்தியிருப்பான்; இல்லையேல், திருந்திவிடுவான், திருந்திவிடலாம் என்று புகலிடம் கொடுத்தார் அண்ணல். அவன் திருந்தவே இல்லை. அண்ணல் குடியிருந்த கோயிலைப் புனித மிழக்கச் செய்தான்.

தீயவனின் இயல்பு ஒழிக்கவே முடியாது என்று கூறும் இப்பாடல், தீயவனை ஒழிக்க முடியாத இயல்பைக் கூறும் தோல்விப் படலத்துக்குப் பொருள் பொதிந்த காப்பாக உள்ளது.

---

சேய் - மகவு. நுன் - உனது. நோக்கம் - பார்வை. வாய்க்கும் கணக்கு - அடைகின்ற பேறு.

# 32. கருணை வெள்ளம்

இறைவன், சொல் மனங்களுக்கு அப்பாற்பட்டவன். 'எப்பாலவர்க்கும் அப்பாலவன்', 'அப்பால் முதலாய் நின்ற அளப்பரிய ஆரமுது' என்பர் ஆன்றோர்.

அப்பாற்பட்டே இருந்தால் இறைவனால் உயிர்களுக்கு வரும் நன்மையாது?

இறைவன் அப்பாலவன் ஆயினும் அருளுடையவன். தன்னை அணுகி அனுபவிக்க உரிமை இருந்தும் அதை மறந்து வருந்தும் உயிர்கள் பால் இரங்கிப் படிப்படியாக இறங்கி வருகின்றான்.

பரம் என்ற நிலையிலிருந்து இறங்கி வரும் படிகள் வியூகம், விபவம், அந்தர் யாமித்துவம். அர்ச்சை என்பனவாம்.

பரம் என்ற முதல் நிலையை ஆவரண நீருக்கு ஒப்பிடுவர். அண்டத்துக்கு அப்பால் பெருகிக் கிடப்பது ஆவரண நீர். தண்ணீர் வேட்கை கொண்டவனுக்கு அப்பால் முதலாய் நின்ற அளப்பரிய ஆரமுது உடன் பயன்படுமா? அதுபோல் பரத்துவ நிலையும் உயிர்களுக்குப் பயன் படுவது அரிதினும் அரிதாம்.

அடுத்த வியூகத்தைப் பாற்கடலுக்கு ஒப்பிடுவர். பாற்கடல் மிக்க நெடுந்தொலைவில் இல்லாமல், இவ்வுலகிலேயே எங்கோ இருப்பதாகக் கருதப்படுகின்றது. நீர் வேட்கை கொண்டவன், உடனே அதனால் பயன்பெற இயலாது. அதைப் போன்றே வியூகமும் உயிர்களுக்குப் பயன் படுவது அரிது.

அந்தர் யாமித்துவத்தை நிலத்தடி நீருக்கு ஒப்பிடுவர். நீர் வேட்கை கொண்டவனுக்கு அவன் காலடியிலேயே நிலத்தடி நீர் உள்ளது. ஆயினும் அதை உடனே அள்ளிப் பருக இயலுமா? கொட்டும் குந்தாலியும் கொண்டு தோண்டினால் அன்றி, நிலத்தடி நீர் பெற இயலாது அதைப் போன்றது தான் இறையனுபவம் பெற விழையும் உயிர்களுக்கு அந்தர் யாமித்துவமும்.

விபவம் என்பது அவதாரம். அதனைப் பெருக்காறு என்பர், நீர்ப் பெருக்கு வரும் காலத்தில் நீர்வேட்கை கொண்டவர் பருகலாம். வேறு காலத்தில் ஆறு வறண்டுவிடும். அப்போது விடாய்த்தவர்க்கு அதனால் பயன் இல்லை. அது போன்றது விபவம். அவதார காலத்தில் உடன் இருக்கும் பேறு பெற்றவர் பயன் அடைவர். அவதாரம் முடிந்த பிறகு பிறந்தார்க்கு விபவம் பயன் படுவது அரிது.

அர்ச்சை என்பது இறுதி நிலை, ஆலயங்கள் தோறும் கண்காணும் வடிவத்துடன் சிலை வடிவமாக எழுந்தருளி யிருக்கும் நிலைதான் அர்ச்சை. அதை நீர் தேங்கின மடுக்களுக்கு ஒப்பிடுவர். வெள்ளப்பெருக்கு நின்று போனாலும், வழியில் மடுக்களில் தேங்கிய நீர், நீடித்து உயிர் களின் வேட்கை தணிக்கும். இதுபோல் உயிர்களுக்கு என்றும் பயன்படும் நிலை அர்ச்சை.

சாத்திரங்களால் திருத்த இயலாமல். உலகப் பற்றில் ஈடுபட்டு இறையனுபவத்தை வெறுத்து விலகுகின்ற சேதனர்க்கு, அந்த வெறுப்பை மாற்றி விருப்பை உண் டாக்குவது அர்ச்சை. விருப்பு விளைந்தால் போதும். அதுவே இறைவனை அடைவதற்கு எளிய உபாயமாகும். அந்த உபாயத்தால் இறையனுபவம் பெறச் செய்வது அர்ச்சை.

அர்ச்சைத் திருப்பதிகளில் முதன்மையானது திருவரங்கம். கோவில் என்றே வழங்கும் பெருமையுடையது அது.

அடுத்தது திருவேங்கடம். மண்ணோர்க்கும் விண்ணோர்க்கும் கண்ணாக இருப்பது அது.

ஆண்டவன் அர்ச்சை நிலை அடைவது தன் பெருங் கருணையாலேயே!

ஒருவன்பால் கருணை உண்டா இல்லையா என்பதை எப்படி அறிகின்றோம்! உள்ளத்தில் உள்ளன அறிவிப்பது கண் என்பர். ''அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்! ஆர்வலர் புன்கண்ணீர் பூசல்தரும்'' என்பது குறள்.

அர்ச்சையை அடியவர்கள் கற்சிலை பொற்சிலை என்று நினைப்பதில்லை. அவ்வாறு நினைப்பது பெருங்கேடு என்பர். ''அர்ச்சை வடிவமாக இறைவனே நேரில் காட்சி தருகின்றான். அவன் நம் குறைகளைக் கேட்பான். கேட்டு இரங்கிக் கருணை செய்வான்'' என்றே நம்புகின்றனர்; வழிபடுகின்றனர். அவர்கள் நம்பிக்கையும் வழிபாடும் வீணாவதில்லை. அவர்கள் மனத்தில் ஒருவகை ஆறுதலும் அமைதியும் உற்சாகமும் பெறுவதை இன்றும் கண்கூடாகக் காண்கின்றோம்.

திருவெங்கடமலையில் நின்ற திருக்கோலத்திலுள்ள இறைவனின் திருக்கண்களிலிருந்து அருள் வெள்ளம் பொங்கிப் பாய்கின்றது. அதற்கு எல்லையிருப்பதாகத் தெரியவில்லை. அதை யாரும் அளவிட்டுரைக்க இயலாது.

அந்த அருள் வெள்ளமானது. தீ வினைப்பயனால் உயிர்கள் விழும் பொருட்டு வாய் பிளந்து நிற்கின்ற நரகமாகிய பள்ளத்தைத் தூர்த்துவிட்டது. அந்தக் கருணைக்கு இலக்கானால், நரகம் இல்லை என்பது கருத்து.

நரகக் குழியைத் தூர்த்ததோடு அந்த வெள்ளம் அடங்கி விட்டதா?

இறைவன்பால் மனம் வைக்காத உயிர்களின் மனனக மனம் அறக்கழுவுவதற்காக, அவை யிருக்கும்இடம் தேடி உலகெங்கும் பரவுகின்றது.

இத்தகைய உணர்வலைகளை மனக்கடலில் எழுப்பும் சிறுகல்லாக உள்ளது ஒரு பாடல்.

விள்ளற் கரும்புகழ் வேங்கட வெற்பன்
விழிக் கருணை
வெள்ளப் பெருக்கின் அளவுஅடி யேன் விளம்
பும் தரமோ!
கள்ளக் கொடுவினை யேன்சென்று சேரும்
கடுநிரயப்
பள்ளத்தை யும்தூர்த்து உலகெங்கும் ஓடிப்
பரந்ததுவே!

தாயகம் திரும்பிய அடிகள், தென்னாப்பிரிக்காவில் இந்தியர் படும் கொடுமைகளை விளக்கி இங்குப் பிரசாரம் செய்து மக்களின் அனுதாபத்தைப் பெற்றார்.

ஊரில் தொற்றுநோய் பரவியபோது, சமூகத் தொண்டு மேற்கொண்டார்.

அண்ணலின் அருள்வெள்ளம் தென்னாப்பிரிக்காவோடு நின்று விடாமல், தாயகம் எங்கும் பெருகிப் பரவிய செய்தி கூறுவது தாயகப்படலம். அதற்கு இன்றியமையாத காப்பு இது.

---

விள்ளற்கு - சொல்லுதற்கு. வெற்பு - மலை. விழி - கண். விளம்புதல் - சொல்லுதல். நிரயம் - நரகம். தூர்த்து - மூடி, பரந்தது - பரவியது.

# 33. இறைவனை எய்தற்கு இயைவது

புளியம் பிஞ்சு நமக்குத் தெரியும். அதில் தோல் வேறு சதை வேறு எனப் பிரிந்திராமல் ஒன்றாகவே பின்னிப்பிணைந் திருக்கும், அந்தப் பிஞ்சே பழுக்கும்போது, ஓடு (மேல்தோல்) தனியாகப் பிரிந்திருக்கும். இலேசாகத் தட்டினால் போதும், உடைந்து உதிர்ந்து போகும்.

உலகப் பற்றில் உழலும் உயிர். அப்பற்றிலிருந்து பிரிய முடியாதபடி புளியம் பிஞ்சுபோல் ஒட்டிக் கொண்டுள்ளது. அந்த நிலைமாறி புளியம் பழம்போல் ஆகி, உலகப் பற்றை உதறிவிட வேண்டும்.

உலகப் பற்று விட்டால்தான் இறைவனைப் பற்ற இயலும். "அற்றது பற்று எனில் உற்றது வீடு" என்பது அருளாளர் வாக்கு. ஒருவன் கந்தல் உடை அணிந்துள்ளான். பழகிப் போனமையால் அது கந்தல் என்பதோ மானம் மறைக்கப் போதாது என்பதோ நிரம்ப அழுக்குப் படிந்தது என்பதோ அவன் உணர மாட்டான்.

நாம் அவனிடம் அக்கந்தையின் இழிவைக் கூறினாலும், உடனே அதை எடுத்து எறிய எளிதில் மனம் வாராது. இதை எறிந்தால், இதைவிட நல்ல - அழுக்கில்லாத - உறுதியான ஆடை கிடைக்கும் என்று அவன் உணரும்படி செய்தால், அவன் அக்கணமே அக்கந்தையை எடுத்தெறிந்து விடுவான்.

உலகப் பற்றில் பழகிப் போன உயிர் அப்பற்றினை எளிதில் விட ஒப்பாது. அதைவிட உறுதியான பற்று உண்டு. என்பதை அறிந்தால், உலகப் பற்றை வீசிவிட முன்வரும்

அந்த உறுதியான பற்றுத்தான் பற்றற்றான் பற்று என்பர் வள்ளுவர். அந்தப் பற்றற்றான் பற்றினைச் சிக்கெனப் பிடித்துக் கொள்ள வேண்டும். அப்போது உலகப் பற்றுத் தானாகவே நழுவி விடும்.

உலகப் பற்றைத் துறந்து பற்றற்றான் பற்றைப் பெறு வதற்குப் பக்குவம் பெறுவது எப்படி?

அழுதால் பெறலாம், அழுது தொழுதால் பெறலாம் என்பர் அருளாளர். இறைவன் திருமுன் நின்று நாம் இது காறும் செய்த பிழைகளை எண்ணிப் பிழை செய்து விட்டோமே என்று இரங்கி, பச்சாத்தாபப்பட்டு விம்மி விம்மி அழுதல் வேண்டும்.

அழுதால் நம் கண்ணீரால் நம் பிழைகள் சமுவப்பட்டு விடும். அழுது அழுது தொழுதல் வேண்டும்.

இறைவனின் கல்யாண குணங்களை வாய்குளிரப் பேச வேண்டும். பேசினால் வாக்கால் செய்த பிழை போகும்.

இறை வடிவமான மக்களுக்குச் செய்யும் தொண்டே இறைபணியாகும். அந்தப் பணியை ஆர்வமுடன் செய்ய வேண்டும்.

இறைவன் பாதங்களில் விழுந்து வணங்கவேண்டும். விழுந்து விழுந்து வணங்கி எழுதல் வேண்டும்.

வேறு பயன் ஒன்றும் இறைவனிடம் கேட்கலாகாது. நாம் விரும்புவது அன்பு ஒன்றேயாதல் வேண்டும். இத்தகைய நல்வினைகளில் ஈடுபட்டால் உலகப் பற்று நழுவி இறைபற்று அணுகும்.

இத்தகைய சீரிய மெய்யுணர்வினைச் சிந்திக்கத் தூண்டும் பாடல் இது.

அழுவதும் நின்சீர் அறைவதும் நாளும்
அழுது அழுது
தொழுவதும் தொண்டு தொடர்வதும் பாதத்
துணைமலரில்
விழுவதும் அன்பு விழைவதும் பல்கால்
விழுந்து விழுந்து
எழுவதும் அன்றோ இறைவனை எய்தற்கு
இயல்வதுவே!

அண்ணல் தாயகத்தினின்றும் மீண்டும் தென்னாப்பிரிக்கா திரும்பியபோது, அந்நாட்டு வெள்ளையர் அவரைத் தாக்கினர். அத்தாக்குதலினின்றும் இறையருளால் மீண்டார் என்ற செய்தி கூறுவது புயல் எழுபடலம்.

தொண்டுசெய்து இறையருளால் உலகப் பற்றாகிய துன்பத்தினின்று நீங்கலாம் என்று கூறி இந்தக் காப்பு அப்படலத்துக்குப் பாயிரமாவது சரிதானே!

# 34. வையவல்லார்க்கு நலம் செய்ம்மின்

காந்தியடிகள் பற்றிய பெருங்காப்பியம் காந்திகாதை வரலாறு மட்டும் கூறுவது காப்பியக் குறிக்கோள் அன்று. வரலாற்றுடன் இணைத்துக் காந்தியக் கொள்கைகளையும் பண்பு நலன்களையும் காட்ட எழுந்த காப்பியமே காந்தி காதை. அதுதான் அதன் தனிச்சிறப்பு.

தொட்ட தொட்ட இடமெங்கும் ஏதாவது ஓர் காந்தியப்பண்பு தலைகாட்டும்.

அந்தப் பண்புகளின் திரண்ட சாரமாக இருப்பன அகிம்சை, முதலியன ஆகும்.

உலகில் வாழ்வாங்கு வாழ விரும்பும் மக்கள் அடிகளின் வழியிலே செல்லுதல் வேண்டும்.

துன்பம் செய்தார்க்கும் புன்னகை காட்டுதலும் கொடிய குண்டு வீசிக் கொல்ல வந்தார்க்கும் இரக்கம் காட்டுதலும், இகழ்ந்து பேசுவார்க்கும் உபகாரம் செய்வதும் ஆகியனவே காந்திய வழிகள் ஆகும்.

இத்தகைய கருத்துச் சொட்டும் தேன் கூடு இந்தப் பாடல்.

உய்யவல் லார்க்குஒன்று உரைப்பேன் உறுதி.
உறுகண்மையே
செய்யவல் லார்க்கும் செழுநகை காட்டுமின்!
தீயகுண்டு

பெய்யவல் லார்க்கும் பெரிதருள் காட்டுமின்!
பீடறவே
வையவல் லார்க்கும் நலம்செய்ம்மின் காந்தி
மகான் என்னவே!

அண்ணல் முப்பதேழாவது வயதில் பிரமசரிய விரதம் மேற்கொண்டார். இது மிக மிக அரிய செயல். திருநீல கண்டர் ஒருவர் தம் மனைவி அருகில் இருக்கும் போதே பிரமசரியம் காத்து இளமை துறந்தார் என்று வரலாறு பேசுகின்றது.

அரசயோகம் காலடியில் கிடக்கையில் அழகிய மனைவி அருகில் இருக்கையில் பிரமசரியம் காத்துத் தவம் மேற் கொண்டான் என்று இதிகாசம் பரதனைப் பாராட்டி மகிழும்.

அந்த வரலாறுகளைப் புராணக் கற்பனைகள் என்று சிலர் வாதிடலாம்.

அந்தச் செயற் கருஞ் செயலை நம் கண்ணெதிரே செய்து காட்டினார் அடிகள்.

அடிகளின் வெற்றிக்கு அடிப்படையான பண்பு நலன் விளங்கும் இந்தப் பாடல் பிரமசரியப் படலத்துக்கு வளம் சேர்க்கின்றது.

---

உய்ய - வாழ்வாங்கு வாழ. உறுதி - உபாயம். உறுகண்மை - துன்பம். பீடு - பெருமை. என்ன - போல.

# 35. விழி குலவிய அன்பு வெள்ளம்

பாணர் குலத்தை இழிகுலம் என்று அக்காலத்தினர் கருதினர். பண் என்றால் இசை. இசை பாடுபவர் பாணர். திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்பவர் அக்குலத்தவரே யாவர். அக்குலத்தினர்க்கு ஆலயத்துள் நுழைய அனுமதி இல்லை.

அந்தப் பாண் குலத்தில் பிறந்தவர் ஒருவர். அவரின் இயற்பெயர் அறியக் கூடவில்லை. ஆதலால், அவர் குலத்தைக் குறிப்பிடும் பாணர் என்றே அழைக்கப்பட்டார். அவர் திரிசிரபுரத்தைச் சேர்ந்த உறையூரில் வாழ்ந்தார். உறையூருக்கு அக்கரையில் உள்ளது திருவரங்கம். இடையே காவிரி நதி. திருவரங்கத்துப் பள்ளி கொண்டுள்ள நம்பெரு மாள் மீது, அடங்காத பக்தி கொண்டிருந்தார் பாணர்.

பூலோக வைகுண்டமாகிய திருவரங்கத் திருப்பதியைத் தம் காலால் தீண்டலாகாது எனக் கருதி காவேரியின் தென் கரையிலிருந்து கொண்டே பெரிய பெருமாளைப் பண்பாடிப் பரவி வந்தார்.

ஒருநாள் அவர் பாடிக் கொண்டிருக்கையில், பெரு மாளுக்கு மஞ்சன நீர் கொணர்வதற்காக அர்ச்சகர் அங்கு வந்தார். அவரின் பெயர் லோக சாரங்க முனிவர் என்பது. அவர், தாழ்குலத்தவராகிய பாணரைக் கண்டு, 'கடக்கப் போ!' என்றார்.

பாடலிலும் பக்தியிலும் மூழ்கியிருந்த பாணர் காதில், முனிவர் பேச்சுப் படவில்லை. முனிவருக்குச் சினம் மூண்டது. ஒரு கல்லை எடுத்து எறிந்தார். அந்தக் கல் பாணரின் முகத்தில் பட்டு இரத்தம் ஒழுகலாயிற்று.

கண் திறந்து பார்த்த பாணர், காயம் பட்டதற்காக வருந்தவில்லை. ஐயோ! பாகவதரிடத்தில் அபசாரப் பட்டோமே என்று அப்பால் விலகிக் கொண்டார். தம்மை அடித்த முனிவர் பால் வெறுப்புக் கொண்டார் அல்லர். தவறு தம்முடையதே என்று கருதினார். பிறர் தவறு காணாமையும் பிறர்பால் தவறு காண நேர்ந்தால், அதைத் தனகாகத் கருதுவதுமே பாகவத தருமம்.

பாணர் முகத்தில் பட்ட அடி நம் பெருமாள் நெஞ்சில் பட்டது. முனிவர் தீர்த்தம் கொணருகையில் ஆலயத்தின் கதவு திறக்கவில்லை. எவ்வளவோ முயன்றும் திறக்க இயல வில்லை.

'கதவு திறக்க இயலவில்லையே! பெருமாளுக்கு வழிபாடு செய்ய இயலாமல் போயிற்றே' என்று வருந்தினார் முனிவர்.

அன்று இரவு கனவில் இறைவன் தோன்றி, "நமக்கு அந்தரங்கரான பாணரிடத்திலே நீர் அபசாரப் பட்டீர்! அவரைத் தாழ்ந்த குலத்தவராக நினைந்து வெறுக்காமல், உம் தோளிலே ஏற்றிக் கொண்டு நம்மிடம் வருக" என்றார்.

அப்படியே செய்தார் முனிவர்.

"இழிகுலத் தவர்க ளேனும்
எம்அடி யார்கள் ஆகில்
தொழுமின்நீர் கொடுமின் கொண்மின்
என்று நின்றோடும் ஒக்க
வழிபட அருளினாய்"

என்ற தொண்டரடிப் பொடியார் வாக்குக்கு எடுத்துக் காட்டாகப் பாணர் வரலாறு அமைந்தது.

இவ்வண்ணம் இறைவனே இழிகுலம் என்று பாராமல். பாணரை அந்தணர் தோளிலே ஏற்றிப் பெருமைப் படுத்தினான் என்ற வரலாறு தெரிந்தும், இவர் இங்கே

சிலரைப் பழிகுலம் என்று கூறிப் பகைக் நின்றனரே! ஐயோ! இவ்வாறு பகைப்பவர்கள், உயர் குலத்தவர் என்று தம்மைக் கூறிக் கொள்ளினும், இறைவன் திருவுள்ளத்துக்கு மாறாக நடப்பதால், அவர்களே பதிதர்கள்; தாழ்குலத்தினர். இறைவன் கடைக்கண் நோக்காகிய அருள் வெள்ளம் அவர்கள் மேல் பாயாது.

இத்தகைய எண்ணங்களுக்கு இடமாக உள்ள பாடல் இது.

"இழிகுலப் பாணன் தன்னை
இருடியின் தோள்மேல் ஏற்றித்
தொழுகுலம் ஆக்கும் உன்தன்
தூவருள் தன்னைக் கண்டும்
பழிகுலம் எனச்சில் லோரைப்
பகைத்திடும் பதிதர்—ஐயா!—
விழிகுல வியரின் அன்பு
வெள்ளத்தில் மூழ்கல் உண்டோ?"

அண்ணல் தென்னாப்பிரிக்காவில் இருந்தபோது, போயர் போர் தொடங்கியது, அப்போரில் தொண்டர் படைதிரட்டித் தலைமை தாங்கி. இருதரப்பினர்க்கும் வேற்றுமை பாராமல் மருத்துவத் தொண்டு புரிந்த வரலாறு கூறும் பகுதி போயர் போர்ப்படலம்.

வேற்றுமை கருதாமல் சமநிலை கொள்வதே சிறப்பு என வற்புறுத்தும் இப்பாடல், அப்படலத்துக்குத் தோற்றுவாயாகிக் கருத்துக்கு ஊற்றுவாயாக விளங்குகின்றது.

---

இருடி - முனிவர். தூஅருள் - தூய கருணை. பதிதர் - தாழ்ந்தவர். விழி - கண்.

# 36. நாவுக்குப் பெருமை நாரணா

உலகப் பொருள் அனைத்தும் தனித்தனி இயல்புடையன. அதைத் தத்துவ நூலார் சொரூபம் என்பர். சொரூபம் என்பது அதற்கே உரிய இயல்பு என்று பொருள்படும்.

தனியியல்பு இழந்துவிட்ட எப்பொருளாயினும் பயனின்றிக் கேடுறும்.

உயிர்களின் தனியியல்பு இறைவனுக்கு அடிமையாயிருப்பது. இந்தத் தனியியல்பை உணர்ந்த உயிர்கள் அகந்தையின் நீங்கி, ஆரருளுக்கு உரியனவாகும். இந்த இயல்பு மறந்த உயிர்கள் பிறவிச் சுழலில் பட்டுக் கேடுறும்.

பசுவுக்குத் தனியியல்பு, புல் உண்டு பால் தருவது. பால் தரவில்லையேல், பசுவுக்குப் பெருமையில்லை. தீனியிடுவாரும் இலர் ஆவர்.

பூவுக்குத் தனியியல்பு மணம் வீசுவது. அந்த மணம் இருப்பதால், மாந்தர் முடியில் மட்டுமா! இறைவன் மகுடத்திலும் ஏறுகின்றது. மணம் இல்லையேல், சருகுபோல் காலிலேயே மிதிபடும்.

கவிதைக்குத் தனியியல்பு, படிப்பார்க்குப் பயன் தருவது. பயன் என்பது மனமகிழ்ச்சி மட்டும் அன்று. பண்பாட்டு விதையைப் படிப்பார் மனத்தில் அந்தக் கவிதை நடல் வேண்டும். அத்தன்மை பெறாத பாடல் காற்றில் அடித்துச் செல்லப் படும் சருகுபோல், காலத்தால் அடித்துச் செல்லப் பட்டுவிடும்.

பிற உயிர்களைக் காட்டிலும் மனிதனுக்கு ஏற்றம் உண்மைக்கு ஒரு காரணம் பேசும் ஆற்றல்தான். பிற உயிர்

களுக்கு நாக்கு உண்டு. அது சுவை அறிய மட்டுமே உதவும். மனத்திலுள்ளதை வெளியிட உதவாது. மனிதனுக்கு மட்டும் நாக்கானது; சுவையை உணரவும் பேசவும் பயன்படு கின்றது.

அத்தகைய நாக்கு, இறைவன் மனிதருக்குக் கொடுத்த தனிக்கொடை. அதற்காக இறைவனுக்கு நன்றி காட்ட வேண்டாவா! அவ்வாறு நன்றி காட்டப் பயன்படுவதே நாவுக்குத் தனியியல்பாகக் கொள்ளுதல் தகும்.

நன்றி காட்டுவது எப்படி? இறைவன் நம் நன்றிக்காக ஏங்கியிருக்கின்றானா!

இறைவன் எல்லாம் உடையவன் அவாப்த சமஸ்தகாமன். அதாவது விரும்பியனவெல்லாம் தடையின்றி அடையும் ஆற்றல் உடையவன். நம்மிடம் எதையும் எதிர் பார்க்க வேண்டியதில்லை அவனுக்கு.

நம் மன நிறைவுக்காக நன்றி தெரிவிக்கத்தான் வேண்டும்.

அவன் கொடுத்த நாக்கினால், அவன் திருநாமங்கள் சொல்லுதல் வேண்டும்.

திருநாமங்கள் சொல்வதால் உள்ளும் புறமும் ஒளிவரும் என்பர் கபீர்தாசர்.

இவ்வாறு நம் கற்பனைத்தேர் ஓடும் தடமாக அமைந்தது ஒரு பாடல்.

ஆவுக்குப் பெருமை எல்லாம் அமுதினை அருள்வ தாலே.
பூவுக்கு பெருமை எல்லாம் புதுமணம் பொலிவ தாலே.
பாவுக்குப் பெருமை எல்லாம் பயன்மிகப் பயப்ப தாலே.
நாவுக்குப் பெருமை எல்லாம் நாரணா என்ப தாலே.

தென்னாப்பிரிக்காவை விட்டு அண்ணல் தாயகம் திரும்பியபோது, பல பரிசுகள் குவிந்தன. தொண்டு வாழ்க்கைக்குத் தொண்டுதான் பரிசு என்னும் கொள்கையினரான அடிகள், அப்பரிசுகளை ஏற்க ஒப்பவில்லை. அவை பொதுத் தொண்டிற்கே பயன் படட்டும் என்று ஒப்புரவு செய்துவிட்டார் என்ற வரலாறு கூறும் பகுதி பொன்னகைப் படலம்.

அண்ணலின் தனியியல்பினை வளர்க்கும் பகுதிக்கு உலகப் பொருள்களின் தனியியல்பினை நினைவுறுத்தும் இந்தக் காப்பு உயர்வு தருகின்றது.

ஆ - பசு. அமுது - பால், பா - கவிதை. பயப்பது - தருவது.

# 37. ஞானப் பசுந்தேறல்

கீதை ஓர் அமுத கலசம். அதன் உள்ளீடு ஞானமாகிய அமுதம். மரணம் இல்லாமல் செய்வதுதான் அமுதம். இறப்பு இன்றேல், பிறப்பது எது? அந்தப் பிறவியைத் தீர்க்கும் ஞான அமுதத்தை நாவால் சுவைத்து மனத்தில் பதித்துக் கொண்டால், உலகில் சமநிலை தோன்றும். வேண்டுதல் வேண்டாமை என்ற வேற்றுமையுணர்வு நீங்கிவிடும்.

வானப்பதவி என்பது இன்பத்தின் உச்சி. வறுமை என்பது துன்பத்தின் எல்லை. இந்த இருநிலைகளில் எந் நிலைவரினும் தளராத நிலையைத் தந்துவிடுவது கீதை. அதைக் கற்றால் ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும் உணர்வும் வீடும் வேண்டா விறலும் பெறலாம்.

இக்கருத்தினைக் காட்டும் சாளரமாக இப்பாடல் உள்ளது.

"வானப் பதவி வரினும் அதை விழையேன்
ஊனப் படவறுமை உற்றாலும் நான்தளரேன்.
ஈனப் பிறவி இழுக்ககலக் கீதைஎனும்
ஞானப் பசுந்தேறல் நாவால் சுவைத்தேனே"

காசி மாநகரில் ஆளுநர் தலைவரின் ஓலக்கம் நடந்தது. அடிமைகளைப் போன்று அலங்காரப் பொம்மைகளாக அவ் ஓலக்கத்தில் பங்கு கொண்ட சிற்றரசர்களைப் பார்த்து அஞ்சாமல், அண்ணல் இடித்துரைத்த படலம் இடித்துரைப் படலம். அண்ணல் உள்ளத்தில் ஊறிய அஞ்சாமையாகிய பெருமித உணர்வே இடித்துரைப்பதற்குக் காரணம் ஆனது.

அந்தப் பெருமிதம் கீதை கற்றமையால் வந்தது. ஆதலால், அப்படலத்துக்கு இக்காப்புச் செய்யுள் பொருந்தந்தானே!

---

விழையேன் - விரும்பமாட்டேன். ஊனம் - சிறுமை. இழுக்கு - இழிவு. தேறல் - தேன்.

# 38. பிறவி நஞ்சுக்கு அமுது

இறைவன் வீடுபேறு தான் தருவான். அவன் திரு நாமமோ இறைவனையே தந்துவிடும் என்பர் ஆன்றோர், செல்வம் பெறுவதைக் காட்டிலும், செல்வம் படைத்த வனையே (குபேரனையே) நாம் உரிமையாக அடைவது பெரும்பேறு அன்றோ?

வீடுபேறு தரும் இறைவனைக் காட்டிலும் இறை வனையே தந்துவிடும் திருநாமம் அவனைவிடச் சிறந்தது என்னத் தடை உண்டோ?

அந்தத் திருநாமம் தரும் நலம் கொஞ்சமா!

உலகத் துன்பங்களுக்கெல்லாம் காரணம், மனமானது உலகப் பற்றில் உழல்வதுதான். திருநாம தியானத்தில் ஈடுபடும்போது, மனம் அடங்கி வசப்படும்; புறம்பே செல்ல முயலாது. திருநாமம் நெஞ்சுக்கு அரண் (காவல் மதில்) ஆகின்றது.

புலனடக்கம் (மன ஒடுக்கம்) வந்துவிட்டால், வினைப் 'பயன் ஒட்டாது. திருநாமமே நெருப்பாகி, முன் வினையாகிய பஞ்சினைச் சுட்டெரித்து விடுகின்றது.

ஐம்பொறிகளை மாடுகள் என்பர் திருமூலர். அந்த மாடுகள் மேய்ப்பார் இல்லையேல், புனிதப் பண்பாகிய பயிரை மேய்ந்துவிடும். அவை மேயாமல் இருக்க வேலியாக அமைவது இறைவன் திருநாமமேயாகும்.

மனம் அலைவதற்கும் வினைப்பயன் சேர்வதற்கும் பொறிகள் அலைப்பதற்கும் காரணம் பிறவியேயாகும். அப் பிறவியை நஞ்சுக்கு ஒப்பிடுவர் அருளாளர்கள்.

நஞ்சினைத் தீர்க்கு அமுதுதான் மருந்து. அந்த அமுதாக அமைவது இறைவன் திருநாமமே. இந்தத் திருநாம மகிமையைத் திருமங்கை மன்னன்

"குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலம்தரம் செய்யும் நீள்விசும்பு அருளும்
அருளோடு பெருநிலம் அளிக்கும்
வலம்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலம்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராய ணாஎன்னும் நாமம்"

என்று விரிவுறப் பேசியுள்ளார்.

இத்தகைய எண்ணங்கள் படர்வதற்குக் கொள் கொம்பாக இருப்பது இப்பாடல்.

"நெஞ்சுக்கு அரண்; நீடிய முன்வினையாம்
பஞ்சுக்கு ஒரு பாவகன்; வெம்மொழிமாடு
அஞ்சுக்கு ஒரு வேலி; அரும்பிறவி
நஞ்சுக்கு அமுது அச்சுதன் நாமம்அரோ"

அண்ணல் பம்பாயில் தங்கியிருந்தபோது, திருமகன் மணிவால் நோயுற்றார். கோழிச்சாறு ஊட்டுக என்றனர் மருத்துவர். அதற்கு இணையாக அண்ணல், இயற்கை மருத்துவத்தால் குணப்படுத்த முயன்றார். நோய் தீரவில்லை; ஏறியது. மனம் பொருமிய அண்ணல் மேல் விளைவது ஆண்டவன் விரும்பும் வழி என்று ஆண்டவன் திருநாமம் உச்சரித்துச் சரண் அடைந்தார்.

அருட்செயலால் நோய் விலகியது. இச்செய்தியைக் கூறும் ஈசன் அருட்படலத்துக்கு திருநாமத்தின் பெருமை கூறும் இக்காப்பு, இன்றியமையாதது தானே!

---

அரண் - பாதுகாப்பான இடம். நீடிய - பெருத்த. பாவகன் - நெருப்பு. அச்சுதன் - அழியாமை தருபவன்,

# 39. நம்பினால் தொடர வற்றோ

யாரையும் திருத்திப் பணி கொள்ளவே, இறைவன் விரும்புவான்; தண்டிப்பது அவன் அருளுக்கு ஒவ்வாதது. நல்லோரைக் காக்க மட்டுமே அவதாரம் செய்கின்றான். ஆனால், தீயவரைக் கொல்லவும் நேரிடுகின்றது. தீயவர்கள் தாமாகவே முன்வந்து தீயில் விழும் விட்டில் போல, இறைவனை எதிர்த்து அழிந்து போகின்றனர். இவ்வாறுதான் இராவணன் அழிய நேர்ந்தது.

இராவணன் தனிப்பெரு வீரன். திக்கு விஜயம் செய்தவன். எட்டுத்திசை யானைகளுடன் போரிட்டவன். அவை, தன் மார்பில் ஊன்றிய கொம்புகளை முறித்து அணியாகப் பூண்டவன்.

அத்தகைய பெருவீரன், தேவியைப் பிரித்த பாவியானான். அப்போதும் இராமன் அவனைச் சினக்கவில்லை. தேவியை விட்டு ஆவியைப் பெறுக என்று தூது அனுப்பினான். மறுத்தபோதே போருக்கு எழுந்தான். முதற்போரில் இராவணன் தோற்றபோது, இன்றுபோய் நாளை வா என்று உயிர் பிழைக்க வாய்ப்புத் தந்தான்.

இராவணன் சினத்தினால் போரிட்டான். அன்பினால் திருத்த முடியாது என்ற நிலையில், அம்பினால் வென்றான் இராமன். வெற்றி முழுவதும் அழித்தான்.

இராமனது இத்தகைய அருட்செயல் நோக்கியே மனத்துக்கு இனியான் என்று ஆண்டாள் பாராட்டுகின்றார்.

இராமன் வழி அகிம்சை வழி. பகைவனுக்கும் இரங்கும் பண்பாட்டு வழி. அவ்வழியிலே உலகம் செல்லுமானால் கலகம் ஏது? கவலை ஏது? அமைதி ஒன்றே ஆட்சி செய்யாதா?

இராமன் திருவடிகளைத் தொழுதல் வேண்டும். அதாவது அவன் அடிச்சுவட்டிலே நடத்தல் வேண்டும். அவன் வழியே வெல்லும் என்ற நம்பிக்கை வேண்டும். அந்த நம்பிக்கை வந்துவிட்டால், அஞ்சாமை என்ற அழியாச் செல்வம் நம் கைவசமாகும். உலகமே எதிர்த்தாலும் உலையா நெஞ்சு உரிமையாகும்.

அஞ்ச வருவனவற்றுள் மிகமிகக் கொடியது யமபாசம். அந்த யமபாசங்கூட, இராமன் வழியில் நடப்பவரை அச் சுறுத்த இயலாது. இவ்வண்ணம் சிந்தனையைக் கிளறி விடும் பாடல்:

"வெம்பிநா லிரண்டு திக்கும்
தாங்கிய வெங்கண் வேழம்
கொம்பினால் உழுத மார்பின்
இராவணன் கொற்றம் முற்றும்
அம்பினால் அறச் செற்றானை
அன்பினால் அடிவ ணங்கி
நம்பினால் இயம பாசம்
நம்பினால் தொடர வற்றோ!"

அண்ணல் மறுமுறையும் தென்னாப்பிரிக்கா சென்றார். இந்தியர்க்குப் புதிதாக நேர்ந்த இளிவரலைத் தீர்ப்பதற்கு முயன்றார். புதுவகைப் போர் முறை கண்டார்.

பகைவருக்கு வாய்ப்பு அளித்துத் திருந்த முனைந்தார். திருந்தாத போதும் தீங்கு செய்யக் கருதாமல் மனமாற்றம் செய்வதற்கு முயன்றார். பின்னர் இராமன் வழியிலே—பகை வருக்கு அருளும் வழியிலே போரிட்டு பகைவரை அழிக்காமல், பகைவரின் அகந்தையை மட்டும் அழித்த செய்தியைக் கூறும் சத்தியாக்கிரகப் படலத்துக்குத் தக்க காப்புத்தானே இது!

---

வெம்பி - சினம்கொண்டு. நாலிரண்டு - எட்டு. வேழம் - திசையானைகள். கொம்பு - தந்தம். உழுத - குத்திய. கொற்றம் - வெற்றி. அறச் செற்றான் - முழுவதும் அழித்தவன். நம்பினால் - நம்பினோமானால். நம் பின்னால் - நமக்குப் பின்னே. வற்று - வலிமை யுடையது. இயமபாசம் - எமனுடைய பாசக்கயிறு.

# 40. ஆன்ம ஞான வாள்

பூதம் ஐந்தும் விலங்கிய விகாரப் பாட்டின் வேறுபாடு உற்ற வீக்கம் என்று கம்பன் உலகத்தைக் குறிப்பிட்டான். ஐம்பூதங்களின் பஞ்சீகரணத்தால் இவ்வுலகம் ஆனது. ஆதலால் இது, பிரபஞ்சம் எனப்படும்.

உலகம், பற்றுக்கு இடம். பழைய பழக்கங்களின் வாசனையால் பற்றி மேன்மேலும் வளரும். பற்றுக்கு நாற்றங்கால்களான நல்வினை, தீவினைகள் விலங்குகளாகப் பிணைத்துக் கொண்டேயிருப்பதனால், பற்றிலிருந்து விடுபட ஆர்வம் உண்டாகாது. பற்றே அனுகூலமாகத் தோன்றும். மேன்மேலும் பந்தத்தை இறுக்கும்.

உலகப் பற்று விடுவது எளிதன்று. அதற்குப் பேராற்றல் வேண்டும். ஆன்மிக அறிவாலேயே அந்தப் பேராற்றல் உண்டாகும். ஆன்மிக அறிவு தானாக வாராது. இறைவன் அருளால்தான் வரும். அந்த அருளை நாமே முயன்று பெறுவது இயலாது. "நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ அதற்கு நாயகம்" என்றும் "களைவாய் துன்பம் களையா தொழிவாய் களைகண் மற்றில்லேன்" என்றும் அவனையே சரணடைவது மட்டுமே நாம் செய்யவேண்டியது.

இறைவன் கருணைக் கடல். நம் செயலற்ற நிலைக்கு இரங்கித் தானாகவே நம்மிடம் ஆன்மிக அறிவை வளர்த்து, பிரபஞ்சத்திலிருந்து விடுவித்துத் தனக்கேயாக நம்மை ஆட் கொள்ளுவான். ஆன்மிக அறிவு என்பது யாது? மெய்ப் பொருள்கள் மூன்றாகும். அவை உயிர், உயிரல்லாதன, இறைவன் என்பனவாம்.

இறைவனும் உயிரும் கண்ணால் காண இயலாது. அசேதனம் என்னும் உயிரில்லாத பொருள்களை நாம் காணலாம். நம் உடலும் அசேதனமே. மாறிக்கொண்டே இருப்பது அசேதனப் பொருளின் இயல்பு.

உயிர்கள் பல ஆகும். கண்ணுக்குப் புலனாகாதன. ஆயினும், தான் இருப்பதை ஒவ்வொரு கணமும் புலப்படுத்திக் கொண்டேயிருக்கும். 'என் உடல், என் தலை' என்று கூறுகின்றோமே! அப்போது நம் உடல் அல்ல. அது நம்மினும் வேறானது. அது நம் உடைமை என்று புரிகின்றதல்லவா? அவ்வாறு உடலினின்றும் வேறுபட்டிருப்பதுதான் உயிர். உயிர் மாற்றம் அடையாது; அழியாது. உயிர் தங்கிய வீடாகிய உடல் தான் மாறும்; அழியும். உயிர் நித்தியமானது.

இத்தகைய உயிரையும் உயிரல் பொருளையும் இயக்குபவன் ஒருவன் இருக்கத்தான் வேண்டும். ஏனெனில் அவை ஒரு நியதிக்கு உட்பட்டே உள்ளன. நியதி தானாகவே அமைவதில்லை. காரணம் இல்லாமல், காரியம் தோன்றுவதில்லை. இது கண் கூடு. நியதியைச் செய்பவன் நியந்தா எனப்படுவான். அந்த நியந்தாவே ஈசன். உயிர்களாகிய நமக்கு இருப்பிடமாக உடல் உள்ளது. ஈசனுக்கு, உயிரும் உடலும் ஆகிய இரண்டுமே உடலாக—இருப்பிடமாக உள்ளன. ஆதலால் அவனை உயிருக்கு உயிர் என்று வேதங்கள் கூறும். மேலொரு பொருளும் இல்லா மெய்ப் பொருள் அவன். ஓங்கும் பரம வான்பொருள் அவன்.

அவனே உலகாயும் உயிராயும் உயிர்க்கு உயிராயும் உள்ளான் என்பதை உணர்வதே ஆன்மிக அறிவு (ஆன்ம ஞானம்). இந்த ஆன்ம ஞானம் கைவந்தால் போதுமா? ஆன்ம ஞானத்தின் பயன் என்ன? இறையனுபவத்தினின்றும் நம்மைப் பிரித்து வைக்கும் மோகினியாகிய பிரபஞ்ச வேட்கையை ஒழிப்பதுதான் அதன் பயன்.

பிரபஞ்ச மாயையை ஒழிப்பது எப்படி? ஒரு பகைவனை அழிக்க வேண்டுமாயின், அவனைப் பற்றியும் அவனது துணை வலி பற்றியும் நன்கு அறிந்து கொள்ளுதல் வேண்டும். அனைத்து ஆற்றலும் உள்ளவனாயினும் இராமன், இராவண னுடன் போரிட நேர்ந்தபோது, அவனது வலிமை, தவம் முதலான ஆற்றல் அனைத்தையும் வீடணனிடம் உசாவி அறிந்து கொண்டான் அன்றோ!

நாமும் இறையனுபவத்துக்குத் தடையாகிய பிரபஞ்சப் பற்றை வெல்ல வேண்டுமாயின், அதன் தோற்றம், வலிமை களை அறிதல் வேண்டும். அவ்வாறு அறிந்து கொள்ள ஆன்ம ஞானம் துணை செய்கின்றது.

பிரபஞ்சத்தின் தோற்றம் யாது? பிரமமே (ஈசனே) எல்லாம் தோற்றுவதற்கு மூலப்பொருள். பிரபஞ்சமும் அந்தப் பிரமத்திலிருந்து தோன்றியதேயாகும்.

பிரமம் என்பது கிழங்கு. அந்தக் கிழங்கிலிருந்து பிர பஞ்சச் செடியிலே ஆகாசம் முதலிய பூதங்கள் கிளைகளாக விரிகின்றன. ஐம்பொறித் தளிர்கள் அரும்புகின்றன. அவை புலன்களாகிய இலைகளாகின்றன. இலைகளில் தருமம் அதருமம் (செய்யத்தக்கன, செய்யத்தகாதன) என்னும் மலர்கள் மலர்கின்றன. மலர்கள் முதிர்ந்து இன்பதுன்பக் கனிகள் பழுக்கின்றன. அதாவது தருமத்தால் இன்பமும் அதருமத்தால் துன்பமும் உண்டாகின்றன.

பிரமஞ்சமாகிய மரம் இருக்கும் வரை, இக்கனிகளை அது தந்து கொண்டுதான் இருக்கும். அந்தக் கனிகளை நாம் புசித்துத் தான் தீரவேண்டும். புசிக்குந்தோறும் இறை யனுபவம் எட்டித்தான் போகும்!

பிரபஞ்ச மரத்தை அடியோடு வெட்டி வீழ்த்தினால்தான் (அற்றது பற்று என்றபோது தான்) இறையனுபவம் கிட்டும்.

அற்பசாரமான உலக இன்பத்தை உதறினால்தான் பிறவி யின்மை கிட்டும்.

பிரபஞ்ச மரத்தை வெட்டுவது எப்படி? அதற்கு உதவுவது ஆன்ம ஞானமாகிய வாள். இறைவனைச் சரண மடைந்தால்தான் அந்த வாள் கிட்டும்.

இந்தச் சீரிய நினைவுகளைப் பொதிந்து கொண்டுள்ள ஞானப் பேழை இப்பாடல்.

கிளரும் பிரமம் எனும் கிழங்கில்
கிளைத்து, விசும்பு முதற்பூதம்
கிளைக ளாகிப் புறம் விரியக்
கிளறிப் பாயும் ஐம்பொறியாம்
தளிரும் அரும்பிப் புலன்கள்எனத்
தழைக்கும் இலைகள் மிக அடர்ந்து,
தாவில் அறமும் மறமும் எனச்
சாற்றும் கரும மலர் மலர்ந்து
வளரும் இன்ப துன்பம் என
மாறாப் பழங்கள் பழுத்து உதவும்
மாயப் பிரபஞ் சத்தருவை
வளராது அடியோடு அறுத்திடவே
ஒளிரும் ஆன்ம ஞானம் எனும்
ஒருவாள் எனக்கே உதவாயோ!
உலகாய் உயிராய் உயிர்க்குயிராய்
ஓங்கும் பரம வான்பொருளே!

அடிகளின் அறப்போரால் மனம் மாறிய அரசு, நிபந்தனையின் பேரில் சில சலுகைகள் தர முன்வந்தது. அடிகள் அதை ஒப்பினார். ஒப்பாத பட்டாணியன் ஒருவன் அண்ணலைத் தாக்கி வீழ்த்தினான். மயக்கம் தெளிந்து எழுந்த நிலையில், தாம் ஒப்பிய வாய்மை தவறலாகாது என்று கைவிரல்ரேகை பதித்துச் சான்றிதழ் பெற்றார்.

வாய்மையே தெய்வம் என்று நம்பிய அடிகள், அந்த வாய்மையையே பற்றுக் கோடாகக் கொண்டு வென்றமை கூறுவது வாய்மைப் படலம். இறைவனையே பற்றுக் கோடாகக் கொண்டு பிரபஞ்சப் பகையை வெல்லுதல் வேண்டும் என்ற கருத்துடைய இக்காப்பு அந்தப் படலத்துக்கு ஏற்புடைத்து அன்றோ!

விசும்பு - ஆகாயம். புறம் - பக்கத்தில். தாவில் - கெடாத. அறம் - நல்வினை. மறம் - தீவினை. கருமம் - வினை. தரு - மரம். பரமம் - மிக மேலானது.

# 41. நா அசைக்கும் பேறு

இறைவன் திருநாமம், எல்லாம் தரவல்லது. அதன் பெருமை அளவிற்கரியது. திருநாமத்தின் பெருமையை விளக்கப் பல வரலாறுகள் உண்டு. தொண்டரடிப் பொடி யாழ்வார் ஒரு சிறந்த வரலாறு கூறியுள்ளார்.

முற்காலத்தில் முற்கலன் என்ற முழுப்பாவி ஒருவன் வாழ்ந்திருந்தான். பாவி மட்டுமல்ல; லோபியுங்கூட. அவனிடம் ஒரு கிழட்டுப் பசு இருந்தது. அது நடக்க இயலாமல் மரணத்தை நெருங்கியது. தன் வீட்டில் அது இறந்தால், அதை அப்புறப்படுத்தப் பணம் செலவாகும் என்று எண்ணினான் முற்கலன். அதற்கு ஓர் உபாயம் சிந்தித்தான்.

ஓர் அப்பாவி அந்தணனை அழைத்து "உனக்கு ஒரு பசுவைத் தானமாகத் தருகின்றேன். பெற்றுக் கொள்" என்று தாரை வார்த்துத் தந்தான். தாரை வார்க்கும்போது கிருஷ்ணார்ப்பணம் என்று வாய்தவறிக் கூறிவிட்டான். பசு கிடைத்தது என்று மகிழ்ந்த அந்தணன், அதை ஓட்டிச் செல்லத் தொழுவை அடைந்தான். அது சாவினை எதிர் பார்த்துக் கிடந்தது. "இந்தப் பசு எனக்கு வேண்டா" என்று அந்தணன் நழுவப் பார்த்தான். "கொடுத்த பசுவைத் திரும்பப் பெற இயலாது. நீ ஓட்டித்தான் செல்லவேண்டும். இல்லையேல், உன்னை ஒறுப்பேன், என்று தடியை எடுத்தான் முற்கலன். அந்தணன் என்ன செய்வான். பணம் தந்து ஆள்பிடித்து, பசுவை அப்புறப் படுத்திவிட்டு, தன் விதியை நொந்து கொண்டு வழிநடக்கலானான்.

முற்கலன் மரணம் அடையும்போது, யம தூதர், அவனைப் பாசக்கயிற்றாலே இழுத்துச் சென்றனர். யமன்

இவனை எதிர் கொண்டழைத்துச் சரியாசனம் தந்து உப சரித்தான். "உன் தூதர் என்னைக் கட்டி இழுத்து வந்தனர். நீயோ எனக்கு உபசாரம் செய்கின்றாய்! காரணம் யாது?" என்று கேட்டான் முற்கலன். "உன் பெருமை தெரியாமல் தூதர் அவ்வாறு செய்துவிட்டனர். நீ பசுவைத் தானம் தரும்போது, வாய் வழுவிக் கிருஷ்ண நாமம் கூறினா யன்றோ! அதனாலேயே உன்னை உபசரிக்கின்றேன் என்று திருநாமத்தின் பெருமையைப் பேசினான் யமன். 'கிருஷ்ணா' என்று அப்போது யமன் கூறிய திருநாமத்தை நரகில் துன்பம் துய்த்துக் கொண்டிருந்த உயிர்கள் கேட்டன. நரகத் துன்பம் ஒழித்து அந்நேரமே சுவர்க்க இன்பம் துய்க்கலாயின.

"நமனும் முற் கலனும் பேச
நரகில்உள் ளார்கள் கேட்க
நரகமே சுவர்க்க மாகும்
நாமங்கள் உடைய நம்பி"

என்பது, இச்செய்தி விளக்கும் தொண்டரடிப் பொடி வாக்கு.

இறைவன் எட்ட நின்றாலும் திருநாமம் கிட்ட நின்று பயன் தரவல்லது. மன்னர் சபையிலே கோவிந்தா என்று திரௌபதி அழைத்த போது, கண்ணன் தூரத்தே—துவாரகையில்—இருந்தான். அவன் திருநாமமே புடவை சுரந்தது.

இறைவன் திருநாமங்கள் பல. அவற்றுள் முதன்மை யானவை—முழுமையானவை—மூன்று என்பர். விஷ்ணு, வாசுதேவன், நாராயணன் என்பன அவை. விஷ்ணு என்பது பரவியவன் என்று பொருள்படும். வாசுதேவன், வசிப்பவன் என்று பொருள்படுவது. உயிருள்ள உயிரில்லாத அனைத்துப் பொருள்களிலும் தங்கியவன் அல்லது அவற்றுக்குத் தங்கும் இடமாகத் தாங்கியவன் என்பது நாராயணன் என்பதன் பொருள்.

பரவியவன் என்றால் எங்கே பரவியவன் என்று வினா எழும். எங்கும் பரவியவன் என்று விடை கூற வேண்டி யுள்ளது. வசிப்பவன் என்றால் எங்கே வசிப்பவன் என்று ஐயம் ஏழலாம். எங்கும் வசிப்பவன் என்ற விடை பெற வேண்டும். ஆதலால் விஷ்ணு, வாசுதேவன் என்ற திருநாமங் கள் முழுமையான பொருளைத் தம்முட் கொண்டிருப்பன அல்ல. ஆதலால் அவை அவ்வியாபகப் பெயர்கள் எனப்படும். நாராயணன் என்பதற்கு இந்தக் குறை இல்லை. நாமங்கள் என்றால் உயிருள்ள உயிரில்லாத அனைத்துப் பொருள் களையும் குறிக்கும். அயனம் என்றால் தங்குதல் அல்லது தாங்குதல் என்று பொருள். அனைத்துப் பொருள்களிலும் தங்கியவன்—தாங்கியவன்—என்னுகையில் மேலே சொன்ன ஐயம் எழ வாய்ப்பு இல்லையே!

இத்தகு சிறப்பால்தான் நாராயண நாமம் திருமந்திரம் எனப்பட்டது. ஆழ்வார்களும் ஆசாரியர்களும் இதை மிகவும் விரும்பினார்கள். கொள்ளை வாழ்க்கை நடத்திய திருமங்கை மன்னன், ஆழ்வாராகும் பெருமையை இத்திருமந்திரமே அருளியது. இதன் பெருமை பற்றி ஒரு பதிகமே பாடி யுள்ளார்.

திருநாமம் தருகின்ற வேறு பேறுகள் கிடக்கட்டும். அதைச் சொல்லும்போது வரும் இன்பமே பெறற்கரும் பேறு என்பர். அந்த இன்பச் சுவை அறிந்த அடியார், இந்திர லோகத்தில் தெவிட்டாத அமுதச் சுவையும் விரும்பார்.

''இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்''

என்பது தொண்டரடிப்பொடி வாக்கு.

திருநாமத்தை அடிக்கடி ஓதி வந்தால், ஓதுவது வழக்க மாகிவிடும். பின்பு, சொல்லவேண்டும் என்ற முயற்சி

யில்லாமலேயே வாய்திறக்கும்போது தானே இறைவன் திருநாமம் ஒலிக்கும்.

புலன் ஐந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறிவழிந்திட்டுக் கோழை மேலிட்டு அலமந்தபோது, உடல் வேர்த்து நடுக்கம் அடுத்து உடல் துவண்டு உள்ளே இருக்கின்ற உயிர் சோர்ந்து மரணம் நெருங்கிய காலத்து, இறைவன் திருநாமம் சொல்லப் பெற்றால் பிறவிப் பிணி நீங்கும் என்று கீதாசாரியன் கூறியுள்ளான்.

திருநாமம் சொல்வதை நாவுக்கு வழக்கமாக்கி விட்டால், அந்திம தசையிலே முயற்சியில்லாமலேயே வாய் திருநாமத்தைக் கூறி விடும். அடிகள் அந்திமத்தில் ஹேராம் என்று கூறியது உலகப் பிரசித்தம் அன்றோ?

திருநாமம் சொல்வதை வதக்கமாக்கிக் கொண்ட அடியார்கள் மரணத் துன்பத்துக்கு அஞ்ச மாட்டார். நா தானாகவே நாராயணா என்று அசையும். அதனால் பெரும் பேறு கிட்டுவது உறுதி.

இக்கருத்துக்கு ஊற்றுக்கண்ணாக உள்ளது துரோகப் படலத்தின் காப்புச் செய்யுள்.

''வேரா விதிர்விதிரா
மெய்யுலவா உள்ளாவி
சோரா இறந்து
தொலையும் அமையத்தும்
நாராய ணாஎன்று
நாஅசைக்கும் பேறல்லால்
ஆரா அமுதும்
அடியார் விழையாரே''

அடையாளச்சீட்டு பெற்றால் சில உரிமைகள் தருவதாகச் சொன்ன வாக்குறுதியைத் தென்னாப்பிரிக்க அரசு மறுத்து

விட்டது. இந்தியர்கள் மீண்டும் ஒன்றுபட்டு, பெற்ற சான்றிதழைத் தீயிலிட்டு அறப்போர் செய்து சிறை புகுந்தனர். அண்ணலுக்கு பல இடையூறுகள் விளைந்தன. கல்லும் மண்ணும் கலந்த சோறு தந்தனர். மண்ணைப் வெட்டப் பணித்தனர். அந்தச் சிறை வாழ்வு நம்போலியர்க்கு நரக வாழ்வாகவே இருந்திருக்கும்.

இராமநாமத்தை அடிக்கடி பயின்று நாவுக்குப் பயிற்சி யாக்கி விட்டமையால், அந்தச் சிறை நரகம் சுவர்க்கமாகவே அடிகளுக்குத் தோன்றியது. இந்த வரலாற்றுச் செய்தி கூறும் பகுதிக்கு ஏற்றம் தருவது இக்காப்புத்தானே!

---

வேரா - வேர்த்து. விதிர்விதிரா - நடு நடுங்கி சோரா - சோர்ந்து. அமையம் - நேரம். விழையார் - விரும்ப மாட்டார்.

# 42. இன்பம் விளைப்பது

"பல வேதங்களையும் கற்ற அந்தணர்களே! நீங்கள் குற்றமற்ற ஒழுக்க முடையவர்களாயினும், உம்மிடம் கல்வி குலம் ஆகியவற்றால் வரும் அகந்தை உள்ளதன்றோ அவை உள்ள மட்டும் நீங்கள் முக்தி பெற இயலாது"

—இது ஆண்டவன் கூற்று.

"வேதக் கல்வியாலும் ஒழுக்கத்தாலும் முக்தி பெற இயலாது என்றால், வேறு எதனால்தான் பெற இயலும்?"

—என்பது வேதியர்களின் வினா.

"நீங்கள் இழிகுலத்தவர் என்று ஒரு பகுதியினரை ஒதுக்கி வைத்துள்ளீர்களே! அவர்களுடன் சம நோக்குடன் உறவாடவில்லையேல், வேதங்கள் கற்றமையால் என்ன பயன்? எல்லா உயிர்களும் ஆண்டவன் வடிவமே என்பது தானே வேதத்தின் போதனை"

—இது ஆண்டவன் விடை.

"உயிர்க்கொலை, புலைப் புசிப்பு முதலிய பாவச் செயல்கள் செய்வதால்தானே, அவர்கள் இழிகுலத்தவர் ஆயினர். நாங்கள் வேண்டுமென்றே அவர்களைத் தாழ்த்தவில்லையே!"

—இது அந்தணரின் சமாதானம்.

"இழி செயல்களால் இழி குலத்தவர் ஆயினர் என்றே வைத்துக் கொள்வோம். இழிசெயல் செய்வதற்குக் காரணம் யாது? வாழ்வதற்கு வேண்டிய வசதிகள் அவர்களுக்குக் கிடைக்காமல், அனைத்தையும் நீங்களே எடுத்துக் கொண் டீர்களே! அவர்களுடன் பழகி, அவர்களின் புன் செயல்களை

நன்செயல்களாக மாற்றுவதற்கு முயன்றீர்களா? குழியில் விழுந்தவரைக் கைதூக்கி விடவேண்டும் என்றுதானே வேதம் சொல்லுகின்றது''

—இது ஆண்டவன் வாதம்.

''நாங்கள் முயன்றுதான் பார்த்தோம். அவர்களும் சிறிது ஒத்துழைத்தால்தானே, நாங்கள் அவர்களை மேலே தூக்கிவிட முடியும்! அதனால்தான் அவர்கள் இழிகுலத்த வராகவே உள்ளனர். இது அவர்கள் தலைவிதி''.

—இது வேதியரின் போக்குரை.

''சரி, உயிர்க்கொலை முதலிய பாவங்கள் செய்வதாலும் மேலே வரவேண்டும் என்ற முயற்சியில்லாமையாலுமே அவர்கள் இழிந்தவராக உள்ளனர் என்றீர்கள். ஒட்டு மொத்தமாக அனைவருமே அப்படித்தானா? ஒரு சிலராவது மேலே வர முயலவில்லையா? இறையடியாராக மலர வில்லையா?''

—இது ஆண்டவன் வினா.

''ஒரு சிலர் முயலலாம். உயிர்க்கொலை முதலியவற்றை நீக்கியிருக்கலாம். ஆனால், பெரும்பான்மையைக் கருதும் போது, அவர்களைத் தனியாகப் பார்க்க இயலாமல் போகின்றது''.

—அந்தணர்கள்.

''இறைவனைக் காட்டிலும் இறையடியார்கள் உயர்ந்தவர் என்று வேதம் கூறுகின்றதே! இழிகுலத்தவர் என்னும் என் அடியார்களை என்னைவிட உயர்ந்தவர் களாகிய அவர்களை—எனக்குச் சமமாகவாவது வைத்து வணங்கலாமே! வழிபடலாமே! அவர்களுக்கு நீங்கள் கற்ற வேதக் கருத்துகளைப் போதிக்கலாமே! உங்களிடம் இல்லா

சில பண்பாடுகள் அவர்களிடம் உண்டே—உழைத்துச் சாப் பிடுவது, உபகாரம் செய்வது, இயல்பாகவே பணிவுடன் நடந்து கொள்வது முதலிய பண்பாடுகள்—உண்டே அவற்றை அவர் களிடம் கற்றுக் கொள்ளலாமே!''

—இது இறைவன் செய்த உபதேசம்.

இறைவனுக்கும் வேதியர்களுக்கும் நடந்த இந்த உரை யாடலை யார் நேரில் கேட்டது? தொண்டரடிப் பொடி என்ற அந்தணர் தலைவர் கேட்டு, ஒரு பாடலாக வடித்துள்ளார்.

''பழுதிலா ஒழுக லாற்றுப்
பலசதுப் பேதி மார்கள்
இழிகுலத் தவர்க ளேனும்
எம்அடி யார்கள் ஆகின்
தொழுமின்நீர் கொடுமின் கொண்மின்
என்றுநின் னோடும் ஒக்க
வழிபட அருளி னாய்போன்
மதிள்திரு வரங்கத் தானே''

இறைவன் திருநாமம் இறைவனைக் காட்டிலும் சிறந்தது என்று முன்பே கண்டோம். இறைவன் அடியார்கள் எக் குலத்தினராயினும், இறைவனை விட மேலானவர் என்பதும் இறைவன் கருத்து.

இறை திருநாமம் ஓதி இறையடியாராகிய பரம பாகவதர் களை எக்குலத்தினராயினும், நம் உறவினர் என்று கொள்ள வேண்டாவா?

நாராயணன் என்றாலே அனைத்திலும் தங்கியிருப்பவன் என்று பொருள் என்பதை முன்பே கண்டோம். அனைத்திலும் தங்கியிருப்பவன் என்றால், நம்மிலும், பிறரிலும் சாதியந்தணரிலும் சண்டாளரிடத்திலும் தங்கி யிருக்கின்றான் என்பது பொருள் அல்லவா? அப்படியானால்

இறை சம்பந்தம் இல்லாதவரே இல்லையே! இந்த வகையில் நமக்குள் ஒழிக்க ஒழியாத உறவு உண்டே? ஆதலால் அனை வருடனும் உறவாடுவதே அறிவின் பயன் ஆகும்!

இத்தகைய சீரிய சிந்தனைப் பூக்கள் பூத்துக் குலுங்கும் சோலையாகத் தியாகப் படலத்தின் காப்பு அமைந்துள்ளது.

''ஓர்ஆயிரம் ஆகிய ஒண்மறைநூல்
வேர்ஆயினது இன்பம் விளைப்பதுஓம்
நாராயண நாமம் நவின்றிடுவோர்
யாராயினும் இங்கவர் எம்தமரே''

நாராயணசாமி, நாகப்பன் என்பார் தமிழ் மறவர்கள். தென்னாப்பிரிக்காவில் பல்வேறு இனத்து மக்களும் குடியேறி யுள்ளனர். அவர்களுக்குள் எந்த உலகியல் உறவும் இல்லை. ஆயினும் ஒருவர்க்கு வந்த இழிவு அனைவர்க்குமே என்ற உணர்வுடன் அந்தத் தமிழ் மறவர் இருவரும் போராடி உயிர்த் தியாகம் செய்தனர். இதற்குக் காரணம் உடலால் வந்த உறவல்ல; ஆன்மிக உறவு.

அந்த ஆன்மிக உறவைக் கூறும் பகுதிக்கு, ஆன்மிக உறவை விளக்கும் நாராயண நாமத்தின் புகழ் கூறும் இக் காப்பு ஏற்புடையது தானே!

---

ஒண்மறை - ஒளியுடைய வேதம். நாமம் - திருப் பெயர். தமர் - உறவினர்,

# 43. கதிநீ கொடுப்பின் தடுப்பார் யார்

இறைவன் அனைத்தாற்றலும் பெற்றவன். செயற்கரிய செய்ய வல்லவன் ஆதலால், அகடிதகடனா சாமர்த்தியன் எனப்படுவான். அவன் செய்வதைத் தடுப்பார் ஒருவரும் இலர். அவன் கருணைக் கடல். அடியார் கேட்பவை அனைத்தும் தரும் கற்பகம்.

நாம் மனம் பெற்றது அவன் பாத மலர்களை நினைப் பதற்கே! நினைத்தால் முத்தி தருபவன். அவன்பால் மனம் வைப்பது நம் செயலால் ஆவதல்ல. அவன் அருளாலே அவன் தாள் வணங்கி அவன் திருவடிகளில் மனம் வைத்தல் வேண்டும்.

நம்மைத் திருத்திப் பணி கொள்வதும் அவன் செயலே! அதற்காக நாம் செய்யவேண்டியது ஒன்றுமே இல்லையா! உண்டு.

நான் சுதந்தரமானவன் அல்லன்; உனக்கே அடிமை. உனக்கே உடைமை; உன் உடைமையை உன் விருப்பம்போல் பயன்படுத்திக் கொள்க! நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே என்று அவனிடம் சரண் புகுவது ஒன்றே நாம் செய்ய வேண்டியது.

அவன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தோமாயின், நம் ஊழையும் உப்பக்கம் காண அவன் அருள்வான். அவன் அருள் உண்டேல், விதிமுறுகிப் பயனை ஊட்டாது ஒழியும். அந்த விதியும் அவன் ஆணைக்கு உட்பட்டது தானே! இத்தகைய சிந்தனைகள் சுரக்கும் அருவியாக இருப்பது பண்ணைப் படலத்தின் காப்புப் பாடல்.

"விதிநீ விதித்த அனைத்திலிலும்
விலக்கோ! உன்தன் இசைவின்றி
அதிநீள் சினத்துஅவ் விதிஎன்னை
அலக்கண் உறுத்தி அடவற்றோ!
மதிநீ திருத்தி உன்பாத
மலரில் பொருத்தி மாறாத
கதிநீ கொடுப்பின் தடுப்பார் யார்?
கருணைக் கடலே கற்பகமே!"

அடிகள் தென்னாப்பிரிக்காவில் அறப்போர் நடத்திய போது, சிறை சென்றவர் பலர். அவர்கள் குடும்பத்தினர் வருவாய் இன்றி வருந்தினர். நிதிசேர்த்து அவர்களுக்கு உதவும் பொருட்டு டால்ஸ்டாய் பண்ணையை நிறுவினார் அடிகள். அப்பண்ணையில் பல இனத்தவரும் ஒன்றாகக் கூடித் தாமே உழைத்து ஒன்றாக உண்டு சருவோதய வாழ்வு வாழ்ந்தனர்.

தங்கள் வருங்காலம்—தலைவிதி—என்னாகுமோ என்று தெரியாத பண்ணைவாசிகள் "எல்லாம் ஆண்டவன் விருப்பப்படியே நடக்கட்டும்; இப்படித்தான் நடக்கவேண்டும் என்று நினைப்பதற்கு நாம் யார்" என்று பொறுமையாகத் தங்கள் பொறுப்புக்களை இறைவனிடம் ஒப்புவித்துவிட்டு, அவன் திருவருளையே நோக்கி வாழ்ந்த பகுதியைக் கூறும் படலத்துக்கு இதைவிடத் தகுந்த காப்பு இருக்க இயலுமோ?

---

விலக்கு - அப்பாற்பட்டது. இசைவு - சம்மதம். அதி - மிக்க. அலக்கண் - துன்பம். உறுத்தி - அடையச் செய்து. அட - சொல்ல. வற்றோ - வலிமையுடையதோ! மதி - மனம். கதி - முக்தி.

# 44. யான் எனது எனும் செருக்கு

அறிவற்ற அசேதனமான உடலாகவும் சேதனமான உயிராகவும் உள்ளவன் இறைவன்! எல்லா உலகமும் அவன் வடிவமே என்னும்படி அனைத்துக்கும் ஆதாரமாக அவன் உள்ளான்.

எல்லாம் அவன். எல்லாம் அவனுடைமை என்னும் உண்மையை உணர்ந்து கொண்டோமேல், இந்த உடலை நான் என்றும், சிலவற்றை எனது என்றும் உரிமை கொண்டாட இயலுமோ?

இறைவன் உடைமையை நம் உடைமையாகக் கருதுவது அறியாமை மட்டுமல்ல, திருட்டுச் செயலுங்கூட. ஆம். திருமங்கை மன்னன் அப்படித்தான் கூறுகின்றார்.

நான் என்ற அகங்காரமும் எனது என்ற மமகாரமும் அறியாமையால் வருவது. இந்த இரண்டுமே இடம் பிடித்துக் கொண்ட இதயங்களில், இறைவன் இருக்க மாட்டான். இறைவன் குடிபுகாத இதயத்தினர் பரமபதம் எனக்கு உரியது என்று உரிமை கொண்டாட இயலாது. ஆம். அவர்கள் பிறவிக்கடல் தாண்டி அக்கரை சேர இயலாது.

இத்தகைய உண்மைகளைச் சிந்திக்கத் தூண்டுவது அன்னையின் உறுதிப் படலத்தின் காப்புச் செய்யுள்.

'' யான்எனது எனும் செருக்கு இதயம் கொண்டயான்
வான்எனது எனஒரு வாய்ப்பு நேருமோ?
ஊன்என உயிர்என உலகம் யாவுமே
தான்எனக் கலந்துஉறை தத்து வத்தனே''

கஸ்தூரிபா நோய்வாய்ப் பட்டார். அறுவை சிகிச்சை செய்ய நேர்ந்தது. உடல் தேறுவதற்கு ஊன் சாறு பருக வேண்டும் என்று மருத்துவர் வற்புறுத்தினார்.

இவ்வுடல் மட்டோ வான் பெறினும் ஊன் என் வாய்ப் பட இசையேன் என்று அன்னை மறுத்துவிட்டார்.

"இந்த உடல் இறைவனுடையது. அதில் உயிர் நிலைப் பதும், பிரிவதும் அவன் விருப்பம். உயிர் உடலில் நிலைப் பதற்காக நான் ஏன் முயலவேண்டும்! இந்த உடலை எனது என்று எண்ணுவதால்தானே, ஊன் உண்டாவது ஓம்ப வேண்டும் என்ற ஆசை எழுகின்றது. நான் உடலை ஓம்பு வேன் என்பது அகந்தைதானே! உடலை எனது என்பது மமகாரம் அல்லவா? இந்த அகங்கார மமகாரங்கள் இறை வனிடமிருந்து நம்மை வெகுதூரம் பிரித்து விடுமே!" என்பது அன்னையின் திண்ணிய எண்ணம்.

இச்செய்தி கூறும் படலத்துக்குப் பொருந்திய காப்பு இது அன்றோ?

---

வான் - மோட்சம். தத்துவம் - மெய்ப்பொருள்.

# 45. என்னினும் யார் கள்வர்?

உடல், உயிர், பொருள் யாவும் இறைவன் உடைமைகள். அவற்றை என்னுடையன என்று கருதுவது பெருந்திருட்டு,

''உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறர்பொருள்
கள்ளத்தால் கள்வேம் எனல்''

என்பது தெய்வவாக்கு.

உயிர், உடல், பொருள்கள் இறைவனுக்கே உரியன என்ற தெளிவு எப்போது பிறக்கும்?

இறைவன் சிரமங்களைப் போக்கும் குளிர்ந்த மேகம் போன்ற திவ்விய மங்கள விக்கிரகமாக விளங்குபவன். அவன் நம்மை இயக்குகின்றான். அவன் அந்தர்யாமி. உள்ளேயிருந்து நியமிப்பவன். அந்தர்யாமியாக அவன் இருப்பதை உணர்ந்து கொண்டால், எல்லாம் அவனுடைமை என்பது தெளிவாகும். 'நமது' என்னும் விபரீத அறிவு கெட்டால் உலகில் சண்டையிலைல்ல; சச்சரவில்லை. எங்கும் அமைதி நிலவும்.

உள்ளத்தில் இருக்கும் இறைனை நாம் ஏன் காண இயலவில்லை! அதைக் காண்பதற்குப் பக்குவம் வேண்டும். அது ஞானம் எனப்படும். ஞானம் கண் போன்றது. ஆதலால் அது கண் என்றே கூறப்படும். அந்தக் கண் பெறாமையாலேயே உள்ளுவார் உள்ளிற்றெல்லாம் உடனிருந்தறியும் அந்த இறைவனைக் காணாமல் இருக்கின்றோம். அந்தக் கண்ணைப் பெற வேண்டியது மனிதப் பிறவியின் மாபெரும் கடமை.

இத்தகைய வாய்மையை விரிப்பது கோகலே வருகைப் படலத்தின் காப்பு.

உனக்குரிய ஆகிய என்
    உடல்ஆவி பொருள் யாவும்
எனக்குரிய எனக்கருதும்
    என்னினும்யார் கள்வர்உளார்?
நினைக்கரிய வான்பொருள்நீ
    நெஞ்சத்தில் இருந்தாலும்
கனக்கரிய மேனியனே
    கண்ணிலியான் காண்கிலனே!

வெள்ளையர் தென்னாப்பிரிக்கா முழுவதும் தமதோ என்று ஆட்சிக் கொடி நாட்டினர். அந்நாட்டுக்கு உரியர் ஆகிய நீக்கிரோவரையும் நாட்டை வளப்படுத்திய இந்தியரையும் அடிமைப்படுத்திக் கொடுமைகள் செய்தனர். அவர்கள் கொடுமையை எதிர்த்தே அண்ணல் அறப்போர் மேற் கொண்டார். அந்த நாட்டு நிலையை அறிவதற்காக கோகலே சென்றார்.

வெள்ளையாட்சியினரின் அகந்தையை இடித்துரைத்தார் கோகலே. நீக்கிரோவரின் உரிமையை நும் உரிமை என்பது திருட்டுக்கே ஒப்பாகும் என்று அறிவு கொளுத்தினார் என்ற செய்தியைக் குறிப்பாய் உணர்த்தும் கோகலே வருகைப் படலத்துக்கு மிகச் சரியான காப்பு இதுதானே!

---

என்னினும் - என்னைக்காட்டிலும். கனக்கரிய மேகம் போன்ற கருநிறமுடைய. கண்இலி - ஞானம் இல்லாதவனாகிய நான்.

# 46. மறுக்காமல் வரம் அருள்

ஆண்டவன் கருணைக்கடல். தன்னை அடைந்து கைங் கரியச் செல்வம் பெற்று உய்தி பெற வேண்டிய உயிர்கள், பிறவிச் சுழலிலே சிக்குண்டு பெருந்துயர்ப்படுவது அவனுக்கு உகப்பல்ல. அந்தச் சுழலிலிருந்து உயிர்களை ஈடேற்றவே விரும்புகின்றான்.

பிரளய காலத்தில் செயலிழந்து அசேதனங்கள் போல் கிடந்த உயிர்களுக்கு மனம் முதலிய கரணங்களும் கைகால் முதலிய கருவிகளும் அவை செயல்படுவதற்கு இடமாகப் புவனமும் செயல்படச் சுதந்தரமும் தருகின்றான்.

நன்மை தீமைகளைச் சிந்தித்துப் பந்தத்துக்கு ஏதுவான வினைகளை விலக்கி, இறையனுபவத்துக்கு உபகாரமான செயல்களைச் செய்வது உயிர்களின் கடமை.

நல்வினை செய்தாலும் நாமே செய்வதாக எண்ண லாகாது. ஏனெனில், "நான் நல்லது செய்கிறேன்" என்ற அகங்காரம் தோன்றுமே! அது இறையனுபவத்துக்குத் தடையாகுமே!

நாம் செய்யும் நல்வினைக்கும் இறைவனே காரணம். என் செயலாலினி ஆவ தொன்றில்லை. உன்செயலே எல்லாம் என்று எண்ணுதல் வேண்டும். அத்தகைய நற் செயல்களில் மேன்மேலும் செலுத்தும்படி இறைவனை வேண்டிக் கொள்ளுதல் வேண்டும்.

"இறைவா! நீ கொடுத்த கருவி கரணங்களைப் பயன் படுத்தாமல் சோம்பியிருத்தலாகாது. சோம்பியிருக்கலாகாது என்பதற்காகப் பாவச் செயல்களைச் செய்யலாமா? அதனால் மீண்டும் பிறவி வருமே! பிறவி எடுத்துக் களைப்படையக் கூடாது அல்லவா?

"மீண்டும் பிறவி எடுக்க நேருமாயின் அப்பிறவியிலாவது தீவினை கலக்காமல் விழிப்புடன் இருத்தல் வேண்டும். தீவினைக் கலப்பால் நெஞ்சம் துன்பமுறும். துன்பம் வரலாகாது. துன்பம் வந்ததே என்று சோர்ந்து வீணான செயல்களில் மீண்டும் ஈடுபடலாகாது. செய்வன செய்யாமையும் செய்யாதன செய்கையும் நரகிற்கு ஏதுவாகும். நரகிலிடுவதற்கு எமன் வருவானே! அவன் வந்து வளைத்துக் கொள்ளாமல் நீ வரத்தை மறுக்காமல் அருள வேண்டும்" என்பது எப்போதும் உயிர்களின் பிரார்த்தனையாக இருத்தல் வேண்டும்.

இப்படிச் சிந்திக்க வைப்பது வள்ளியம்மைப் படலத்தின் காப்பு.

"இளைக்காமல் கன்மம் இழைக்காமல்
சன்மம் எடுத்தெடுத்துக்
களைக்காமல் தீமை கலக்காமல்
நெஞ்சம் கவலையினால்
உளைக்காமல் வீணுக் குழைக்காமல்
எமன் உயிர் கவர
வளைக்காமல் சற்றும் மறுக்காமல்
ஐயா! வரம் அருளே!"

பதினாறு வயதுக்குமரி வள்ளியம்மை. இந்து முறைப்படி செய்யும் திருமணம் செல்லாது என்ற நீதிமன்றத் தீர்ப்பு கண்டு கொதித்து, அறப்போரில் ஈடுபட்டுச் சிறை சென்றாள். கொடுமை ஏற்று உயிர்த் தியாகம் செய்தாள். மறுபிறப்பு இருந்தால், அதிலும் நாட்டிற்கே உயிர் தருவேன் என்று சூள் உரைத்தாள்.

சோராமல் செய்யாதன செய்யாமல் நெஞ்சம் அஞ்சிக் களைக்காமல் வீணுக்கு உழைக்காமல் நாட்டுக்கு உழைத்து, எமனுக்கு அஞ்சாமல் போராடிய வீரமகள் வரலாறு கூறும் பகுதிக்கு இந்தச் செய்யுள் தகுதி வாய்ந்தது என்று கூறவும் வேண்டுமா?

---

உளைக்காமல் - துன்பமுறாமல்.

# 47. பயன் கொள்ளாதது ஏன்?

இறைவன் உலகெலாம் உடையவன். அவன் உடைமையே அனைத்தும். இந்த உண்மையை அனைவரும் உணரட்டும் என்றே ஓங்கி உலகளந்து காட்டினான். உலகளந்த செயலை வள்ளுவரும் பாராட்டியுள்ளார். வேறு எத்தெய்வத்தையும் பெயர் சுட்டிப் பேசாத வள்ளுவர், அடியளந்தானை மட்டும் பேசிப் பெருமை சேர்த்துள்ளார். உலகங்கள் அளந்தமையாலேயே, அவன் உத்தமன் ஆனான் என்கின்றார் ஆண்டாள்.

"உலகங்களையெல்லாம் இடமற அளந்து உன் உடைமை என்று காட்டினாயே! அப்படி அளக்கும்போது, என் தலையிலும் உன் திருவடி பட்டிருக்குமே! பட்டிருந்தால் என் மனமும் உனக்கு உடைமைதானே! அதுவும் நீ அளந்த நிலங்களில் அடங்கிய நிலம் என்று கொள்ளத் தடை என்ன?

"நிலம் பெற்றவர் அதைப் பண்படுத்துவர். பயிரிடுவர். தரிசாகப் போட்டு முள்ளும் புதரும் மண்ட விடுபவரை நல்ல உடைமையாளர் (உழவர்) என்று உலகம் கூறுமா? புதர் மண்டிப் போகவிட்டால், பாம்பு, புலி, கரடி முதலியன குடி புகுந்து விடுமே! அதனால் கேடு நேராதா?

"என் மனமாகிய நிலத்தையும் நீ பண்படுத்தாமல் தரிசாகப் போட்டால், தீவினைப் புதர் மண்டுமே! தீய குணங்களாகிய பாம்பு முதலியன குடிபுகுந்து விடுமே! இந்த நெஞ்ச நிலம் பயன்படாத பாலை அன்று. நன்செய் நிலமே! நல்ல பயனைத் தரவல்லது இது. இதைப் பண்படுத்திப் பயன் கொள்வாயாக!" என்பது ஓர் அடியவன் இறைவனிடம் செய்த விண்ணப்பம்.

"உழ வேண்டுமானால் கலப்பை, பிடிகயிறு, மாடு, தாற்றுக்கோல், நீர்வசதி ஆகியன வேண்டுமே! அதற்கு எங்குப் போவது?"

—இது ஆண்டவரின் எதிர் வினா.

"நீ அனைத்தும் உடையவன் என்று வேதம் கூறுகின்றதே! உன்னிடம் இல்லாத பொருள் ஏது? இல்லையாகிலும் நீயே படைத்துக் கொள்ளக் கூடுமே! படைக்காவிட்டாலும் பெற்றுக்கொள்ளலாமே!

"பலராமன் உன் அண்ணன் தானே! அவன் எப்போதும் கையில் வைத்திருக்கும் ஆயுதம் கலப்பைதானே! அதை நீ கேட்டால் சிறிது போதுக்குத் தரமாட்டானா?

"நீ வெண்ணெய் திருடினாய் என்று தாய் யசோதை உன்னை உரலில் கட்டினாளே! அதற்குப் பயன்பட்ட கண்ணி நுண் சிறு தாம்பு அறுந்து போனதாகக் கேள்விப் படவில்லையே! அனைத்தாற்றலும் பெற்ற உன்னையே கட்ட வல்ல கயிறு மாடு கட்டப் போதாதா?

"கன்றுகளை மேய்த்ததால்தானே உனக்குப் பெருமை! பரமபத இன்பத்தைக் காட்டிலும் கன்று மேய்ப்பதில்தானே உனக்கு விருப்பம் அதிகம்! "தவத்திலும் பசுநிறை மேய்ப்பு உவத்தி" என்று நம்மாழ்வார் கூறியுள்ளாரே! நீ வளர்த்த கன்றுகள் உன் அன்பாலும் கைபடுவதாலும் செழித்துக் கொழு கொழு என வளர்ந்தனவாமே! அந்தக் கன்றுகளுக்கு ஏர் நுகம் தாங்கும் ஆற்றல் இல்லாமலா போகும்!

"முன்பு பார்த்த சாரதியாகத் தேர் ஓட்டினாயே! அப்போது கையில் ஒரு கோல் இருந்ததே! அந்தக் கோல் உடைந்து அழிந்ததாகத் தெரியவில்லையே! அக்கோலையே தாற்றுக் கோலாகப் பயன்படுத்தக் கூடாதா? உன் கைபட்ட பொருளுக்கு அழிவு உண்டா?

"நீ உலகளந்தபோது, பிரமன் உன் திருவடிகளை விளக்கினானாமே! அப்போது பெருகிய நீரே கங்கையாகப் பொங்கியதாம் என்று புராணங்கள் கூறுகின்றனவே! உன் திருவடிப் பரிசம்பட்ட கங்கை நீரைப் பாய்ச்சிக் கொள்ளலாமே! அது பாழ்பட்டு வறண்டு விடவில்லையே!"

—இது அடியவன் பேசிய சமத்காரப் பேச்சு.

"சரி, சரி. நெஞ்சமாகிய நிலம் உன்னதன்றோ! அடுத்தவர்க்கு உரிய நிலத்தை எப்படி உழமுடியும்? எனக்கு அது உரிமை என்பதற்குச் சான்று உண்டா?"

—இடையில் இறைவன் எழுப்பிய வினா?

"ஐயா! நீ இப்படிக் கூறலாமா? முன்பு பகவத் கீதை என்ற உபநிடதம் அருளினாயே! அதில் 'எல்லா உடல்களாகிய க்ஷேத்திரங்களிலும்[1] வாழ்கின்ற க்ஷேத்ரக்ஞனாக[2] என்னை அறிந்து கொள்' என்று நீ கூறவில்லையா? எல்லா நிலங்களுக்கும் உரியவன் என்பதுதானே க்ஷேத்திரக்ஞன் என்பதன் பொருள்! நீயே எழுதித்தந்த அந்தப் பாத்தியப் பத்திரம் கிழிந்து போகவில்லையே! இன்னும் இருக்கத்தானே செய்கின்றது.

"ஆகையால் என் நெஞ்சமாகிய நன்செய்யைப் பண்படுத்தி அன்புவித்திப் பலன் கொள்வதற்கு எந்தத் தடையும் இருக்க இயலாதே!"

—இது அடியவன் அளித்த விடை.

ஆண்டவனுக்கும் அடியவனுக்கும் நடந்ததாக இதுகாறும் கூறிய உரையாடல் கற்பனைதான். கற்பனையிலே கவர்ச்சி உண்டு. கவர்ச்சி மட்டுமா! ஆழ்ந்த தத்துவமும் உண்டு. எல்லாம் அவனுடையனவே என்ற உண்மையை அறிவதால், இறையனுபவத்துக்குத் தடையான அகங்காரம் போக வழி திறக்கப்படுகின்றது.

---

1. க்ஷேத்திரம் - நிலம். 2. க்ஷேத்திரக்ஞன் - நில உரிமையாளன்.

இக்கருத்தமைந்த பாடல் எழுச்சிப் படலத்தின் காப்பு.

"மூத்த நம்பி கைப்பிடித்த
மேழி இற்று டைந்ததோ?
முன்னை அன்னை உன்னை யாத்த
தாம்ப றுந்து விட்டதோ?
மேய்த்த கன்று நல்நு கம்ப
ரிக்கும் ஆற்றல் அற்றதோ?
வெம் பரிக்கெ டுத்த கோல்வி
ழுந்து டைந்து போனதோ?
பாத்தி யப்ப டப்ப திந்த
பத்தி ரம்கி ழிந்ததோ?
பதத்தி னிற்பி றந்த கங்கை
பாழ்த்து லர்ந்து பட்டதோ
வாய்த்த நெஞ்ச நன்செய் பண்ப
டுத்தி அன்பு வித்தியே
வண்ப யன்கொ ளாத தென்னை—
மண்அ ளந்த மாயனே!"

ஆப்பிரிக்களுக்குச் சொந்தமான நிலத்தை இடையிலே புகுந்த வெள்ளையர் தமதென்று வலிந்து கவர்ந்து கொண்டனர். நாட்டை வளப்படுத்திய இந்தியரையும் இழிவு படுத்தினர். இக்கொடுமையை எதிர்த்து அறப்போர்ப் படையின் புறப்பாட்டைச் கூறும் பகுதிக்கு, இறைவனுக்கு உரிய பொருளாகிய உடல், உயிர், உடைமைகளைத் தம் முடையன என்று கருதி இறுமாந்து நிற்பது கூடாது என்பதைக் குறிப்பால் விளக்கும் இக்காப்பு மிகப் பொருத்தம் அன்றோ?

---

மூத்தநம்பி - பலராமன். மேழி - கலப்பை. முன்னை - முற்காலத்தில். அன்னை - யசோதை. யாத்த - கட்டிய. தாம்பு - கயிறு. நுகம் - நுகத்தடி. பரிக்கும் - சுமக்கும். பரி - குதிரை. கோல் - தாற்றுக் கோல். பாத்தியம் - உரிமை. பத்திரம் - உரிமைஏடு (கீதை). பதம் - திருவடி. பாழ்த்து - பாழ்பட்டு. பயன் - விளைவு.

# 48. கன்றுருவாகிலென்

உயிர்கள் இறைவன் உடைமைகள்; அடிமைகள். இறைவன் அலகிலா விளையாட்டு உடையவன். அனைத்துச் செயல்களும் விளையாட்டாக—அனாயாசமாகச் செய்து முடிப்பவன். அவன் விளையாட்டுக்குக் கருவிகளாகவே சேதன—அசேதனங்கள் உள்ளன.

இறைவனுக்கு ஐந்து நிலைகள் உண்டு. முதல் நிலை பரம் என்பது. அது பரமத்தின் இருப்பு. மனம் வாக்குக் களுக்கு எட்டாத தூரத்தில் எங்கோ இருப்பது பரமபதம். ஆகாய கங்கையைப் போன்றது. தாகம் கொண்டவனுக்கு ஆகாய கங்கை நீர் பயன்படுமா? பரம் என்ற நிலையும் பக்தர்களுக்குப் பயன்படாது. அடுத்த நிலை வியூகம். அது திருப்பாற்கடல் என்பர். இந்த லீலாவிபூதியில் (உலகில்) எங்கோ இருப்பதாகக் கேள்விப்படுவதன்றி அதைக் கண்டவர் அரியர். அதுவும் தாகங்கொண்டவனுக்குப் பயன்படாது.

இன்னொரு நிலை அந்தரியாமித்துவம், உயிர்களைச் செயலில் தூண்டுவதற்காக அவற்றின் உள்ளத்தில் இருக்கும் நிலை அது. உள்ளத்திருக்கும் உத்தமனைக் காண்பது ஞானி களுக்கு ஒருகால் இயலலாம். சாதாரண மக்களுச்கு அந்நிலையும் பயன்படாது. நிலத்தடி நீருக்கு ஒப்பிடலாம். தாகம் கொண்டவனுக்கு உடனே பயன்படாது. குந்தாலி கொண்டு பூமியை ஆழமாக வெட்டி நீரை அரிதாகப் பெற வேண்டும்.

இந்த நிலைகள் அரியனவாதல் கருதிய இறைவன், உயிர்கள் இருக்குமிடம் தேடித் தானேவரும் நிலை ஒன்று

உண்டு. அதுதான் விபவ நிலை என்பது. விபவம் என்றால், அவதாரம் என்று பொருள்.

இறைவன் அவதாரங்கள் கணக்கில. மேலும் அவதாரங்கள் செய்து கொண்டே இருப்பான். இச்செயல் அவனது பெருங்கருணையைக் காட்டுகின்றது.

எண்ணிலடங்காத அவதாரங்களில் பத்து மிகமிக உயர்ந்தவை. அந்தப் பத்திலும் வைத்து, இராம, கிருஷ்ண அவதாரங்கள் பூரண அவதாரங்கள் எனப்படும். இராமன் வாயால் உபதேசம் செய்யாமல், செயலில் நடந்து காட்டி, நடையில் நின்றுயர் நாயகன் ஆனான்.

கண்ணன் செயலால் காட்டாமல், வாயால் மட்டுமே உபதேசம் செய்தான். அவன் காட்டிய வழி நல்லவழி. உய்வதற்கேற்ற உயர்ந்தவழி, எளியவழி, அந்த வழிதான் கீதை காட்டு சரணாகதி.

"எல்லாத் தர்மங்களையும் கைவிட்டு, என்னையே சரணமடைவாயாக! நான் மோட்சத்துக்குத் தடையான உன் பாவங்களை நீக்கி விடுவேன். வருந்தாதே" என்பது கண்ணன் வாக்கு.

இவ்விரண்டு அவதாரங்களிலும் இராம அவதாரம் திரேதாயுகத்தது; காலத்தால் முந்தியது. கண்ணன் அவதாரம் கலியுகத்தை ஒட்டிய துவாபரயுகத்தது. அண்மை அவதாரம். ஆதலால் ஆழ்வார்கள், ஆசாரியர்கள் அதில் அதிகம் ஈடுபடுவர்.

கண்ணனுடன் தொடர்புடைய துவாரகை, கோவர்த்தனம், யமுனை, பசுக்கூட்டம், வேய்ங்குழல், முதலியவற்றை நினைக்கும் போதெல்லாம் இறும்பூதுறுவர். அவன் பசு மேய்க்கையில் அவன் கைச்சாதனம் ஒன்றாகப் பிறந்திலமே என்று ஏங்குவர்.

பசுக்களைவிடக் கன்றுகளை மேய்ப்பதில்தான் கண்ணனுக்கு அதிக விருப்பம். பசுக்கள் புல் இருக்குமிடம் அறிந்து தாமே சென்று வயிறார மேய்ந்துகொள்ள இயலும். தம்மைத்தாமே காக்கும் ஆற்றல் இல்லாதவை கன்றுகள். அவற்றைக் காப்பதுவே சிறப்பு என்பது கண்ணன் கருணை நினைப்பு. கற்றினம் மேய்த்து இனிதுகந்த காளை என்பது ஆழ்வார்கள் அவனுக்குச் சூட்டிய பெயர்.

கண்ணனாய் அவதரித்து யமுனைக் கரையிலே கன்று களை மேய்க்கும்போது, ஒரு கன்றாகப் பிறந்திருக்கக் கூடாதா? பிறந்திருந்தால், அவன் பரிசம் பெறும் பேறு பெறலாமே!

அவன் பசுக்களைக் காக்க ஒரு மலையை எடுத்தானே அந்த மலையாகப் பிறந்திருந்தாலும் அவன் கைப்பரிசம் கிட்டியிருக்குமே!

அவன் பசுக்களை மேய்க்க ஊதிய வேய்ங்குழலாகப் பிறந்திருக்கக் கூடாதா? பிறந்திருந்தலே், அவன் வாயிதழ்ச் சுவை அனுபவித்திருக்கலாமே!

''கருப்பூரம் நாறுமோ
கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான்
தித்தித் திருக்குமோ!'

என்று ஆண்டாள் ஈடுபட்டவை அல்லவா அவன் வாயிதழ்கள்!

இறை சம்பந்தம் இல்லாத பிறப்பு என்பிறப்பு! இத்தகைய ஆக்கத்துக்கு வழிதிறக்கும் ஏக்கத்தைக் காட்டுவது தூதுப் படலத்தின் காப்பு.

''கன்றுரு வாகிலென், கோல்எடுத் தோட்டக்
கடல் வண்ணனே!
குன்றுரு வாகிலென் நின்கரம் ஏந்தக்
குழல் என்னவே

அன்றுரு வாகிலென் நின்இதழ் துய்க்க—
நல் ஆய்மகனாய்ச்
சென்றுரு வாய்நீ நிரைமேய்க் கையில்நதித்
தீரத்திலே.

அண்ணல் அறப்போருக்குப் புறப்பட ஆயத்தமானார். முன்கூட்டியே அறிவிக்காமல் அறப்போர் தொடங்கினால், அரசினர் செய்வதறியாமல் திகைக்க நேருமே! ஓர் இக்கட்டான நிலை ஏற்படுத்துவது அறப்போர் முறைக்கு முரண் ஆகுமே! ஆதலால் படையெழுச்சியை அறிவித்து வருமாறு கல்லென்வாகு என்பவரைத் தூது அனுப்பும் பகுதி தூதுப் படலம்.

கண்ணன் தொடர்பு இருந்தால் போதும் என்று வலியுறுத்தும் இந்தப் பாடல், அண்ணலின் தொடர்பு ஒன்றே போதும் என்று அடைந்த வெள்ளையினத்தவராகிய கல்லென் வாகுவின் சிறப்பினை விளக்குகின்ற தன்றோ!

---

ஆகிலென் - ஆகிப்பிறந்திலேனே! குன்று - மலை. குழல் - புல்லாங்குழல். துய்க்க - அனுபவிக்க. ஆய்மகன் - இடையன். நிரை - பசுக்கூட்டம். நதித்தீரம் - ஆற்றின் கரை.

# 49. சரமச்சுலோக விசேடநெறி

தீயவரை அழித்து நல்லவரைக் காப்பது இறைவனின் அவதார நோக்கம். தீயவர் இருப்பதால்தானே அவர்களை அழிக்க நேரிடுகின்றது. தீமைக்கு அடிவேர் அறியாமை தானே! அறியாமையைப் போக்கிவிட்டால், தீமை இல்லாமல் போகுமே! தீயவர்கள் உருவாக இயலாதே! இறைவன் முதலில் அறியாமையைப் பொக்க முனைகின்றான். அறியாமையை இருளுக்கு ஒப்பிடுவர். இருளைப் போக்க ஒளிதானே தேவை கீதை ஒளிச்சுடரை முதலில் ஏற்றினான் இறைவன்.

அறியாமையின் வேர் எது? அழியும் உடலை—தன்னதல்லாத உடலை—பந்தத்துக்கு ஏதுவான உடலை தான் என்று கருதுவதே அறியாமைக்கு வேர். அந்த வேரை வெட்டிவிட்டால் அறியாமை வளர்வதெப்படி? அங்கே அறிவு வளரும். அறியாமையை வெட்ட வாள் வேண்டும்! அந்த வாள்தான் ஆன்மிக அறிவு. உயிராகிய உடல் 'தான்' அன்று. வேறானவன் என்று அறிந்து கொள்வது ஆன்மிக அறிவு எனப்படும். உடல் அசேதனம்; அழியாதது ஆயினும் மாறிக் கொண்டேயிருப்பது. ஆனால், உயிர் என்றும் மாறாதது.

உயிரைக் காற்று உலர்த்தாது. நெருப்பு எரிக்காது. நீர் நனைக்காது. வாள் வெட்டாது. அது இறைவனைப் போல் தொடக்கமற்றது. என்றும் உள்ளது. அழியாதது. கண்ணுக்கு மட்டுமல்ல; கருத்துக்கும் காண இயலாதது. நுனித்து உணரலாமே அன்றி, வெளிப்படையாகக் காண இயலாதது. மாறாமல் என்றும் உள்ளது. இத்தகைய இயல்புடைய உயிர் இறையனுபவம் பெறுவதற்கு உரிமை

யிருந்தும் 'தான்' என்ற செருக்கினால், தீவினை பெருக்கி அதன் பயனாக அசித்தாகிய உடலை மீண்டும் மீண்டும் எடுத்து இடர்ப்படுகின்றது. அந்த இடரை உயிர் தானே முயன்று போக்கிக் கொள்வது அரிது.

தானே முயன்று இறைவனை அடையும் தகுதி தனக்கு இல்லை என்று தெளிந்து 'களைவாய் துன்பம் களையாது ஒழிவாய் களைகண் மற்றில்லேன்' என்று அவனைச் சரணம் அடைவதே இடர் போக்கும் வழி. கீதை காட்டும் வழி இதுவே!

போரில் அர்ச்சுனன் பந்துக்களைக் கண்டு பரிதபித்து வில்லைச் சோரவிட்டு அயர்ந்த போது, வேதப் பொருளின் முழுமையான சாரத்தை விளக்கி, மாயையின் இயல்பினை உணர்த்திக் கண்ணன் ஆன்மிக போதனை அளித்தான். அதுதான் கீதை. அது உயிர்களின் அறியாமையைப் போக்கித் திருத்திப் பணிகொள்ள இறைவன் கையாளும் வழி· காந்தியடிகளைப்போல், பகைவரைக் கொல்லாமல், பகைமையை மட்டும் அழித்து நட்பாக்கும் சீரியவழி.

இந்த ஆன்மிக போதனையாலும் திருந்தாதவர்களை என்ன செய்வது? தேவியைப் பிரித்த பாவி இராவணன். அத்தகைய கொடியவனையும் திருத்திப் பணிகொள்ளவே இறைவன் விரும்பினான். அங்கதனைத் தூதுவிட்டு அறிவுரை கூறினான். முதல் நாள் போரில் தோற்று வெறுங்கையனாக இருந்தபோது இரங்கினான். அவன் சிந்தித்து முடிவெடுப்பதற்காக இன்றுபோய் நாளை வா என்று அவகாசமும் தந்தான். அவன் திருந்தவில்லை. அகம்பாவம் இறைவன் அருளைப் புறக்கணித்தது.

வேறு என்ன செய்வான் இறைவன்? தண்ணீரில் நெருப்புக் கிளர்ந்தாற்போல், அவன் உள்ளத்தில் சினம் பிறந்தது. இராவணன் அழிந்தான்.

தீமையை அழிப்பதற்காக அவதாரம் எடுப்பதும் செயலாலும் வாக்காலும் திருத்திப் பணிகொள்வதும் அரிய செயல்களாகும்.

அவதாரம் செய்யும்போது, அக்காலத்தில் உள்ளவர்க்கு மட்டுமே அவன் செயல்களும் உரைகளும் பயன்படும். பின்னானவர்களுக்கும் பயன்பட வேண்டாவா? அதற்கு என்ன வழி? அர்ச்சை வடிவமாக ஊர்தோறும் குடிகொண்டு உயிர்கள் மனத்தூய்மை பெற்று ஈடேறும்படி தன்பால் வசீகரிக்கத் தொடங்கினான். மண்ணோர் விண்ணோர்க்கும் கண்ணாக விளங்குவது அர்ச்சை வடிவேயாகும்.

அவதாரங்கள் காட்டாற்று வெள்ளம் போலும்! மழைக் காலத்தில் காட்டாற்றில் வெள்ளம் வரும். அப்போது உள்ளவர் மட்டுமே தாகம் தீர்த்துக் கொள்ளலாம். கோடையில் காட்டாறு வறண்டு போகும்.

அர்ச்சையைக் காட்டாற்று வெள்ளம் தேங்கிய மடுவுக்கு ஒப்பிடுவர். காட்டாற்றில் வெள்ளம் போகும்போது, வழியில் உள்ள ஆழமான மடுக்களில் நீர் தேங்கும். காட்டாறு வறண்டு போகையிலும் அந்த மடுநீர் உயிர்களுக்குப் பயன்படும்.

எக்காலத்தும் பயன்படுவது அர்ச்சை. ஊர்தோறும் அமைவது இறைவன் திருவுருவங்கள்.

வானில் ஏற்றிய விளக்கு அனைவர்க்கும் பயன்படுவது போல இந்த அர்ச்சையும் அனைவர்க்கும் பயன்படும்.

இத்தகைய சிந்தனைச் சுடரை விரிக்கும் திருவிளக்காக உள்ளது வெற்றிப் படலத்தின் காப்பு.

மாருதம்உ லர்த்தொ ணாதது
நீள்கனல்எ ரிக்கொ ணாதது
வார்புனல்ந னைக்கொ ணாதது நெடுவேலும்

வாள்களும்அ டர்க்கொ ணாததுஅ
நாதிஅழி வைப்பெ றாதது
மாமனது பற்றெ ணாதது பலகாலும்

தேரின்அவி யக்தம் ஆகிவி
காரமற நித்ய மானது
சீவன்இத சித்தி னோடுறும் இடர்தீரத்

தேடிஉன்வ சத்தி லாய்அசை
யாதுசர மச்சு லோகவி
சேட நெறி நிற்கு மாறினி அருள்வாயே

போரினில்எ டுத்த வார்சிலை
சோர்வுறஅ யர்த்த போதொரு
போர்விசய னுக்கு நான்மறை முடிவான

பூரணம்வி ளக்கி மாயையின்
ஓரியல்பு ணர்த்தி ஆன்மிக
போதனைஅ ளித்த மாதவ மதுசூதா

வாரிதிஅ டைத்தி ராவணன்
ஊரினில்அ ரக்கர் ஆருயிர்
வாரியஅ டற்ச ராசனம் உடையோனே

வாரிசம கட்கு நாயக
சேடஅச லத்து மீமிசை
வானகவி ளக்கின் மேவிய பெருமாளே.

ஆன்மிக அறிவு உதயமாகி விட்டால் அறியாமை இருள் விலகுவது உறுதி. அகிம்சைப் படை எழுந்துவிட்டால் அன்னியன். ஆணவச் செருக்கு அழிவது உறுதி. பகை அழிந்து பகைவர் நண்பராவது உறுதி என்பதை விளக்கும் பகுதிக்கு இதைவிடச் சிறந்த காப்பு இருத்தற்கு இயலுமா?

---

மாருதம் - காற்று. கனல் - நெருப்பு. புனல் - நீர். அடார்த்தல் - கொல்லுதல். அநாதி - ஆதியற்றது. தேரின் - ஆராய்ந்தால். அவியக்தம் - கண்ணில்படாதது. விகாரம் - மாறுவது. நித்யம் - என்றும் உள்ளது. சீவன் - உயிர். அசித்து - உயிர்இல் பொருள், இடர் - துன்பம். சரமச்சுலோகம் - கீதையில் உள்ள ஒரு சுலோகம்; சரணாகதியை விளக்குவது. விசேடநெறி - சிறப்புவழி. சிலை - வில். அயர்த்த - மயங்கிய. விசயன் - அருச்சுனன். பூரணம் - முழுமை. இயல்பு - சுபாவம். வாரிதி - கடல். வாரிய - அன்னிய. சராசனம் - வில். அடல் - வலிய. வாரிசமகள். திருமகள். சேடஅசலம் - திருவேங்கடமலை. மீமிசை - உச்சியில். விளக்கின் - விளக்குப்போல.

# 50. என்உருவம் வாங்காதது ஏன்?

இறைவனை மலர்மிசை ஏகினான் என்றார் வள்ளுவர். தன்னை நினைந்தாருடைய மனமாகிய மலரிலே விரைந்து சேர்பவன் என்று அதற்குப் பொருள். மனன்அக மலம்அற மலர்மிசை எழுதரும் இனன் உணர்வு அளவிலன் என்றார் நம் மாழ்வார். இறைவன் எழுந்தருளும்போது மனத்துக்கண் மாசு அழிந்து போகும் என்பது நம்மாழ்வார் கருத்து.

இவற்றால், நம் உள்ளம் இறைவனுக்கு ஆலயமாகும் தகுதியுடையது என்பது தெளிவாகின்றது.

இறைவனுக்கே உரிய நெஞ்சத்தில் பிற விஷயங்களுக்கு இடம் தருவது தகாது. வானிடை வானவர்க்கு வகுத்த அவிசினைக் கானிடைத் திரிவதோர் நரி புகுந்து கடப்பதும் மோப்பதும் செய்ய விடலாமா?

எப்போதும் இறைனை் நம் இடத்தில் தங்கியிருப்பவன் நாம் மணத்துக்கண் மாசிலர் ஆவோம். மனமாசு தீர்ந்நால் வாழ்வு வளம் பெறும்.

இறைவனை எப்போதும் மனத்தில் இருத்துவது எப்படி? அவன் புகழையும் திருக்கல்யாண குணங்களையும் பேசி, திவ்விய மங்கள விக்கிரகமாகிய திருவடிவினைத் தியானிப் பதே அதற்கு உபாயம். அவ்வுருவை நம் மனத்தினுட் பொதிந்து வைத்திட்டால், நம் உருவை அதாவது நம் உயிரை அவன் தன்னுட் பொதிந்து கொள்வான். ஆம். நம்மைத் தானாக்கிக் கொள்வான். இறைவனுடன் ஒன்றி விட்டால், எல்லாத் துன்பங்களுக்கும் கொள்கலமாகிய பிறவி ஏது? நலமந்த மில்லைதோர் நாடு நம்மதாகி விடுமே!

பனிநாட் காலைப் பொழுதிலே பசும் புற்களைக் காண்கின்றோம். அப்புற்களின் சிற்றிலை தோறும் பனித் துளி உருண்டு அழகு காட்டிச் சிரிக்கும். அது வெற்றுப் பனித் துளிதானா? இல்லை! இல்லை! அஃது ஓர் ஒளிக் களஞ்சியம். அது ஒளிக்களஞ்சியம் ஆனது எப்படி? அந்தப் பனி முகத்தைக் கூர்ந்து நோக்குங்கள். அதனுள் வானத்துப் பெருஞ் சூரியனே முழுமையாக அடங்கி யிருப்பதைக் காணலாம். சூரியன் தங்கியிருக்குமிடம் ஒளி மயமாவது வியப்பா?

வெயில் சிறிது ஏறியவுடன் அப்பனிமுத்து கரைந்து சூரியக் கதிர்வழி சூரியனில் கலந்து மறைந்து விடுகின்றது. தன் உருவத்தைப் பொதிந்து கொண்டுள்ளமை அறிந்து மகிழ்ந்த சூரியன், தன் கிரணக்கரம் நீட்டி அப்பனி முத்தினைத் தன்னுடன் சேர்த்துக் கொள்கின்றான் என்று கவிஞர் தற்குறிப்பேற்றமாகக் கற்பனை செய்யலாம்.

அதைப் போலவே ஆண்டவனும் தன் உருவத்தைப் பொதிந்து கொண்டுள்ள உள்ளங்களைத் தன் அருட்கரம் நீட்டித் தன்னுடன் இணைத்துக் கொள்வான் என்று கொள்ளலாமே! இவ்வாறு சிந்தனைத்தேர் உருள்வதற்குப் பாதையாக அமைவது ஆசிரமப் படலத்தின் காப்பு.

''தன்உருவம் உட்பொதியும்
    தண்நறும்புற் பனித்துளியை
மின்உருவக் கிரணத்தால்
    வெய்யவன்உள் வாங்குதல்போல்
உன்உருவம் நெஞ்சத்தின்
    உட்பொதிந்து வைத்திட்ட
என்உருவம் வாங்காத
    தேன்? எந்தை பெம்மானே!''

அண்ணல் தென்ஆப்பிரிக்காவிலிருந்து தாயகம் திரும்பிய பின்பு, அகமதாபாத்தில் ஓர் ஆசிரமம் நிறுவி அதில் தங்கினார். அங்குத் தூதாபாய் என்ற அரிஜனுக்கும் இடம் தந்தமையால், பொருள் முட்டுப்பாடு ஏற்பட்டது. ஆசிரமம் தொடர்ந்து இயங்க இயலாத நிலை வந்தது. அப்போது யாரோ ஒருவர் பொருளுதவி செய்துவிட்டு மறைந்து விட்டார். ஆண்டவனுக்கு மனத்தில் இடம் தந்து விட்டால், அந்த மனத்தைத் தனக்கே உரியதாக்கிக் கொண்டு, இடர் வருங்கால் இனிது காப்பான் என்ற வாய்மையை விளக்கும் வரலாற்றுப் பகுதிக்கு ஏற்புடைய காப்புத்தானே இது.

---

புல்பனி - புல்லிலேயுள்ள பனி. வெய்யவன் - சூரியன். வாங்காதது - உன்னுடன் சேர்த்துக் கொள்ளாதது ஏன்?

# 51. யாது நினக்கு அரண்?

உலக வாழ்வு சம்சாரம் எனப்படும். அது பந்தம் தருவது. அந்தப் பந்தந்தான் பிறப்புக்கு விதையாவது.

கள் உண்டவருக்கு மயக்கம் வரும். உலகப் பற்றுடையோர்க்கும் மயக்கம் வரும். கள்ளால் வரும் மயக்கம் நேரம் செல்லச் செல்லத் தானாகவே தெளிந்துபோகும். உலகப் பற்றால் வரும் மயக்கம் தானாகத் தீராது. காலம் அதைக் கரைக்காது. மாறாக மேன்மேலும் வளரச் செய்யும். அந்த மயக்கமே பழகிப் போகும். 'மயக்கம் கூடாது, அதிலிருந்து மீளவேண்டும்' என்ற உணர்வு மழுங்கிப் போகும். மயக்கம் தீராமலே மேலும் மேலும் வளர்ந்து இறுதியைத் தழுவச் செய்வது நஞ்சு. உலகப் பற்றினைக் கள்ளுக்கு ஒப்பிடுவதை விட நஞ்சுக்கு ஒப்பிடுவதே பொருத்தமாகும்.

அறிந்திருந்தும் நஞ்சினை அருந்தலாமா? அருந்துவது அறியாமை அன்றோ? அறிவு மயமானது இந்த உயிர். அந்த அறிவைப் பயன்படுத்தாமல் விடுவது தீமையாகும்.

நாம் நன்கு சிந்தித்தால், உலகப் பற்று பொய்யானது. இறை பற்று ஒன்றுதான் உண்மையான ஆதாரம் என்பது தெளிவாகும்.

இறைவன் இரக்கத்தின் வடிவானவன். அஞ்சற்க என்று ஆட்கொள்வதற்காக விரைந்து வரும் இயல்புடையவன். அவன் கைவிட்டாலுங் கூடக் கைவிடாதன திருவடிகள். அத்திருவடிகளைத் திண்கழல் என்பார் நம்மாழ்வார்.

இறைவன் திருவடிகளைச் சேர்வதற்கு நினையாமல் போனால், நமக்கு வேறு தஞ்சம் உண்டோ?

இத்தகைய எண்ணச் சுடரை விரிக்கும் விளக்காக அமைவது அவுரிப் படலத்தின் காப்புச் செய்யுள்.

''அஞ்சேல் என ஆளவரும் பெருமான்
செஞ்சேவடி சேர நினைந்திலையால்!
நஞ்சேநிகர் வாழ்வு நயந்தனையே
நெஞ்சேஇனி யாது நினக்கரணே''

சம்பாரன் மாவட்ட உழவர்கள் ஆங்கில நிலப் பிரபுக்களின் சுரண்டற் கொடுமை தாங்காமல் அபயம் புகுந்த போது, அஞ்சேல் என்று அண்ணல் ஆட்கொண்ட வரலாறு கூறும் பகுதிக்கு அஞ்சேல் என ஆண்டவன் ஆட்கொள்ளும் கருணைத்திறம் கூறும் பாடல் பொருத்தமான காப்புத் தானே!

---

அஞ்சேல் - பயப்படாதே! சேவடி - திருவடி. அரண் - புகலிடம்.

# 52. அற்பனேன் சொற்பன் ஆனேன்

அரிது அரிது மானிடர் ஆதல் அரிது என்பர் ஔவையார். மனம் என்ற ஒன்று பெற்றமையே மனிதனுக்குச் சிறப்பு. மனிதர் என்ற பெயரும் அதனாலேயே வந்தது.

நல்லது இது தீயது இது என்று ஆய்வதற்குரிய கருவி மனமே. தக்க இன்ன தகாதன இன்ன என்று ஒக்க உன்னல ராயின் உயர்ந்துள மக்களும் விலங்கே என்பர் கம்பர்.

உலக நலத்தின் பொருட்டுத் தவவாழ்வில் ஈடுபட விழைபவர் சான்றோர். அவர்கள் உறவு கொள்ளத்தக்கது. அந்த உறவால் நம்மனம் பண்படும். நற்செயலில் ஈடுபடாத அற்பர்களின் உறவு தள்ளத்தக்கது. அவர்கள் உறவால் நாமும் அற்பர்களாகி விடுவோம்.

இறைவன் திருமார்பில் விளங்குவது கவுத்துவ மணி. அது பெருஞ்சுடர் உடையது. விலைமதிப்பற்றது. அதை வீசிவிட்டுக் காசு பெறாத பளிங்குக் கல்லை யாராவது பெறுவார்களா? அப்படிப் பெறுவது தான் நல்லோர் உறவை வெறுத்து அல்லோர் உறவைக் கொள்வது அற்பர் உறவு போன்ற தீவினைகளால் மேலும் மேலும் பிறவி வரும். பிறவிக் கடலைக் கடப்பதற்கு வழி என்ன? இறைவன் திருவடி களே நமக்குப் புகலிடம். அந்தத் திருவடிகள் தெப்பமாகி நம் பிறவிக் கடலைக் கடத்தும்.

இக்கருத்து மணிகள் பதித்த ஆரமாக இருப்பது அபயப் படலத்தின் காப்புச் செய்யுள்.

கவுத்துவ மணியை வீசிப்
பளிங்கினைக் கவர்வார் போலத்
தவத்துறை மேவும் சான்றோர்
சார்பினைத் தவிர்ந்து போகி
அவத்தின ரோடுநட் பாடி
அற்பனேன் சொற்பன் ஆனேன்
பவத்துறை கடக்கும் வண்ணம்
பதப்புணை பயக்கும் தேவே!

அகமதாபாத் ஆலையதிபர்கள் உரிய ஊதியம் தர மறுத்தனர்.

அடிகள் தலைமை தாங்கிப் போராடித் தொழிலாளர்களைத் துயரக் கடலினின்றும் கரையேற்றினர் என்ற செய்தி கூறும் பகுதிக்கு இறைவன் பிறவிக் கடலைக் கடத்துகின்றான் என்ற பொருளமைந்த இக்காப்பு பொருத்தமானதுதானே!

---

கவர்வார் - வலியப் பெறுபவர். மேவும் - விரும்புகின்ற. சார்பு - உறவு. போகி - போய். அவத்தினர் - வீணர். பவத்துறை - பிறவியாகிய கடல்துறை. பதப்புணை - திருவடியாகிய தெப்பம். பயக்கும் - தருகின்ற.

# 53. ஞாயமோ? நவிலுவாயே!

இறைவன் எல்லாம் செய்ய வல்லவன். எது செய்தாலும் அவனைத் தடுப்பார் இல்லை. அவன் செய்வதெல்லாம் அருட்செயலாகவே இருக்கும். ஆதலால் அவன் செயலை அறம் அல்ல என்று அவனைத் தடுப்பார் யாரும் இலர்,

செய்வினைகளைத் தடுத்து யாரையும் ஆட்கொள்ளும் கருணையுடையவன் அவன்.

''ஐயா நான் கொடியவன். என் வினைகள் அனைத்தையும் தடுக்காமலிருக்கலாமா? என் நெஞ்சில் தயை முதலிய குணங்கள் இல்லாமையால் தானே நான் வினைச் சுழலில் சிக்குகின்றேன். அந்தப் பண்புகளை என் நெஞ்சில் நடாது இருக்கலாம்?'' என்று அவனையே சரணடைந்து வேண்டிக் கொண்டால், அவன் நம்மை ஆட்கொள்வது உறுதி.

இத்தகைய சீரிய கருத்துக்குக் கருவூலமாக இருப்பது கேடாப் படலத்தின் காப்பு.

அடாதெனத் தடுப்பார் உண்டோ?
அறம் இது அன்று என்பார் உண்டோ?
விடாதுகை பிடிப்பார் உண்டோ?
வெய்யனேன் வினைகள் முற்றும்
தடாதிருந் தனையே நெஞ்சில்
தயை அருள் அகிம்சை வாய்மை
நடாதிருந் தனையே! ஐயா!
ஞாயமோ நவிலு வாயே!

கூர்ச்சரநாட்டில் கேடா பகுதியில் மழையின்மையால் வற்கடம் நேர்ந்தது. அரசு உழவர்களுக்கு உதவ முன்வர வில்லை. மாறாகக் கொடுமைப் படுத்தியது. உழவர் அடிகளிடம் நீரே சரண் என்று முறையிட்டனர்.

அண்ணல் அறப்போர் தொடங்கியமையால், அரசு சில சலுகைகள் தர முன்வந்தது என்ற செய்தி கூறும் பகுதிக்கு, இறைவனைச் சரண் அடைந்தால்தான் ஆட்கொள்ளப் படுவோம் என்ற கருத்துடைய இப்பாடல் பொருத்தமான காப்புத்தானே!

---

அடாது - தகாது. விடாது - செயல் செய்யவிடாமல். வெய்யனேன் - என்னுடைய. வினைகள் - இருவினைகள். தடாது - தடுக்காமல். நடாது - நடவு செய்யாமல்.

# 54. அருளல்லால் புகல்இல்லேன்

இறைவனை அடைந்து கைங்கரிய இன்பம் பெறுவதே மனிதப் பிறவியின் குறிக்கோள். அதற்காக முயலுதல் நம் கடமை. அக்குறிக்கோளை அடைய வழி யாது?

அறவழி நடத்தல், ஆன்றவரைச் சந்தித்தல், பிறர் பிழை காணாமை, பிழை செய்யாமை, புறவுரை பேசாமை, புலன் அடக்கம் முதலியனவே இறைவனை அடையும் உபாயங்கள். நாம் இவற்றைக் கைக் கொள்வதில்லை.

அருணன் சூரியனின் தேர்ப்பாகன். இருகால்களும் இல்லாத முடவன் என்பர். அறவழியில் நடப்பதற்கு நாம் அருணன் (முடவன்) ஆகின்றோம்.

துரியோதனன் தந்தை திருதராட்டினன். அவன் குருடன். ஆன்றோரைச் சந்திக்கும்போது, அவர்களைப் பார்க்காமல் திருதராட்டிரன் (குருடன்) ஆகிவிடுகின்றோம்.

வான் இறைவன் இந்திரன். அவனுக்கு ஆயிரம் கண்கள். பிறர் பிழைகள் காண்பதற்கு இந்திரன் (ஆயிரம் கண்ணுடையவன்) ஆகின்றோம்.

கார்த்த வீரியனுக்கு ஆயிரம் கைகள் என்பர். நன்மை செய்ய முடவன் ஆகின்ற நாம் தீமை செய்தற்குக் கார்த்த வீரியன் ஆகிவிடுகின்றோம்.

ஆயிரம் நாவுடையவன் ஆதிசேடன். புறம் பேசுவதற்கு ஆதிசேடன் ஆய்விடுகின்றோம். காற்று வேகமாகச் செல்லக் கூடியது. அதனால் வாயுவேகம் என்று கூறும் வழக்கு உண்டு.

புலனை அடக்க முயலாமல் புலன்களின் வழியிலே காற்றைப்போல் கடுகிச் செல்கின்றோம்.

நாம் இறைவனைச் சேர்வதற்கு வழி உண்டா? உண்டு என்கின்றனர் அருளாளர்கள்.

"ஐயா! உன் அருளல்லால் எனக்கு வேறு புகல் இல்லை" என்று அவனைச் சரணடைவதே அந்த வழி.

இவ்வகைச் சிந்தனை மாளிகை எழுவதற்கு அடிப்படையாக அமைவது தவறு ஒப்பிய படலத்தின் காப்பு.

"அறவழியில் நடப்பதற்கு அருணன் ஆவேன்
ஆன்றவர்நேர் படின்துரியன் தந்தை ஆவேன்
பிறர்பிழைகள் கண்டிடவான் இறைவன் ஆவேன்
பிழைகள் பல செயக்கார்த்த வீர்யன் ஆவேன்
புறவுரைகள் பேசுதற்குச் சேடன் ஆவேன்
புலன்வழி விரைவதற்குப் பவனன் ஆவேன்
இறைவ!உனை அடைந்திடஓர் உபாயம் காணேன்
இனிஉன்தன் அருளல்லால் புகல்இல் லேனே!"

அடிகள் தொடங்கிய அறப்போர் வெற்றிச் சிகரத்தை எட்டிக் கொண்டிருந்தது. அப்போது தொண்டர்கள் சிலர் வன்முறையில் ஈடுபட்டுவிட்டனர் என்ற செய்தி வந்தது.

"சமயம் அறியாது அகிம்சையின் தரம் அறியாதவர்களைத் தூண்டிவிட்டு இமயம் நிகர்த்த பெருந்தவறு செய்துவிட்டேனே" என்று வருந்தி அதற்குக் கழுவாயாக மூன்று நாள் உண்ணா நோன்பு மேற்கொண்ட செய்தி கூறும் பகுதியாகிய பொன் மலருக்கு தவறுகள் செய்த உயிர் தவறு உணர்ந்து ஆண்டவனிடம் சரணடைய வேண்டும் என்று கூறும் இப்பாடல் நாற்றமாக விளங்குகின்றதன்றோ?

---

அருணன் - சூரியன் தேர்ப்பாகன்; முடவன். துரியன் தந்தை - திருதராட்டினன்; குருடன். வான் இறைவன் - இந்திரன். (ஆயிரம் கண்ணுடையவன்) சேடன் - ஆதிசேடன். (ஆயிரம் நாவு உடையவன்) கார்த்தவீரியன் - ஓர் அரசன். (ஆயிரம் கைகள் உடையவன்) பவனன் - காற்று; வேகமாகச் செல்வது. உபாயம் - வழி.

# 55. நட்டம் எனக்கு இல்லை

"உறவேல் நமக்கிங்கு ஒழிக்க ஒழியாது" என்பது ஆண்டாள் திருவாக்கு. இறைவனுக்கும் நமக்கும் உள்ள உறவு வலுவானது; அனாதியானது. அவனே ஒழிக்க நினைத்தாலும் ஒழிக்க இயலாதது. இந்த உறவு ஒன்பது வகைப்படும் என்பர். அதில் முக்கியமானது ஆண்டான்—அடிமை என்ற உறவு. உடையவன்—உடைமை என்பது அடுத்தபடியான உறவு எனலாம்.

இந்த உறவை உணர்ந்து கொண்டோமானால், நமக்கு வரும் இன்பதுன்பங்களுக்காக நாம் மகிழவோ கவலவோ செய்யமாட்டோம். அடிமைக்குக் கேடு வந்தால், நம் பணி தடைப்படுமே என்று ஆண்டைதான் வருந்துவான். அடிமைக்குக் கவலை ஏது?

உடையவன்—உடைமை என்ற உறவின்படி பார்த்தாலும் உடைமைக்கு வரும் கேடு உடையவனுக்கு அன்றி உடைமைக்கு ஏது? ஒரு பாத்திரம் உடைந்து போனால், பாத்திரத்துக்கு உரியவனே வருந்துவான். பாத்திரம் வருந்துமா?

ஆதலால், "இறைவா! எனக்கு இடர்வருமாயின் அதற்காகக் கவலைப்படவேண்டியது நீதான். எனக்கு ஏது கவலை?" என்று பொறுப்பை அவனிடம் ஒப்புக் கொடுப்பதற்கு இந்த உறவு பற்றிய அறிவு பயன்படுகின்றது.

இத்தகு ஆன்மிக உணர்வுக்கு இடமாக உள்ளது பாஞ்சைப் படலத்தின் காப்புச் செய்யுள்.

உடைமைக்கோர் கேடு நேரின்,
உரியவர்க் கேதி ழப்பாம்.
அடிமைக்கோர் கேடு நேரின்,
ஆண்டைநீ தாழ்க்க லாமோ?
மடமைக்கண் ஆழ்ந்த நெஞ்சம்
வள்ளல்நின் உடைமை அன்றோ?
இடர்மிக்க தேனும் நட்டம்
எனக்கில்லை; உனக்கே! ஐயா!

பஞ்சாபில் படுகொலை நடந்துவிட்டது. நாடே பொங்கி எழுந்தது. வன்முறை தோன்றி இரத்தம் சிந்த நேருமே என்று அடிகள் அஞ்சினர். வன்முறை தோன்று மாயின், படுகொலைக்கு ஞாயம் கற்பிக்க அன்னியர்க்கு அது பயன்படும் என்பது அண்ணல் கருத்து.

வன்முறைக்கு வன்முறை மாற்று அல்ல என்று அகிம்சை நெறியை உபதேசிக்கப் பாஞ்சைக்கு விரைந்தார்.

இறைவனிடம் நம்மை ஒப்புவித்துவிட்ட பின்பு, அவன் விதித்தபடி நடப்பதுவே நம் கடமை. வன்முறை என்பது ஆண்டவனுக்கு உகப்பானது அல்ல. அகிம்சையே இறைவன் காட்டிய வழி என்று மக்களை அமைதிப்படுத்திய செய்தி கூறும் பகுதிக்கு இக்காப்பு மகுடமாக உள்ளது.

---

உரியவன் - உடையவன். ஆண்டை - தலைவன். தாழ்க்கலாமோ - தாமதம் செய்யலாமோ? மடமைக் கண் - மடமையில். இடர் - துன்பம். நட்டம் - இழப்பு.

# 56. சுகவாழ்க்கை ஆங்கொல்

எது உண்மை இன்பம்? இந்த வினாவுக்கு விடை காண்பதே தத்துவ ஆராய்ச்சியின் பயன்! ஒவ்வொருவருக்கும் இன்பம் வெவ்வேறு வகைப்படும். விடாய்த்தவனுக்கு நீரே இன்பம். பசித்தவனுக்குச் சோறே இன்பம். மிடியனுக்குச் செல்வமே இன்பம். செல்வனுக்கு அமைதியே இன்பம். பொதுவாகப் பிறவிச் சுழலில் அகப்பட்டார் அனைவருக்கும் இன்பமாகக் கருதப்படுவது மனைவி, மக்கள், மனை, செல்வம் முதலிய இம்மை வாழ்வே எனலாம். ஆனால் அந்த இன்பம் பயனற்றது; நிலையற்றது; மாறிக் கொண்டே இருப்பது என்பதை நாடோறும் கண் கூடாகக் காண்கிறோம்.

இம்மையில் அனைத்தின்பமும் பெறவேண்டும் என்ற ஆதுரமே, சம்சாரத்தில் சிக்கச் செய்கின்றது. அறிஞர் சம்சாரத்தையே குறிக்கோளாகக் கொள்வதில்லை. ஆனால் குடும்பவாழ்வே இறைவனை வழிபட உபாயமாக அமையுமாயின், சுகவாழ்வு ஆகிவிடலாம்.

இறைவனை அடைவதே வாழ்க்கையின் குறிக்கோளாக இருத்தல்வேண்டும். அக்குறிக்கோளுக்கு உதவாத அக வாழ்க்கை அல்லல் வாழ்க்கையேயாகும்.

இத்தகைய சிந்தனைப் பயிர் அரும்ப வித்தாக விளங்குவது ஒத்துழையாமைப் படலத்தின் காப்புச் செய்யுள்.

''இகவாழ்க்கையின் இன்பம் இலைப்பிறிதென்று
அகவாழ்க்கை அவாவிய நாயடியேன்
தகவாழ்க்கையில் நின்னருள் சார்ந்திலனேல்
சுகவாழ்க்கை அது ஆங்கொல் சுடர்த்தடலே''

பாஞ்சைப் படுகொலைக்குப் பின்பு அண்ணல் ஒத்துழை யாமைப் போர் தொடங்கினார்.

* அன்னியர் தரும் பட்டம் பதவிகளைத் துறத்தல்,
* அன்னியர் நிறுவிய பள்ளிகளுக்கு மாணவரை அனுப் பாமை.
* எத்தகைய பிரச்சினையாயினும் அன்னியர் நிறுவிய நீதி மன்றங்களை அணுகாமை.
* ஆயுதம் ஏந்தி அன்னியர்க்குப் படைத்துணை ஆகாமை.
* அன்னியப் பொருள்களை வாங்காமை

ஆகியன ஒத்துழையாமையின் சில கூறுகள்.

அன்னியர்க்கு ஒத்துழைத்தால் இம்மைக்கு வேண்டிய எத்தனையோ வசதிகளைப் பெறஇயலும். ஒத்துழைக்கா விடின், எத்தனையோ இழப்புகள் நேரிடும். இகவாழ்க்கை இடர் வாழ்க்கையாகிவிடும்.

அன்னியர்க்கு ஒத்துழைத்து வாழும் அகவாழ்க்கை அருள் வாழ்க்கை ஆகாது. அது சுகவாழ்க்கையல்ல என்பதை உணர்த்தும் பகுதிக்குப் பொலிவு சேர்ப்பது இந்தக் காப்பு.

---

இகம் - இம்மை. வாழ்க்கையின் - வாழ்வைக் காட்டிலும். அகவாழ்க்கை - சம்சாரவாழ்வு. அவாவிய - விரும்பிய. தக - தகுதியுண்டாகும்படி. ஆங்கொல் - ஆகுமோ?

# 57. இசை பாடிப் பரவுதற்கே

இறைவன் பொறிகளை நமக்கு அளித்தது, உலக இன்பங்களை மட்டும் துய்ப்பதற்காக அல்ல. கண்ணை நாம் பெற்றது, கண்டதைக் கண்டு கருத்தைக் களங்கப்படுத்திக் கொள்ள அன்று, இறைவனின் திவ்ய மங்களத் திருமேனியைக் கண்டு மனநிறைவு பெறுவதற்கே.

மனம் படைத்தது இறைவனின் பொருள்சேர் புகழை விரும்பி அவனை இறைஞ்சுவதற்கே.

''மாயவன் தன்னை வணங்க வைத்த கரணம் இவை; உமக்கு அன்று'' என்பர் அமுதனார்.

பொறிகளில் சிறந் கண்ணை மட்டும் கூறியது, மற்றைய பொறிகளையும் கூறியதற்கு ஒக்கும். இதை உபலட்சணம் என்பர். இறைவன் புகழ் கேளாத செவி பேசாத வாய் முதலியனவும் பயனில்லை என்று கொள்ளுதல் வேண்டும்.

பண் ஒலியைத் தெய்விகப் பண் என்கின்றோம். இறைவனே அதைப் படைத்தான்! ஏன் படைத்தான்? தன்னைப் பாடிப் பரவுவதற்காகவே படைத்தான்!

உயிர்கள் தன்னுடன் தொடர்பு கொண்டு உய்தி பெறட்டும் என்று கருதியே இறைவன் புவனத்தையும் படைத்தான்.

இத்தகைய எண்ணப் பயிரை வளர்க்கும் வான் மழையாகப் போர் நிறுத்தப் படலத்தின் காப்பு உள்ளது.

கண்ணைப் படைத்தது நின்திரு மேனியைக்
 காண்பதற்கே
எண்ணைப் படைத்தது நின்புகழ் எண்ணி
 இறைஞ்சுதற்கே.

பண்ணைப் படைத்தது நின்இசை பாடிப்
பரவுதற்கே.
மண்ணைப் படைத்து நிலைநிறுத் தும்தெய்வ
வான் பொருளே!

அண்ணல், சட்டமறுப்பு இயக்கம் தொடரக் காலம் கருதியிருந்தார், அப்போது சௌரி சௌராவில் வன்முறை நிகழ்ந்து விட்டதாகச் செய்தி வந்தது. அறவழியில் தீமையை எதிர்ப்பதற்குப் பயன்படவேண்டிய நம் ஆற்றல், வன்முறைக்குப் பயன்பட நேர்ந்ததை எண்ணி "நிறுத்தினம் அறப்போர்" என்று ஆணையிட்டார் என்ற செய்தி கூறும் பகுதிக்கு இறைவனுடன் உறவு கொள்ளப் பயன்பட வேண்டிய கருவி, கரணங்கள் உலகியலுக்கு மட்டும் பயன்பட லாகாது என்று விதிக்கும் இப்பாடல் காப்பாக அமையத் தகுதியானதுதானே!

# 58. அலர்க்கணே வருபவள் முனிவளோ?

நின்னால் அல்லால் ஒன்றும் குறை வேண்டேன் என்று இறைவனை வேண்டுவர் அருளாளர். எக்குறையாயினும் வேறு உபாயங்களால் தீர்வதை விரும்பமாட்டார்கள். இறைவனே தீர்க்கவல்லவன்; அவனே தீர்க்க வேண்டும் என்பது அவர்களின் உறுதிப்பாடு.

''இடரின்கண் வீழ்கின்ற என்னை இரக்கம் மேன்மேல் பெருக வந்து கைதூக்கி விடாமலிருக்கக் காரணம் என்ன? அவ்வாறு கைதூக்கி விட்டால். உனக்கு இனியவராகிய முனிவர்கள் உன்னைத் தடுப்பார்களோ?

''உன் உறவினராகிய அன்பர்கள் உன் செயலை எதிர்ப்பார்களோ? உன் அடியார்கள் உன் உறவை முறித்துக் கொள்வார்களோ? உன்னைச் சார்ந்தவர்கள் அனைவரும் உன்னைப் போலவே இரக்கமே வடிவானவர்கள்தாமே! பிறர்க்கென வாழ்பவர்கள் அன்றோ? அப்படியிருக்கையில், செய்யும் அருட் செயலை வெறுக்கமாட்டார்களே?

''உன்னை அடுத்தவரின் குற்றம் கண்டு ஒருகால் நீ வெறுத்துவிடலாம் என்று கருதி, அவர்களை ஆட்கொள்ளும் படி பரிந்துரை செய்வதற்காக அன்றோ, அகலகில்லேன் இறையும் என்று உன் மார்பில் பிரியாமல் திருமகள் வீற்றுள்ளாள்? அப்படிப் பட்டவள் நீ என்னைக் கைதூக்க முனையும் போது,'' இது தகாது; மரபும் அன்று; மரபினைக் கெடாது தவிர் என்று உன்னைச் சினப்பாளோ?

"இடரின்கண் வீழ்வாரைக் கைதூக்கி விடுவது உனக்குப் புதிய அனுபவம் அல்லவே! முற்காலத்தில் கஜேந்திரன் ஆதிமூலமே என்றான். அரைகுலையத் தலைகுலைய ஒருகணத்தில் ஓடி வந்தாய் அன்றோ? இப்போது என் குரலுக்குச் செவி சாய்க்கத் தடை ஏது?''

என்று இறைவனிடம் மன்றாடுவதாகிய சீரிய கருத்துக்கு வடிகாலாக இருப்பது இறைபுகு படலத்தின் காப்பு.

தடுப்பரோ முனிவர்கள்? எதிர்ப்பரோ உறவினர்?
தகர்ப்பரோ உறவினை அடியார்கள்?
அடுத்திடா திருமர பிணைக்கெடா தொழிகென
அலர்க்கணே வருபவள் முனிவாளோ?
இடர்க்கணே விழும்எனை இரக்கம்மே லெழஎழ
எடுத்திடா மருமம்என் அறியேனே
கடத்துவா ரணம் முதல் எனப் பரா விடஒரு
கணத்திலே எதிர்வரு பெருமாளே!

அண்ணலைச் சிறைப்படுத்தாவிடின், நம் ஆட்சி உலையும் என அஞ்சினர் அன்னியர். சிறைப்படுத்தி ஆறு ஆண்டு தண்டனை அளித்தனர். சிறையில் அண்ணலுக்குக் குடல் அழற்சிநோய் வந்தது. உத்தமர் பொன்னுடற்கு ஊறு ஒன்று எய்திடின், இத்தரை வெகுண்டு எழும். என் செய்வோம் என்று சித்தம் அஞ்சிய அன்னியர் அண்ணலைச் சிறை வீடு செய்தனர் என்ற செய்தி கூறும் பகுதிக்கு, இறைவன் இடரில் மூழ்கிய யானைக்கு இரங்கித் துயர்வீடு செய்தமையை நினைவூட்டும் இப்பாடல் ஒளிசேர்க்கின்றதன்றோ?

---

அடுத்திடாது—தகாது. அலர்க்கணே வருபவள்—திருமகள். முனிவாள்—சினப்பாள்.
இடர்க்கண்—துன்பத்தில். எடுத்திடா—காப்பாற்றாத. மருமம்—இரகசியம். என்—ஏது?.
கடத்துவாரணம்—மதயானை. முதல்—ஆதிமூலம். பராவிட—துதிசெய்ய.

# 59. போ! தா! புனல் உறை போதாவே!

அழகர்பால் காதல் கொண்டாள் ஒரு தலைவி. பிரிவுத்துயர் தாங்காமல் ஒரு நாரையை அழகரிடம் தூது விடுகின்றாள்.

"ஓ நாரையே! மலர்தானோ என்று வியப்புத் தரும் விழிகளையுடைய திருமகளை மார்பிலே கொண்ட ஒப்பற்ற தலைவனிடம் தூதுசெல்! கிளி, வண்டு, மேகம், அன்னம் முதலியன தூதாகப்போக வல்லன அல்ல. போனாலும், அவை போதாத அறிவுடையன ஆதலால் என் குறையை உள்ளபடி எடுத்துச் சொல்லமாட்டா.

"இப்போது உன்னையல்லால் என்னிடம் அன்பு கூர்வார் யார்?"

"அழகர்தம் மார்பில் அணிந்துள்ள மாலையை நீ போய் வாங்கி வந்து தா! நீரில் வாழ்கின்ற நாரையே!" என்கிறாள் தலைவி.

இக்கருத்துடைய பாடல் உண்ணா நோன்புப் படலத்தின் காப்பு.

"போதா எனும்விழி மாமான் உறைஒரு
பூமா னிடம்ஒரு தூதாகப்
போதா கிளியொடு தேனார் அளிமுகில்
பூவாழ் அனம் இவை போனாலும்
போதா அறிவின் நீதான் அலதிது
போதா தரம்எவர் கூர்வாரே!
போ! தா! அழகர்தம் மாமார் பணிதொடை
போ! தா! புனலுறை போதாவே!"

இந்து முகமதியரிடை ஒற்றுமை காக்க எந்த வழியும் காணாமையால் ஏக்கமுற்றார் அடிகள். இருபத்தொரு நாள் உண்ணாவிரதம் மேற்கொண்டார்.

"மெலிந்த திருமேனி விரதம் இது தாங்காமல்
நலிந்து அவசம் ஆகிநெடு நாஉலர்ந்து போக
குலைந்துணர்வு குன்றும் நிலை அடைந்தார்"

அப்போதும் அறிவொடுங்கிப் போகாமல் ஆண்டவனைச் சிந்தித்தார் என்ற செய்தி கூறும் பகுதிக்கு, அழகரைக் காதலித்த தலைவி பிரிவுத்துயரால் உணர்வொடுங்கி உடல் மெலிந்து போகையிலும் அழகனையே சிந்தித்துத் தூது விட்டமை கூறும் காப்பு மிகமிகத் தகுதி வாய்ந்ததுதானே.

இறைவனுக்கும் உயிர்க்கும் உள்ள உறவுகளில் கணவன்—மனைவி உறவு ஒன்று. இந்த உறவு கருதியே அருளாளர்கள் நாயகி பாவம் மேற்கொண்டு அகப்பொருட் பாடல்களைப் பாடியுள்ளனர்.

அவர்கள் காட்டிய வழியில் அமைந்த இனிய சந்தப் பாடல் இது.

அடிதோறும் போதா என்பது எதுகையில் வந்தமையால் இது மடக்கு அணி எனப்படும்.

# 60. பல்மொழி பரவிய பரம பண்டிதா!

இறைவன் எல்லோருக்கும் பொதுவானவன். எம்மொழியால் வழிபட்டாலும் ஏற்கும் இயல்புடையவன்.

''என் மொழியோ புன்மொழி. இறைவன் ஏற்பானோ? மாட்டானோ'' என்று அஞ்சிப் புறம் விலகுவது இறைவன் மனத்துக்கு உவப்பான செயல் அல்ல. ''இவன் அஞ்சி விலகும் அளவுக்கு நாம் அரியனாக இருந்துவிட்டோமோ'' என்று அவன் திருவுள்ளம் வருந்தும். அவன் எளிமையே உருவானவன்,

எது பணி? எது என் பணி? என்று ஆராயாமல், தன்னால் இயன்ற பணி செய்வதுவே இறைவனுக்கு ஆட்படுகின்ற இயல்பு என்பர் ஆழ்வார்.

அவனை வழிபடுவதற்காகவே அனைத்து மொழிகளும் தோன்றியுள்ளன. எந்த மொழியால் வேண்டுமாயினும் அவனை வழிபடலாம்.

இத்தகைய கருத்துக்களைப் பொதிந்து கொண்டுள்ள தத்துவச் சுரங்கமாகப் பருதோலிப் படலத்தின் காப்புச் செய்யுள் உள்ளது.

தென்மொழி வடமொழி தேன்எனத்தகும்
பன்மொழி பரவிய பரம பண்டிதா!
புன்மொழி யாயினும் புலையன் ஆயினேன்
என்மொழி ஏற்றதுன் எளிமை காட்டுமே!

பருதோலியில் அண்ணல் ஆணையால் சர்தார் வல்லபபாய் பட்டேல் அறப்போர் தொடங்கி வெற்றி பெற்றார். அறப் போரில் இன்னார்தாம் ஈடுபடலாம். இன்ன தகுதி வேண்டும் என்ற நிபந்தனை ஏதும் இல்லாமல் தத்தமக்கு இயன்ற அளவு பலதரப்பினரும் ஈடுபட்ட செய்தியைக் கூறும் பகுதிக்கு, இறைவனை வழிபட இத்தகு தகுதிவேண்டும் என்பதில்லை, எல்லோருமே எம்மொழியிலும் வழிபடலாம் என்று கூறும் இப்பாடல் பொருத்தமாக உள்ளது.

# 61. சிறப்புக்கு ஒரு தலைமை படைப்பர்

அடிகளுக்கு வழிபடு தெய்வம் இராமன். காகுத்தனின் கல்யாண குணங்களில் ஈடுபட்டார் அடிகள். சாதி முதலிய தகுதி பாராது, அனைவருடனும் நட்புப்பூண்ட இராமனின் பண்பு, அடிகளின் இதயம் கவர்ந்தது.

காட்டில் வாழும் குரங்கரசன் சுக்கிரீவன். அவனுக்காக வாலியைக் கொன்று முடிசூட்டினான்.

நாகரிகம் அறியாத இழிகுலத்தவன் குகன். நீ என் தம்பி. என் தம்பி உன் தம்பி. சீதை உன் கொழுந்தி என்று உறவாடினான்.

நல்லன துறந்து அல்லன செய்பவர் அரக்கர். அக் குலத்தில் பிறந்தவன் வீடணன். அவன் சரண் அடைந்த போது, பகைவனுக்குத் தம்பி என்றும் பாராமல், நின்னொடும் எழுவரானோம் என்று தன் தம்பியாக ஏற்றுக் கொண்டான்.

தந்தைக்கு இறுதிக் கிரியை செய்யாத இராமன், பறவை இனத்தினனாகிய சடாயுவுக்குக் கருமம் செய்தான்.

கருணைக்கே ஒரு கடலாக உள்ளவன் இராமன்.

சுக்கிரீவன், குகன், வீடணன், சடாயு ஆகியோர் கூட இராமகாரியம் செய்து அருளைப் பெற்றனர்,

எத்தகு நற்செயலும் செய்யாத அடியேனிடத்தும் தன் அருளை வளர்த்துள்ளான் இராமன்.

அத்தகைய எண் குணத்தானின், அழகிய திருவடிகளை முடிக்கணியாகச் சூடிக்கொண்டவர்கள், சிறப்புக் கெல்லாம் தலைமை பூணும் சிறப்பைப் பெறுவார்கள்.

இக்கருத்துக்குக் கருவூலமாக விளங்குவது விடுதலை முழக்கப் படலத்தின் காப்பு,

குரக்குக்கொரு முடிபுனை வித்தவர்
குகற்குக்கெழு தகைமை விளைத்தவர்
அரக்கற்கொரு சரணம் அளித்தவர்
அடற்புட்கொரு கருமம் முடித்தவர்
இரக்கத்தொரு கடலை நிகர்த்தவர்
எனக்குத்தனி அருளை வளர்த்தவர்
திருப்பொற்கழல் முடியினில் வைத்தவர்
சிறப்புக்கொரு தலைமைபடைப்பரே

பருதோலி வெற்றியினால் பெருமிதம் கொண்ட தலைவர்கள், உடனே அறப்போர் தொடங்கி வெள்ளையரை வெளி யேற்றத் துடித்தனர்.

''அறப்போருக்கு அகிம்சையே உயிர்நாடி. மக்கள் உற்சாக மேலிட்டுச் சௌரி சௌராவில் நடந்து கொண்டது போலக் கொலை வெறியில் ஈடுபட்டுவிடலாம்.

''முதலில் மக்களுக்கு அகிம்சையைப் போதித்தல் வேண்டும். ஆதலால், வெள்ளையர்க்கு ஓர் ஆண்டு தவணை தருவோம். அந்தத் தவணைக்குள் விடுதலை தாரார் எனின், அறச்சமர் தொடங்குவோம். அது வரைக்கும் ஆக்கப்பணி களில் ஈடுபடுவோம்'' என்று அமைதிப்படுத்தினார் அடிகள்.

''வன்முறையால் அடுத்தகணமே விடுதலை வருமாயினும் நமக்கு அது வேண்டா. பல்லாண்டுகள் கழியுமாயினும் அகிம்சையால் வரும் விடுதலையே நமக்கு வேண்டுவது'' என்று கொள்ளையராகிய வெள்ளையர் பாலும் இரங்கி வாய்ப்புத் தந்த அண்ணலின் அருளுடைமை கூறும் பகுதிக்கு, இராமபிரானின் அருளுடைமை கூறும் இப்பாடல் ஏற்றதுதானே!

# 62. கலியாண வைகுந்தம்

முழுஏழ் உலகுக்கும் நாதன் அரங்கன். நீவிர் ஆட்பட்டாலன்றி, அகலேன் என்று அறிதுயில் அமர்ந்துள்ளான்.

அரங்கம் வளமில்லாத பாலைநிலத்தில் உள்ளதா? நெடுந் தொலைவில்தான் உள்ளதா? அருகிலேயே உள்ள அணிவ்ழா நகரம் அன்றோ அது?

அங்கே அழகு மங்கையர் ஆடரங்கிலே கலின்கலின் என்று சிலம்பொலிக்க மகிழ்வினால் நடனமாடுவர். அணி முரசங்கள் கடலின் ஒலி அடங்கும்படி முழங்கும்.

இத்தகு மனோரம்மியமான நகரில் சென்று அவனை அடையாமல் சிலர் உள்ளனரே! இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டாத அருட்சுவை துய்க்காதவர்கள் விலங்குகள் அல்லரோ?

அரங்கன்பால் அன்பு வைப்பவர்கள் மீண்டும் பிறவி எடுத்து உடல் வருந்த மாட்டார்கள். பிறவிப் பெருங்கடல் நீந்துவர். மங்களகரமான நலமந்தமில்லதோர் நாடு பெறுவார்கள்.

இக்கருத்துக்கு அடிப்படையாக உள்ளது உப்புப் படலத்தின் காப்பு.

அங்கனை யார்கலின் என்றரங் காட
அணிமுழவம்
அங்கனை யார்கலி ஆர்ப்பற விம்மும்
அரங்கனைவி
லங்கனை யார்கலி யால்அடைந் துய்கிலர்
அன்பு வைப்பார்
அங்க(ம்)நை யார்கலி யாணவை குந்தம்
அடைகுவரே.

அறப்போருக்கு அடிகள் ஆணையிடமாட்டாரா என்று துடித்துக் கொண்டிருந்தனர் மக்கள்.

அடிகள் அறப்போருக்கு முன்னோடியாக உப்புச் சத்தியாக்கிரகம் மேற்கொண்டார்.

ஒளிவொரு சிறிதும் இன்றி, எண்ணியதை அறிவியாமல் அறப்போர் தொடங்கினால், சமாளிக்க இயலாமல் அன்னியர் திண்டாட நேருமோ என்று அண்ணலின் அருள் உள்ளம் கருதியது. தாம் உப்புப்போர் தொடங்க இருப்பதைக் கடிதம் மூலம் அறிவித்தார்.

இத்தகைய அருட்கடலான அண்ணலின் அருளுரையை ஏற்காத அன்னியரின் இறுமாப்பை என்னென்பது! செவி சாய்க்காமற் போயினரே என்று இரக்கப்படும் பகுதிக்கு, அருட்கடல் அரங்கன் எளிதே வந்து அருகிருக்கவும் அவனை அடையாமல் சிலர் இருக்கின்றனரே என்று இரங்கும் இப் பாடல் பொருத்தமானதுதானே!

---

அங்கனையார் - பெண்கள். அரங்கு - ஆடரங்கில் அம்கனை ஆர்கலி - அழகிய ஒலி எழுப்பும் கடல். ஆர்ப்பு- ஓசை, அற - அடங்கும்படி, விம்மும் - மிக ஒலிக்கும். கலியால் - செருக்கால். அங்கம் - உடல். நையார் - வருந்தமாட்டார். கலியாணம் - மங்களகரம்.

# 63. காகம் குதறுமுன்னே

உடல் நிலையற்றது. எலும்பு, தசைகளால் ஆனது எப்போது விழும் என்று அறிய இயலாதது. உயிர் உள்ளவரை நாம் நம்மதென்று இருப்போம். நாய்நரிகள் பேய் கழுகு தாம் தம்மதென்று இருக்கும், உயிர்பிரிந்துவிட்டால் காகம் கூடிக் குதறும். கொடிய நாயும் கழுகும் பிள்ளுதலால் சிதறிக் குலையும்.

உடல் ஒரு கருவி. இறைவன் நமக்குக் கொடுத்தது. அது இருக்கும்போதே, அதனால் முழுப் பயனும் பெற முயலுதல் வேண்டும். வருந்தி உடம்பின் பயன் கொண்டுவிட்டோ மானால், கூற்றம் வருங்கால் வருந்த வேண்டியிராது.

நூலாசிரியரின் ஆசிரியப் பெருமான் பரிபூரணானந்த சுவாமிகள். அவர் பழனிப் பதியினர். மாம்பழக் கவிச்சிங்க நாவலரின் மாணாக்கர். அவர் பால் நூலாசிரியர் பாடம் கேட்டு வந்தார். அப்போது ஆசிரியர் நோய்வாய்ப்பட்டார். ஆசிரியரைக் காண நாடோறும் மாணவர் செல்வார். செல்லும் போது மாணவர்கையில் ஏதாவது நூல் இருத்தல் வேண்டும். சிறிது தெம்பிருந்தால்போதும், தம் நோயை மறந்து பாடம் சொல்லத் தொடங்கிவிடுவார்.

ஒரு நாள் மாணவர் கையில் நூல் ஏதும் இல்லை. "ஏன் நூல் கொணரவில்லை?" என்பது ஆசிரியரின் வினா? "தங்களுக்கு உடல் நலம் குன்றிய நிலையில் பாடம் சொல்ல லாகாது என்று கருதியே நூல் கொணர வில்லை" என்பது மாணவரின் விடை.

இந்த உடல் மண்ணாலானது. எந்த நேரமும் சிதைந்து விழலாம். இது இருக்கும்போதே இயன்றவரை பயன்படுத்தி

விட வேண்டும். இனி வரும்போது அவசியம் நூலைக் கொணர்க!.இயன்றபோது பாடம் சொல்கின்றேன்'' என்று ஆசிரியப்பெருமான் திருவாய் மலர்ந்தார்.

இது அவர் அமரராவதற்கு முதல்நாள் நிகழ்ச்சி. ஆசிரியப் பெருந்தகை அவர்களைப்போல் உடலை உள்ளவரை பயன் படுத்துவதே அறிவுடைமை.

மற்றறிவாம் நல் வினை. யாம் இளையம் என்று காலம் கடத்துவது தீது. உடல் இருக்கும்போதே இறையருள் பெறப் பாடுபடவேண்டும்.

சைவம் வைணவம் என நம் சமயம் இருபிரிவுபட்டுள்ளது. முறையே சிவனும் விஷ்ணுவும் அப்பிரிவுகளின் தெய்வங்கள். பெயர்தான் வேறு. இருவரும் ஒருவரே என்பது அருளாளர் அறிவுறுத்த உண்மை.

ஒருவன் அங்கத்து ஒருவன் என்றும் உளன் என்பர் ஆன்றோர். விஷ்ணுவின் அங்கத்தில் சிவனும் சிவன் அங்கத்தில் விஷ்ணுவும் உள்ளனர் என்பது கருத்து. அவ்வாறு ஈருருவும் ஓருருவாக உள்ள இறைவனை வணங்கவேண்டும். இரு கிளைகளாகப் பிரிந்தாலும் மரம் இரண்டு ஆவ தில்லையே! ஒன்று தானே!

அத்தகைய இறைவனை வணங்கி ''என்னைத் தீவினை களினின்று காப்பாற்று! கண் எதிர் வருவாயாக'' என்று கூறித் துதிக்க வேண்டும்.

இக்கருத்து மின்னிப் பளிச்சிடுவதற்கு வானமாக இருப்பது தரிசனைப் படலத்தின் காப்பு.

கும்பிட்டுக் காகம் குதறுமுன் நாயும்
கொடிய கழு
கும்பிட்டுக் காகம் குலையுமுன்னே வையைக்
கோடு மணக்

கும்பிட்டுக் காக அடைத்தவ னைப்பங்கில்
கொண்டவனைக்
கும்பிட்டுக் காகண் எதிர்வாஎன் றேதுதி
கூறுமினே.

உப்புப் போரில் அடிகள் சிறைப்பட்டார். சரோஜினி தேவியார் தலைமையில் உப்புப்போர் தொடர்ந்தது. தரிசனை யில் உப்பு அள்ளுவதற்குத் தொண்டர்கள் விரைந்தனர். காவலர்கள் தடியால் மண்டை பிளந்தனர். கண்பிதுங்க எற்றினர். கால் கை ஒடித்தனர். கணக்கிலா உயிர்கள் காலனுக்கு உணவானது. அந்நிலையிலும் ஒருவரும் பின்னி டாமல் முன்னேறிக்கொண்டே இருந்தனர் என்ற செய்தி கூறும் பகுதிக்கு, உடல் நிலையில்லாதது. அது இருக்கும்போது வருந்திப் பயன் கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தும் இக்காப்பு அழகுக்கு அழகு சேர்க்கின்றதன்றோ?

---

குஃபுஇட்டு - கூட்டமிட்டு. பிட்டு - பிள்ளுதலால். உக்கு - உதிர்ந்து. ஆகம் - உடல். கோடு - கரை.

# 64. ஏகும்வனத்தன் எனை ஆள்வான்

இராமனையே வழிபடு கடவுளாகக் கொண்டார் அடிகள். அந்த இராமன் தசரதகுமாரனாகிய இராமன் அல்லன்.

மூலமும் நடுவும் ஈறும் இல்லதோர் மும்மைத் தாய
காலமும் கணக்கும் நீத்த காரணனாய்
ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும்விட்டு வந்த முதற்
பொருளே அவன் என்று அண்ணலே கூறியுள்ளார்.

வேகமாகச் செல்லும் அன்னத்தை ஊர்தியாகக் கொண்டவன் பிரமன், முருகனுக்குத் தந்தை சிவபிரான், வானோர்கள் ஆகியோரின் கவனத்தில்—நினைப்பில்—இருப்பவன்.

துளசிமாலை அணிந்தவன். தன்னை உயிர்கள் அடைவதற்குத் தடையிருப்பின் அதனை நானே போக்கி அருளுவேன் என்று காட்டுவதற்காக மது என்னும் அரக்கனை அழித்துக் காட்டியவன். சிரமங்களைத் தீர்ப்பதற்கு உரிய மேகம் போன்ற திருமேனியுடையவன்.

எட்டாத இடத்தில்—பரமபதத்தில்—இருந்தால், உயிர்களுக்குப் பயன் இல்லை என்று இரங்கி, இறங்கி, இவ்வுலகிலேயே உள்ளதாகிய திருப்பாற் கடலில்—கூப்பிடுதூரத்தில்—பள்ளி கொண்டவன். விபுதர்களுக்குத் தலைவன், ஒப்பற்ற வலிய சங்கு அணிந்தவன். தந்தை சொல் காக்கும் பொருட்டு வனத்துக்கு ஏகியவன். அந்த இராமனே என்னை ஆட்கொள்வான்,

இக்கருத்தமைந்த பாடல் தூதுப் படலத்தின் காப்பு.

"வேகவனத்தன் வேலவனத்தன் விறல்வானோர்
மாகவனத்தன் மாலைவனத்தன் மதுசூதன்
மேகவனத்தன் மேவும்வனத்தன் விபுதேசன்
ஏகவனத்தன் ஏகும்வனத்தன் எனையாள்வான்"

அன்னியர் அழைப்பை ஏற்று அண்ணல் வட்டமேசை மாநாட்டிற்கு இலண்டன் சென்றார்.

நாட்டுமக்களின் விடுதலை வேட்கையை நயம்பட உரைத்தார். அன்னியர் மனம் இரங்கவில்லை. போக்குரை கூறினர். என்னை ஆளும் தெய்வத்தின் திருவுள்ளப்படியே யாகட்டும் என்று வெறுங்கையுடன் மீண்டார் என்ற செய்தி கூறும் பகுதிக்கு. இனி என்னால் ஆவதொன்றில்லை. அவனே தடைகளை விலக்கி என்னையாள்வான் என்ற கருத்தமைந்த பாடல் வளம்சேர்க்கிறது.

மாகவனத்தன் என்பது அந்தர் யாமித்வத்தையும்,
மாலைவனத்தன் மேகவனத்தன் என்பன
அர்ச்சையையும்
மேவும் வனத்தன் என்பது வியூகத்தையும்,
விபுதேசன் என்பது பரத்துவத்தையும்
ஏகும்வனத்தன் என்பது விபவத்தையும்

குறிக்கின்றன. ஆக இறைவனுக்குரிய ஐந்து நிலைகளும் இப் பாடலில் ஒருசேர வந்துள்ளமை ஒரு நயம்.

---

அ(ன்)னத்தன் - பிரமன். வேலவன் அத்தன் - சிவன். மா கவனத்தன் - பெரிய நினைவிலுள்ளவன். மாலை வனத்தன் - துளசிமாலையணிந்தவன். மேகவனத்தன் - மேகநிறத்தன். மேவும்வனத்தன் - திருப்பாற் கடல் துயின்றவன். ஏகவல்நத்தன் - ஒப்பற்ற வலிய சங்கை யுடையவன். ஏகும்வனத்தன் - காட்டிற்கு ஏகியவன்.

# 65. அரண் உண்டோ ஐயா!

“பொங்கரின் நுழைந்து வாவி
புகுந்து பங்கயம் துழாவிப்
பைங்கடி மயிலை முல்லை
மல்லிகைப் பந்தர் தாவிக்
கொங்கலர் மணம்கூட் டுண்டு
குளிர்ந்துமெல் லென்று தென்றல்
அங்கங்கே கலைகள் தேரும்
அறிவன் போல் இயங்குமன்றே”

என்று தென்றலை வருணிப்பார் பரஞ்சோதி முனிவர். தென்றல் உலகுக்கு இன்பம் தருவது. வாவிகளிலே புகுந்து புகுந்து அங்குள்ள தாமரை மலர்களின் மணத்தை வாரிக் கொண்டு வரும்போது, ஒரு சாக்கடை எதிர்ப்பட்டால், அதன் மணத்தை வெறுத்து அருவருப்பதில்லை. அதன் மணத்தையும் ஏற்று மேலே தவழ்ந்து செல்லும். சாக்கடை மணத்தால் தென்றலுக்குத் தாழ்வு வருவதில்லை. தாமரை மலர் மணத்துடன் சேர்ந்த சாக்கடை மணமும் பூக்கடை மணமாகி விடுவதுண்டு.

வேண்டுதல் வேண்டாமை யில்லாதவன் இறைவன். எள்கல் இராகம் இலாதான் என்பர் நம்மாழ்வார். அன்பு மிக்கவரின் நெஞ்சமே ஆலயமாகக் கொண்டவன் அவன். ஆனால், அன்பில்லாதவரை அவன் வெறுப்பதில்லை. அவர்கள் அகத்திலும் தங்கி, அவர்களை நியமித்து ஆட்கொள்ள முயலும் அந்தர்யாமி அவன். நல்குரவு - செல்வம். நரகு - சுவர்க்கம், பகை - நட்பு, விடம் - அமுதம், நலம் - தீங்கு முதலிய மறுதலைப்பட்டவை. அனைத்தும் அவன் வடிவமாகவே உள்ளன என்பர் நம்மாழ்வார்.

"இறைவா! அன்பர் நெஞ்சம் புகுந்திருக்கும் நீ புலையர் என்று எங்களை வெறுத்து நீத்தாய். ஆனால், எங்களுக்கு வேறு புகலிடம் உண்டோ?" என்று வணங்கி இருப்பதே நம் கடமையாகும்.

இத்தகைய கருப் பொருளுக்கு இருப்பிடமாக உள்ளது நோன்புப் படலத்தின் காப்பு.

பங்கய மணத்தை அள்ளிப்
　　படர்ந்திடும் பருவத் தென்கால்
அங்கண மணத்தைக் காணின்
　　அருவத்து அகல்வ துண்டோ?
பொங்கிய அன்பர் நெஞ்சம்
　　புகுந்தநீ புலையர் ஆனேம்
எங்களை வெறுத்து நீக்கின்
　　எமக்குஅரண் உண்டோ ஐயா!

அன்னியர் பிரித்தாளும் சூழ்ச்சியால் அரிசனங்களுக்குத் தனித் தொகுதி தருவது என்று முடிவு செய்தனர், இதை ஒப்புக் கொண்டால், மக்கள் நிரந்தரமாகவே பிளவுபட்டு விடுவர் என்று கருதிய அண்ணல், அதை எதிர்த்து உண்ணா நோன்பு மேற்கொண்டார்.

உயர்வு - தாழ்வு பேதம் கூடாது. எல்லோரும் சரிநிகர் சமானமே என்ற அண்ணலின் சீரிய சிந்தனைக்கு இறைவனின் சமநிலையை விளக்கும் காப்பு ஏற்றம் தருகின்றதன்றோ!

---

பங்கயம் - தாமரை. தென்கால் - தென்றல்.
அங்கணம் - சாக்கடை. அரண் - புகலிடம்.

# 66. கல்லா நெஞ்சம் கல்லா?

மனத்துக்கண் மாசிலன் ஆதலே அறம். அந்த அறம் கைக்கொண்ட நெஞ்சமே இறைவனுக்கு இருப்பிடம்.

''கற்றதனால் ஆய பயன் இறைவா! உன் திருந்பெயரைக் கற்பதே யாகும். அப்பெயர் கல்லாத நெஞ்சம் கல்லே தானோ?

''உன் திருவடி நிழலிலே பொருந்துவதே பிறவிப் பெரும் பயன். அவ்வாறு பொருந்தாத பிறவி அற்பமான புல்லே தானோ?

''இறைவா! என்மனம் இளகுவதும் உன் திருவடி சேர்வதும் என் செயலால் ஆவனஅல்ல. நீயே இரங்கி நான் புறம்பே சென்று விடாமல் மேகம் போல அன்பு மழையைச் சொரிய வேண்டும்.

என்று இறைவனிடம் மன்றாடுவதாக அமைந்த இப் பாடல் பொதுப்பணிப் படலத்தின் காப்பு.

கல்லா நெஞ்சம் கல்லா உன்தன் கழல்நீழல்
புல்லா சன்மம் புல்லா உன்னிற் புறமாகச்
செல்லா வண்ணம் செல்லா அன்பு சொரிவாய் மாசு
இல்லா நெஞ்சம் இல்லா வாழும் இறையோனே!

அண்ணலின் உண்ணா நோன்பால் நாட்டில் ஒற்றுமை நிலவியது. அந்த ஒற்றுமையை மேலும் வலுவடையச் செய்வது தம் கடன் என்று கருதிய அண்ணல், பொதுப் பணியில் ஈடுபட்டார்; ஈடுபடும்படி வற்புறுத்தினார்.

பொதுப்பணிக்கு மாசில்லாத மனம் வேண்டும். எல்லோரையும் இறை வடிவமாகக் காணுதல் வேண்டும் அன்றோ!

அத்தகைய பொதுப்பணியைப் பற்றிக் கூறும் பகுதிக்கு, மாசில்லாத மனம் இல்லமாக வாழும் இறைவன் இயல்பு கூறும் இப்பாடல், பொன்மலருக்குப் புதுமணம் சேர்க்கின்றது எனலாம்.

---

கல்லா நெஞ்சம் - இறைவன் பெயர்கல்லா நெஞ்சம். கழல்நீழல் - திருவடி நிழல். புல்லா - பொருந்தாத. உன்னின் - உன்னைத்தவிர. செல்லா(க) - மேகம்போல. இல்லா(க) - இருப்பிடமாக.

# 67. தாய் எனக்கு ஆனாய்!

நாய் பிராணிகளில் மிக இழிந்தது. தான் கக்கியதையே மீண்டும் உண்ணும் இயல்பு அதற்கு உண்டு. தன் இனத்தை வெறுப்பதும் அடிமை வாழ்வை உகப்பதும் ஆகியன இன்னும் சில தீய இயல்புகள் ஆகும்.

> ''எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு''

என்ற குறளின்படி நாயிடத்துள்ள தீய குணங்களையும் நல்ல குணங்களாக ஏற்றுக் கொள்வது அறிவு பெற்ற பயனாகும். புல்லிய எலும்புத் துண்டை இட்டவர்பால் வால்குழைத்து அடிமைப் புத்தி காட்டும் இயல்பிலும் ஓர் தத்துவம் கண்டு, அதற்கு நன்றியுடைமை என்று பேரிட்டான் மனிதன். நன்றியுடைமை மனித வாழ்வுக்கு இன்றியமையாதது என்பர் வள்ளுவர். செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லை என்பது சங்கச் செய்யுளின் தொடர்.

இழிந்த நாயிடங்கூட நன்றி என்று பேரிடுவதற்குரிய ஏதோ ஒரு பண்பு உள்ளது. இறைவன் எவ்வளவோ உபகாரம் செய்துள்ளான்! செய்து வருகின்றான்! அவன்பால் நன்றி காட்ட மறந்து நாயினும் கேடாகி விடலாமா!

பேய் என்பது ஒரு கற்பனைப் பொய். அது நன்மையே செய்யாது தீமையே செய்யும் கொடியது என்பது மூடநம்பிக்கை. அஞ்சினாரைப் பிடித்துக் கொண்டு துன்புறுத்துவது பேயின் இயல்பு. அந்தப் பேயிடத்திலும் நல்லது என்று பேரிடலாவதொரு பண்பினைத் தேடிப் பிடிப்பது அறிவுடைமையாகும். பேயானது பிடித்த பிடியை

விடாது. அதனால்தான் பேய்ப்பிடி என்ற சொற்றொடர் பிறந்தது.

பேயிடமாவது நல்லது என்று பேரிடலாவதற்குரிய பிடித்தது விடாமை என்ற பண்பு உண்டு. 'அற்றது பற்றெனில் உற்றது வீடு. உயிர் செற்றது மற்றுறில் அற்றிறை பற்றே' என்றார் ஆன்றோர், இறைவனை விடாமல் பற்றும் உறுதிப்பாடு நமக்கு இல்லையே! பேயினும் தாழ்ச்சியுற்று விட்டோமே!

நெருப்பு கொடியது. சேர்ந்தவை அனைத்தையும் சுட்டெரித்துவிடும். அதனிடங்கூட நன்மை என்று பேரிடலா வதொரு குணம் உண்டு. அதுதான் ஒளி. இறைவன் நம்மை யும் ஞான (ஒளி) வடிவமாகவே படைத்துள்ளான். அந்த ஞானச் சுடரைப் பயன்படுத்தாமல், ஈனச் சிறுமையில் உழல் கின்றோமே!

நமக்குக் கருணை செய்வதிலே இறைவன் அன்னை போன்றவன். அவனைச் சேர்வதற்கு நன்றி, உறுதிப்பாடு, அறிவு ஆகிய இவை வேண்டும். இவற்றில் ஒன்றுகூட நம்மிடம் இல்லாவிட்டால் நாம் உய்வது எவ்வண்ணம்?

இவ்வாறு இறைவனிடம் பணிவுடைமையை வெளியிடுவ தாக அமைந்த இப்பாடல் இராசகோட்டைப் படலத்தின் காப்பு.

நாய் எனக்கு இணையாம் என்னில்
நன்றியாம் பண்பிங் கில்லை
பேய் எனக்கு ஒக்கும் என்னில்
பிடித்தது விடாமை இல்லை
தீ எனக்கு உவமை என்னில்
தேசுசற் றகத்தில் இல்லை
தாய் எனக்கு ஆனாய்! உன்னைச்
சார்வதற்கு உபயம் உண்டோ!

இராசகோட்டைச் சிற்றரசன் குடிகளுக்குச் சில உரிமைகள் தருவதாக வாக்களித்தான். பின்னர் வாக்கு மாறி அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டான். அதை எதிர்த்து அண்ணல் அறப்போர் தொடங்கினார். அறப்போர் வென்றது என்ற செய்தி கூறும் பகுதி இது.

சொன்ன சொல் தவறுவது மனிதனை விலங்கு நிலைக்குத் தாழ்த்திவிடும். நாய், பேய், தீ ஆகியவற்றிடங் கூட நற்பண்பு என்று பேரிடக்கூடிய இயல்பு உள்ளபோது, மனிதனிடம் அது இல்லாமற் போகலாமா? என்று சிந்தனை யைக்கிளறும் படலத்துக்கு இப்பாடல் பொருத்தந்தானே!

---

# 68. உய்யக் கடவேனோ?

மனத்துக்கண் மாசிலன் ஆதல் வேண்டும். மாசற்ற மனமே இறைவனை வழிபடும் சாதனம். வாய்மை பேசவே நாவைப் பெற்றுள்ளோம். அந்த வாய்மையை நாவினால் அள்ளிக் கொள்ள வேண்டும்,

தன்னைப் பாடிப் பரவுவதற்காகவே இறைவன் இசையைத் தந்துள்ளான். அந்த இசையை வளம் பெறச் செய்தார் சடகோபர். பால்ஏய் தமிழர் இசைகாரர் பக்தர் பரவும் ஆயிரம் பாடல்களை அருளியுள்ளார். அந்த அமுத இசையால் இறைவனைத் துதிக்க வேண்டும்.

அன்பால் அவன் திருவடிகளைக் கருதுதல் வேண்டும். ஆனால் நம்மிடம் இவற்றில் ஓரியல்பு கூட இல்லையே! எப்படி இறைவனை அடைந்து உய்ய இயலும்!

இந்தச் சிந்தனைகளை உள்ளடக்கியுள்ளது வீரமுழக்கப் படலத்தின் காப்பு.

> எண்ஆ சறஉனை எண்ணா தவன்அதி இதவாய்மை
> அள்நா வொடும்அருள் அண்ணா தவன்உயர்
> அருள்மாறன்
> பண்ணால் ஒருதுதி பண்ணாதவன்உறு பரிவாலே
> கண்ணா! உனதடி கண்ணாதவன் உயக்கடவேனோ?

இரண்டாம் உலகப்போர் மூண்டது. இசைவு பெறாமலே இந்தியரைப் போரில் ஈடுபடுத்தினர் அன்னியர். பாரதத்தின் நலனுக்காகவே போரில் ஈடுபடுத்தினோம் என்று பசப்பினர்.

இந்திய மக்கள் பொருமினர். வெள்ளையனே வெளியேறு என்ற வீரமுழக்கம் விண்ணதிர நாடெங்கும் முழங்கியது என்ற செய்தி கூறும் பகுதி இது.

வீரமுழக்கம் வெற்றி முழக்கமாக வேண்டுமாயின், மனத் தூய்மையும் வாய்மையும் இறை நம்பிக்கையும் வேண்டும் என்ற அண்ணலின் சிந்தனையை விளக்குமிடத்தில் அப்பண்பு களை எடுத்துக் கூறும் இக்காப்பு பொருத்தமானது தானே!

---

எண் ஆசுஅற - மனத்தின் கண் மாசுநீங்கும்படி. அள்நா - அள்ளுகின்ற நாவு. அண்ணாதவன் - சேராத வன். மாறன் - நம்மாழ்வார். பரிவால் - அன்பால். கண்ணாதவன் - நினையாதவன். உய்யக்கடவேனோ - வாழ்வது எவ்வண்ணம்?

# 69. பூவிற்குப் பாரம் அன்றோ?

பூரணமான புனிதமான வாழ்வு இறைவன்தான். அவனை எப்போதும் சிந்திக்காவிட்டாலும், ஆபத்து வேளையிலாவது அவனை அழைக்க வேண்டும். முதலை வாய்ப்பட்ட கஜேந்திரன் ஆதிமூலமே என்று அழைத்தான். அதனால் கஜேந்திராழ்வான் என்ற உயர்தனிச் சிறப்புப் பெற்றான்.

நாமோ ஆபத்தில்கூட இறைவனை அழைப்பதில்லை. விலங்காகிய யானையின் பெருமை என்னே! நம் சிறுமைதான் என்னே!

நாவைப் படைத்த பயன் இறைவன் திருப்பெயரைச் சொல்வதே! அந்தத் திருப்பெயர் இனிய கனிச்சாறு. அந்தச் சாற்றினை நாவிற்கு நல்காத நாம் பூமிக்குப் பாரந்தானே அன்றிச் சாரம் ஆவது உண்டோ?

என்ற எண்ணக் கருவைச் சுமந்து நிற்பது ஆகாமாளிகைப் படலத்தின் காப்பு.

> ''தேவிற்குட் சிறந்த நின்னைத்
> தெளிந்துமுன் அழைத்த அக் கைம்
> மாவிற்கும் எனக்கும் உள்ள
> வாசிதான் சிறிது கொல்லோ
> நாவிற்குஉன் நாமம் என்னும்
> நறுங்கனிச் சாறு நல்கேன்
> பூவிற்குப் பாரம் அன்றோ
> பூரணப் புனித வாழ்வே!''

ஆகாமாளிகையில் அண்ணல் சிறையிருந்தார். நாட்டில் எழுந்த வன்முறைக்கு அண்ணலே காரணம் என்று அன்னியர்

அடாதபழி சுமத்தினர். இதனால் மனம் வருந்திய அண்ணல், நடுவருக்கும் நடுவனாகிய இறைவன்பால் முறையிடுவதற்கு உண்ணாவிரதம் மேற்கொண்டார் என்ற செய்தி கூறும் பகுதிக்கு,

இறைவனை நம்பி, அவன் திருநாமம் கூறுவதே நம் கடமை என்னும் கருத்தமைந்த இக்காப்பு, பாலுடன் சேர்ந்த பாகாக இனிக்கின்றது.

---

தேவிற்குள் - தெய்வங்களுக்குள். கைம்மா - யானை; கஜேந்திரன். வாசி - வேறுபாடு. சிறிதுகொல்லோ - சிறிதுதானோ. நல்கேன் - தரமாட்டேன். பூவிற்கு - பூமிக்கு.

# 70. திரத்தில் நிற்க அருள் செய்கை

"அம் மறலி வஞ்சகன்காண் ஆர்க்கும் அருள் செய்யான்
நம் இளமை கண்டு நயம் புரியான் - விம்மிக்
கரைந்துருகும் போதும் கருணை புரியான்
விரைந்தறம் செய்ய விரும்பு"[1]

என்பது ஒரு பாடல். அறம் செய்ய விரும்ப வேண்டும் என்பதற்குரிய காரணம் கூறுகின்றது.

மறலியாகிய எமன் நேரிடையாகச் செயல்பட மாட்டான். வஞ்சனையாக - எதிர்பாராதவிதமாக-வந்து உயிரைக் கவர்வான். பெண்டிர் சிறுவர் என்று பாகுபாடு காட்டமாட்டான். ஐயோ! நான் இளமைப் பருவத்தினன் இன்னும் சில காலம் வாழவிடு என்றால், நீதி வழங்க மாட்டான். விம்மி விம்மி அழுதாலும் கருணை காட்டமாட்டான். ஆதலால் மற்றறிவாம் நல்வினை; யாம் இளையம் என்னாவது கைத்துண்டாம் போதே கரவாது அறம் செய்தல் வேண்டும் என்பது இப்பாடலின் கருத்து.

உலகத்து உயிர்கள், வலிமை மிக்க யமன் எடுத்து விளையாடும் காற்றாடி போல்வன. காற்றாடியின் கீழ்ப்பகுதி மேலும் மேற்பகுதி கீழுமாக மாறி மாறி வரும். அதைப்போல் இறப்பும் பிறப்பும் மாறி மாறி வரும். அந்தப் பிறப்பிறப்புச் சுழலில் நாம் மறுகிச் சுழல்கின்றோம். அந்தச் சுழலைக் கடந்து இறைவன் கைங்கரியமாகிய நிலையான வாழ்வு

---

1. அறம்செய விரும்பு என்ற ஆத்திசூடியின் எழுத்துக்கள் நிரல்பட இப்பாடலில் ஆங்காங்கே அமைந்திருப்பதைக் காணலாம்.

பெறுதல் வேண்டும். இதற்கு இறைவன் திருவருளே துணை யாவது.

என்னும் கருத்தமைந்தது அன்னை பிரிவுப் படலத்தின் காப்பு.

உரத்தின் மிக்க ஒரு பெருங் கூற்றுவன்
கரத்தின் எற்றக் கறங்கும் கறங்குபோல்
வரத்தில் போக்கில் மறுகிச் சுழலுவேன்
திரத்தின் நிற்க ஐயா அருள் செய்வையே!

ஆகாமாளிகையில் சிறைப்பட்ட அண்ணலுக்குத் துணையா யிருந்த அன்னை கத்தூரிபா அமரத்துவம் பெற்றுவிட்ட செய்தி கூறும் இப்பகுதிக்குக் கூற்றுவனை நினைவுறுத்தி உடலின் நிலையாமை கூறும் இது ஒளி தருகின்றது எனலாம்.

---

உரம் - வலிமை. கூற்றுவன் - எமன். எற்ற - எற்றுவதால். கறங்கும் - சுழல்கின்ற. கறங்கு - காற்றாடி. வரத்து - பிறவி. போக்கு - மரணம், திரத்தில் - அசையாமல் நிலையாக.

# 71. வாடும் பயிருக்கு மாமழை

அடிகள் சிறுவயதில் பயந்த இயல்புடையவராக இருந் தார். இருட்டறையில் புகவே அஞ்சுவார். பேய் பிசாசு வரும் என்ற பயத்தால் இருட்டில் செல்லவே மாட்டார். அன்னை கஸ்தூரிபாய் இதற்கு நேர்மாறான இயல்புடையவர். இருட்டுக்கோ, பேய்க்கோ அஞ்சாமல் எந்நேரமாயினும் எங்காயினும் போய் வருவார். இது கண்டு அடிகள் நாண மடைவார்.

அடிகளின் இந்த அச்ச உணர்வை அறிந்த அரம்பை என்ற வேலைக்காரி, இராமநாமம் உச்சரித்து வந்தால், அஞ்சாமை வரும் என்று போதித்தாள். அதன்படி இராமநாமம் உச்சரித்து அச்சத்திலிருந்து விடுபட்டார் அடிகள்.

இராமநாமத்தின் பெருமை யுணர்ந்து ஓயாமல் உச்சரித்துப் பழகிய அண்ணல், அமரராகும்போதும் ஹேராம் என்று திருவாய் மலர்ந்தருளினார்.

வாடிய பயிருக்கு ஒரு மாமழைபோல உயிர்களுக்கு உதவுவது இராமநாமம். மூடியிருக்கும் அறியாமையிருளை நீக்கும் முழுச்சுடராக இருப்பதும் அதுவே. நாடிய பொருள் கைகூடும் என்றான் கம்பன். கேட்டதெல்லாம் கொடுப்பது கற்பகந்தானே! விரும்பியதெல்லாம் தருவதனால் இராம நாமம் ஒரு கற்பகமேயாகும் என்று இராமநாமத்தின் பெருமை கூறும் பாடல் கடைதிறப்புப் படலத்தின் காப்பு.

வாடும் பயிருக்கொரு மாமழையோ
மூடும் தமம் நீக்கும் முழுச்சுடரோ
நாடும் பொருள் நல்கிய கற்பகமோ
நீடும்சிலை ராமன் நெடும் பெயரே

உரிமைப் போர் உச்சத்தைத் தொட்டது. அன்னியர்க்கினி அடிமை செய்யோம் என்று ஒன்றுபட்டனர் மக்கள். மக்களின் எழுச்சி கண்டு நடுங்கிய அன்னியர் ஒரு வகையாக விடுதலை தர ஒப்பினர். விடுதலைக்கு முன்னோடியாக இடைக்கால அரசு அமைந்தது.

அன்னியரின் விடுதலை அறிவிப்பு வாடிய பயிருக்கு மழை யாக, அடிமையிருளுக்கு ஒளியாக, விரும்பியது தரும் கற்பக மாக விளங்கியது என்னும்படி மகிழ்ச்சியையூட்டும் செய்தி தரும் பகுதிக்கு இராமநாமத்தின் பெருமை கூறும் இப்பாடல் சாலப் பொருத்தந்தானே!

---

தமம் - இருள். நல்கிய - தருவதற்கு. சிலை - வில்.

# 72. நினைவிலே நீ இருந்தருள்வாய்!

ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும் விட்டு அயோத்தி வந்தான் என்பது கம்பர் வாக்கு. ஆலிலையில் துயின்ற திருமாலும் மலரிலே வீற்றுள்ள பிரமனும் கைலை மலையில் வீற்றுள்ள சிவபிரானும் ஆகிய மூவரும் ஒருவனாக வந்த திருவுருவமே இராமன் என்பது கம்பர் கருத்து.

பொருப்பிலே இருந்து கடலிலே கடந்து பூவிலே அமர்ந்த மெய்ப் பொருள் என்று அதையே மாற்றிக் கூறலாமே!

நெருப்பிலே விழுதல் நீரிலே அமிழ்தல் போன்ற துன்பங்கள் நேருங் காலத்தும் இறைவனை நெஞ்சத்தில் நிறுத்தல் வேண்டும்.

விருப்பு வெறுப்பு ஆகிய இருவேறு இயல்புகளையும் சமமாகக் கருதும்படி மனத்தைப் பழக்குதல் வேண்டும்.

இரும்பைக் காட்டிலும் வலிய மனத்திலே இறைவனைக் குடிவைக்கவேண்டும். அவன் குடியிருப்பானாகில் நம் நன்மையில் நாட்டம் வைப்பான்.

இத்தகைய பொருள் விரிவு தரும் இப்பாடல் நவகாளிப் படலத்தின் காப்பு.

> "நெருப்பிலே விழினும் நீரிலே படினும்
> நினைவிலே நீஇருந் தருள்வாய்!
> விருப்பிலே மிக்க வெறுப்பிலே சமமாம்
> விதத்திலே எனைநிறுத் திடுவாய்!

இருப்பிலே வலிய மனத்திலே இருந்துஎன்
இதத்திலே நாட்டம்வைத் திடுவாய்
பொருப்பிலே இருந்து கடலிலே கிடந்து
பூவிலே அமர்ந்தமெய்ப் பொருளே!

ஜின்னா விஷத்தைக் கக்கியதால், நவகாளியில் சமயக் கலகம் மூண்டது. கொலைகளும் கொள்ளைகளும் நடந்தன. இக்கொடுமை தீர்ப்பேன் என்று அடிகள் அங்கு விரைந்தார்.

சமய ஒற்றுமை காக்கவேண்டுமாயின், பல தெய்வங்களும் ஒன்றே என்ற எண்ணம் வேண்டும். விருப்பு வெறுப்புக்கு இடம் தரலாகாது. சமநிலை தவறலாகாது. நெருப்பிலே விழுதல் முதலிய துன்பங்கள் நேர்ந்தாலும் நினைவிலே இறைவனை வைக்கவேண்டும் என்பன போன்ற சிந்தனைகளுக்கு ஊற்றம் தரும் இப்பாடல் நவகாளிப் படலத்துக்கு இன்றியமையாததாகின்றது.

# 73. நான் அது நயத்தல் செய்யேன்

பலன் கருதி இறைவனை வழிபடுவது, இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும் அறவிலை வணிகமே ஆகும்.

கேட்டது கிடைக்கும் என்ற விருப்பத்தாலேயே உலகினர் இறைவன் உறவினை விரும்புகின்றனர். மற்றெல்லா வகையிலும் உலகுடன் ஒத்துவாழ வேண்டிய நாம், பலன் கருதி வழிபடுவது என்பதை மட்டும் உடன்பட்டு வாழலாகாது.

பாட்டினால் இறைவன் புகழைப் பாடும் இயல்பு ஒன்றே நாம் விரும்பும் பயன் ஆகும். வேறு ஒன்றும் விரும்புதல் கூடாது.

இறைவன் மாசில்லாத இன்ப வாழ்வாக உள்ளவன். அவனைக் கருதினாலே அந்த இன்ப வாழ்வு தானாகவே நமக்குக் கிட்டும். அப்படியிருக்கையில் அவனிடம் ஏதாவது அற்பப் பொருளை விரும்புவது, எல்லாம் தரும் கற்பகத்திடம் சென்று கோவணம் இரப்பதையே ஒக்கும்.

இவ்வாறு எண்ணும்படி உள்ளத்தைத் தூண்டுவது விடுதலைப் படலத்தின் காப்பு.

கேட்டது கிடைக்கும் என்றுஉன்
கேண்மையை நயத்தல் இந்த
நாட்டது பண்பாம் என்றால்,
நான்அது நயத்தல் செய்யேன்.
பாட்டது கொண்டு நின்சீர்
பரவிடும் பான்மை ஒன்றே
வேட்டது மற்றொன் றில்லை.
விமலஆ னந்த வாழ்வே!

நாட்டுக்கு விடுதலை வந்தது. தலைநகர் விழாக்கோலம் பூண்டது. அண்ணல் அவ்விழாவில் பங்கு பெறாமல், இனக் கலவரமாகிய நெருப்பை அணைப்பதற்கு நவகாளிக்கு விரைந்தார். பாடுபட்டுப் பெற்ற விடுதலையில் பங்கும் பயனும் பெறாமல் தொண்டே பயனாகக் கருதிய அடிகளின் மனநிலையைக் காட்டும் கண்ணாடி இப்பாடல்.

---

கேண்மை - உறவு. நாட்டது - நாட்டினுடைய. பண்பு - இயல்பு. நயத்தல் - விரும்புதல். பாட்டுஅது - பாடல். பரவிடும் - துதிக்கும். பான்மை - இயல்பு. வேட்டது - விரும்பியது.

# 74. எம்மான் நெஞ்சுரம் கண்டேன்

செயற்கரிய செய்வர் பெரியர் என்பர் வள்ளுவர். செயற்கரிய என்பது யாது? மனம் வேண்டியவாறே அதனைப் பொறி வழிகளால் புலன்களில் செலுத்தாமை என்பது பரிமேலழகர் விளக்கம். சிந்தையை அடக்கியே சும்மா இருந்திடும் திறம் அரிது என்பர் தாயுமானவர். புலனடக்கம் உள்ளவரே பெரியர் என்று இதன்மூலம் அறிகின்றோம்.

இளமையில் காமவசப்பட்டிருந்த கரம் சந்திர மோகன தாசர், புலனடக்கம் கைக் கொண்ட பின்பு மகாத்மா (பெரியர்) ஆனார்.

மனைவி அருகில் இல்லாதபோது, ஒருவன் புலனடக்கத்துடன் இருப்பதாகக் கூறுவது வெற்றுரையேயாகும். இளம் பருவ மனைவி நிழல்போல் அருகில் இருக்கையில் பிரமசரிய (மாணி) விரதத்தில் மனத்தை வைத்தார் அடிகள். அதில் வெற்றியும் கண்டார்.

வேறு சிலர் மூப்படைந்த பிறகும், மனைவியை இழந்த பின்னும் வெவ்விய காமத்தீயிலிருந்து விலகாமல், அதிலேயே வீழ்ந்து வேகின்றார்களே! ஐயோ! அந்தத் தீயின் தாபம் தீரும்படி இறைவன் திருவடி நிழலை இவர்கள் பெறுவதற்கு வேறு உபாயம் உண்டோ?

இச்சீரிய கருத்தைச் சுமந்து நிற்பது தலைநகர்ப் படலத்தின் காப்பு.

> ‘‘மனைவிதம் அருகி ருந்தும்
> இளமையில் மாணி நோன்பில்
> நினைவினை நிறுத்தும் எம்மான்
> நெஞ்சுரம் கண்டேன், ஐயா!

வினைவிளை வாலே மூத்தும்,
வெய்யவெங் காம வெந்தீத்
தனைவில காது வேவேன்
தாள்நிழல் பெறுவ துண்டோ?"

பாகிஸ்தானில் இந்துக்களை முகமதியர் கொடுமைப் படுத்தினர். இந்துக்கள் பல இலட்சம் பேர் தலைநகரில் அடைக்கலம் புகுந்தனர். தில்லியில் இந்துக்கள், முகமதியரைப் பழிக்குப்பழி வாங்கினர்.

முகமதியர் தவறு செய்தால் நாமும் தவறு செய்யலாமா? என்று மக்களை நல்வழிப்படுத்தினார் அடிகள். ஆயினும் வன்முறை நிற்கவில்லை. கொடுமை நிற்கும் மட்டும் உண்ணாவிரதம் மேற்கொள்வேன் என்றார் அடிகள். அண்ணலின் தியாகப் பெருவேள்வி கண்ட இரு சமயத்தவரும் வன்முறையில் இறங்குவதில்லை என்று உறுதி கூறினர். பாக்கித்தான் அமைச்சரும் உறுதிமொழி தந்தார். உண்ணா நோன்பு நின்றது.

வன்முறைத் தீயை அவிப்பதற்குத் தன்னுயிரையே பணயம் வைத்த செயற் கருஞ் செயலை விளக்கும் பகுதிக்குச் செயற்கரிய செயலாகிய புலனடக்கத்தைச் சிறப்பிக்கும் இப் பாடல் சிறப்புச் சேர்க்கின்றது.

---

மாணிநோன்பு - பிரமசரிய விரதம், மூத்தும் - மூப் படைந்தபின்னும்.

# 75. பந்தனை கடந்து உய்யப் பரிவு கூர்குவாய்!

இறைவன் ஒருவனே குறைவிலா நிறைவுடையவன். அவன் அன்பைப் பெறுவதற்கு அனைத்துயிர்களிடத்தும் சம நிலை கொண்டு ஒழுகுதல் வேண்டும்.

ஒருவர் வந்தனை செய்தாலும் நிந்தனை செய்தாலும் சமநிலையிலிருந்து இதயம் பிறழாமல் இருக்கவேண்டும். அவ்வாறு பிறழாமலிருப்பதற்கு அவன் அருள்வேண்டும். அப்பேறு பெற்றால் நம் வினைக்கட்டுக் கழன்றுவிடும்.

அவன் அருள் பெறுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்! "நிமலமூர்த்தியே! சமநிலை பெற்று வினைக் கட்டினைக் கடந்து நின் திருவடி நிழலில் வாழ்வதற்கு நீயே அன்பு செய்தல்வேண்டும்" என்று வேண்டிக் கொள்வது ஒன்றே நாம் செய்யவேண்டியது என்ற நற் சிந்தனையை நிமிர்ந்தெழச் செய்வது உய்திப் படலத்தின் காப்பு.

வந்தனை செய்யினும் மனம்வெ றுக்கவே
நிந்தனை செய்யினும்—நிமல மூர்த்தியே!—
சிந்தனை சமநிலை திறம்பி டாமலே
பந்தனை கடந்துயப் பரிவு கூர்குவாய்!

அண்ணல் உண்ணாநோன்பு மேற்கொண்டதன் மூலம் முகமதியரின் மிருக வெறிக்குத் துணை போகின்றார் என்ற கருத்துப் பரவியது.

ஏத்திடும் தெய்வம் போல்குவர் என்னினும்
தீத்திறம்புரி தீயரை யேஇவர்
காத்திடத்துணிந் தெம்மைக்கை விட்டமை
சீர்த்தி அன்றுஎனச் சீறிநின் றார்சிலர்.

மதனலால் என்பவன் அண்ணல்மேல் குண்டு வீசினான்

புரியும் செய்கையின் புன்மையை ஓர்கிலன்
சரிஎன்று எண்ணிய தால்தவறு ஆற்றினன்
திரியும் சிந்தனைஅச் சிற்றிளை ஏற்குஉளம்
பரியும் சிந்தனைபண் பட்டிடும் சிந்தையே

என்று தன்னைக் கொல்ல முயன்றவன் பாலும் பரிவு காட்டினார் அண்ணல் என்ற செய்தி கூறும் பகுதிக்கு இக் காப்பு மிகமிகப் பொருத்தமானதாக உள்ளது.

---

திறம்பிடாமல் - மாறுபடாமல். பந்தனை - பற்று. உய - வாழ்வதற்கு. பரிவு - இரக்கம்.

# 76. உன் நாமம் சொல்வது பயிலேன்

அடிகளின் மார்பில் குண்டு பாய்ந்தது. அப்போதும் சொல்நிலை தவறாமல் ஹேராம் என்று, இறைவன் திருப் பெயரைத் தம் கற்கண்டு போன்று இனிய சொற்கள் பேசும் நாவை அசைத்தார். இது நம் காலத்தில் நடந்த உண்மைச் செய்தி. இதனால் நாம் பெறும் போதனை யாது?

புலனைந்தும் பொறி கலங்கி நெறி மயங்கி அறிவழிந் திட்டு ஐமேல் உந்தி நாச்செற்று விக்குள் மேல் வந்து உடல் பிரியும்போது, இறைவன் நாமம் அனைவருக்குமே நினைவுக்கு வாராது.

உடல் பிரியும்போது இறைவனை நினைக்காதவனுக்குப் பிறப்பு அறாது என்பது கீதையின் சாரம்.

அப்படியானால் உடல் பிரியும்போது, இறைவன் நினைவு வருவதற்கு நாம் என்ன செய்தல்வேண்டும்!

மனத்தைப் பழக்கவேண்டும். வாய்க்குப் பயிற்சி தர வேண்டும்.

விடா முயற்சியுடன் பயிலுகின்றவன் பாவம் தேய்ந்து தூயவனாகிப் பல பிறப்பில் படிப்படியாய்ச் சித்தி பெற்று மேலான கதி (முத்தி)யை அடைகின்றான் என்று கீதை பேசு கின்றது.

பழக்கமே நாளடைவில் வழக்கமாகிவிடும். வழக்கமாகி விட்டால், தானாகவே மனம் இறைவனைப் பற்றும். வாய் அவன் பேரை உச்சரிக்கும்.

இவ்வாறு பழகியமையாலேயே உடல் பிரிகையில் அடிகளின் வாய் தானாகவே ஹேராம் என்று மலர்ந்தது.

"இறைவா! உனக்கு ஆட்பட்டு உன் திருநாமம் பேசு வதற்குப் பயிலாமலுள்ள அடியேன் தடையான ஊழ் வினையை வென்று உன்னை அடைய இயலுமோ".

என்று மன்றாடுவதாக அமைந்த இப்பாடல் முத்திப் படலத்தின் காப்பு.

'உண்டுபட் டுளைந்த போதும்
குணக்கடல் இராமா என்று
கண்டுபட் டிடும்தம் நாவை
அசைத்தது கண்டும் நாயேன்
தொண்டுபட் டுன்தன் நாமம்
சொல்வது பயிலேன் ஐயா!
பண்டுபட் டிடும்ஊழ் வென்றுஉன்
பதயுகம் சேர்வ தெங்ஙன்?

மார்பில் குண்டு பாய்ந்தபோது, ஹேராம் என்று கூறிய வாறே அடிகள் உடல் சாய்ந்து முத்தியடைந்தார் என்று கூறும் பகுதிக்குப் பொருத்தமான காப்பு இது.

---

உளைந்தபோதும் - உடல் வருந்தியபோதும். குணக் கடல் - காந்தியடிகள். கண்டுபட்டிடும் - கற்கண்டு போன்ற. சொல்வது பயிலேன் - சொல்லப் பழகாமல் உள்ளேன். பண்டுபடுதல் - முன்பே பொருந்துதல். பதயுகம் - இரு பதங்கள்.

# 77. இன்னருள் விளைப்பாய்

மனமாகிய வயலில் வளரும் குணமாகிய பயிர் வளர விடாமல், கொள்ளைவன் குற்றம் என்னும் களைகள் மண்டி விடும். முதலில் அந்தக் களைகளைக் களையவேண்டும். பொறி என்னும் ஐந்து மாடுகள் புலன்கள் என்னும் பெரிய வாயால் அந்தக் குணப் பயிரை மேய்ந்து விடலாம். அதைத் தடுப்பதற்கு ஞானமாகிய வேலி போடவேண்டும்.

இவ்வாறு கண்ணும் கருத்துமாக மனவயலைப் பாது காத்துக் குணப்பயிரை வளர்த்தால், அருள் என்னும் விளைவு கிடைக்கும். அருள் விளையுமானால், (முக்திப்பேறு) இலர் ஆனோமே என்ற ஏக்கம் தீரும். அருள் விளைவுபெற ஆண்டவனே அருளவேண்டும் என்ற கருத்துக்குக் கருவூலமாக பரம பதப் படலத்துக் காப்பு உள்ளது.

புலம்எனும் பெரிய வாயால்
பொறிஎனும் புதைமாடு ஐந்தும்
நலம்எனும் குணம்மே யாமல்
ஞானமாம் வேலி கோலி
மலம்எனும் களையை நீவி
மனம்எனும் வயலை ஓம்பி
இலம்எனும் எவ்வம் தீர
இன்னருள் விளைப்பாய் ஐயா!

அண்ணல் உலக வாழ்வு நீத்து அர்ச்சிராதி வழியாகப் பரமபதம் அடைந்தமை கூறும் பகுதிக்கு, புலனடக்கம் ஞானம் முதலியவற்றால் அருள் விளைந்து முக்தி கிட்டும் என்ற கருத்தமைந்த இப்பாடல் அணி செய்கின்றது எனலாம்.

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 20 | 7 | பாடுக | பாடுக! |
| | 26 | இரா, சத்திய | சோ. சத்திய |
| 21 | 8 | ஈடுபட்டு | ஈடுபட்டுப் |
| | 20 | பொருந்துவதனை | பொருந்துவது |
| | 30 | கனாகத் | களாகத் |
| 22 | 27 | ஆன்மீக | ஆன்மிக |
| 23 | 5 | ஆன்மீக | ஆன்மிக |
| | 11 | தான் | தான், |
| 24 | 10 | வேண்டுமே | வேண்டுமே! |
| | 26 | இல்வாறு | இவ்வாறு |
| 25 | 4 | கலாமா | கலாமே |
| | 28 | மளிதருள் | மனிதருள் |
| 29 | 15 | அனாயசமாக | அனாயாசமாக |
| | 27 | கருத்து | கருத்துத் |
| 36 | 4 | என்று | என்றும் |
| 40 | 4 | அவள் | அவன் |
| 42 | 3 | அவள் | அவன் |
| 44 | 4 | அப்பகுதிகளின் | அப்படுகுழிகளின் |
| 46 | 1 | வினைப்பயனாய் | வினைப்பயனால் |
| 49 | 12 | உணர்த்துவதாகவே | உணர்த்துவதற்காகவே |
| | 21 | பெறமாட்டார் | பெறமாட்டா |
| 53 | 24 | தத்துவம் | தத்துவச் |
| 56 | 9 | அடைவது | அடைவது எளிது |
| 58 | 22 | பயன்படாது | பயன்படா |
| 59 | 11 | மலரும் | மல்கும் |

| | | | |
|---|---|---|---|
| | 22 | ஆரீயன் | ஆரியன் |
| 63 | 8 | அலமதி | அமைதி |
| 64 | 8 | என்று | என்றும் |
| | 21 | என்று | என்றா |
| 65 | 2 | செலவும் | செல்வும் |
| 67 | 10 | உயர்ந்தது | உயர்ந்து |
| | | என்பதும் | என்பது |
| 69 | 19 | என | என்ன |
| 75 | 14 | கருனையால் | கருணையாம் |
| 80 | 24 | ஆற்றல் | ஆற்றல் |
| | 25 | ட்டி | கட்டி |
| 82 | 15 | வரலுற | வரலுற்ற |
| 84 | 21 | செலவும் | செல்வும் |
| | 28 | இருப்பன் | இருப்பின் |
| 86 | 7 | நல்கியுள்ளரன் | நல்கியுள்ளான் |
| | 23 | வெயல் | வெயில் |
| 87 | 20 | காதில் | அதில் |
| 90 | 25 | யிறவி | பிறவி |
| 92 | 25 | எழும்பும் | எழுப்பும் |
| 94 | 3 | வேண்டிதில்லை | வேண்டியதில்லை |
| | 7 | வேண்டிபது | வேண்டியது |
| | 17 | அல்லாத | அல்லதை |
| | 23 | நான் | நாம் |
| 96 | 11 | கொடுமையைச் | கொடுமையை |
| 97 | 24 | பொறுக்காமல் | வெறுக்காமல் |
| 98 | 5 | அன்பு | அன்பும் |
| | 9 | அல்லாத்மா | அல்பாத்மா |
| 99 | 24 | தெரியாத | தொலையாத |
| 100 | 5 | மானல் | மானங் |
| | 7 | அந்த | அந்தத் |

| | | | |
|---|---|---|---|
| 104 | 2 | தந்தைக்கும் | தந்தைக்கும் ஓர் |
| | 21 | ஒழிக்க | த் திருத்த |
| 107 | 18 | திருவெங்கட | திருவேங்கட |
| | 26 | துர்த்ததோடு | தூர்த்ததோடு |
| 108 | 3 | மனம் | மலம் |
| 112 | 1 | வல்லார்க்கு | வல்லார்க்கும் |
| 113 | 6 | முப்ப தேழாவது | முப்பத்தேழாவது |
| 115 | 23 | நின்றோடும் | நின்னோடும் |
| | 29 | இவர் | சிலர் |
| 116 | 2 | பகைக் நின்றனரே | பகைக்கின்றனரே |
| 120 | 16 | உற்றலும் | உற்றாலும் |
| 122 | 17 | மொறிமாடு | பொறிமாடு |
| | 22 | இளையாக | இசையாத |
| 124 | 23 | திருந்த | திருத்த |
| 125 | 7 | பற்றி | பற்று |
| 126 | 9 | நம் | நாம் |
| 130 | 18 | அது | பசு |
| 133 | 14 | வதக்கமாக்கி | வழக்கமாக்கி |
| 143 | 15 | யிலைல்ல | யில்லை |
| 144 | 12 | தமதோ | தமதே |
| 146 | 19 | எமன் | ஏமன் |
| 148 | 5 | ஆண்டவரின் | ஆண்டவனின் |
| | 20 | தவத்திலும் | திவத்திலும் |
| | 21 | நம்மலழ்வார் | நம்மாழ்வார் |
| 150 | 19 | ஆப்பிரிக்களுக்கு | ஆப்பிரிக்கர்களுக்கு |
| 151 | 8 | பரமத்தின் | பரமபதத்தின் |
| 153 | 17 | பிறந்திருந்தலே் | பிறந்திருந்தால் |
| 155 | 7 | பொக்க | போக்க |
| 158 | 7 | பற்றெணாதது | பற்றொணாதது |
| 160 | 15 | இறைலன் | இறைவன் |

| | | | |
|---|---|---|---|
| | 16 | மணத்துக்கண் | மனத்துக்கண் |
| | 26 | மில்லைதோர் | மில்லதோர் |
| 167 | 14 | இருக்கலாம்? | இருக்கலாமா? |
| 169 | 12 | ராட்டினன் | ராட்டிரன் |
| 170 | 8 | நடப்பதற்கு | நடப்பதற்கே |
| | 13 | புலன்வழி | புலன்கள் வழி |
| | 27 | ராட்டினன் | ராட்டிரன் |
| | 31 | பவனன | பவனன் |
| 173 | 25 | சுடர்த்தடலே | சுடர்க்கடலே |
| 175 | 11 | சிறந் | சிறந்த |
| 177 | 2 | முனிவளோ | முனிவாளோ |
| 178 | 8 | இறை | சிறை |
| | 19 | ஆண்டு | ஆண்டுத் |
| 179 | 23 | அறிவின் | அறிவின |
| 190 | 18 | விபுதேன் | விபுதேசன் |
| 192 | 11 | அருவத்து | அருவருத்து |
| 193 | 4 | திருந்பெய | திருப்பெய |
| 196 | 6 | மற்றுறில் | மன்னுறில் |
| 202 | 14 | என்னாவது | என்னாது |
| 206 | 7 | கடந்து | கிடந்து |
| 213 | 9 | சிந்தனை | சிந்தை |
| | 10 | சிந்தனை | சிந்தை |
| 216 | 15 | புதைமாடு | புலைமாடு |